விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஆவணி 11 வெள்ளிக்கிழமை (28.08.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 252

WESTERN UNION MONEY TRANSFER உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Wastern Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும் தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளவும்
ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392
(C-1935)

# ஐ.நாவின் பரிந்துரைகளை அரசு அமுல்படுத்த வேண்டும்

## மகிந்த சமரசிங்க வேண்டுகோள்

(கொழும்பு)

2009-ம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானம் முழுமையாக அமுல்படுத்தப்படவில்லை என முன்னாள் மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்றையதினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (24ஆம் பக்கம் பார்க்க)

## முக்கிய அமைச்சுக்கள் ஜனாதிபதி வசம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில்கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு அமைய அமைக்கப்பட உள்ள தேசிய அரசாங்கத்தின் அமைச்சு பதவிகள் தொடர்பில் பல்வேறு செய்திகள் வெளியாகி வருகின்றன.

அமைச்சு பதவிகளை பகிரும் போது 24ஆம் பக்கம் பார்க்க....

## செப்ரெம்பர் 4 ஆம் திகதியன்று அமைச்சரவை பதவிப்பிரமாணம்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பிறந்த நாளில் அமைச்சரவை பதவிப்பிரமாண நிகழ்வுகளை நடத்த திட்டமிடப்பட்டிருந்தது.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 2-ம திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது பிறந்த நாளைக் கொண்டாடவுள்ளார்.

இந்த தினத்தில் தேசிய அரசாங்கத்தின் அமைச்சர்கள் பதவிப் பிரமாணம் செய்து கொள்வார்கள் என முன்னதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் மலிக் சமரவிக்கிரம தெரிவித்திருந்தார். எனினும், தற்போது செப் 24ஆம் பக்கம் பார்க்க....

## சர்வதேச விசாரணை என்பதில் மாற்றம் எதுவும் கிடையாது!

### அவைத் தலைவர் சீ.வீ.கே. உறுதி

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் உள்ளக பொறிமுறை என்று சொல்லி வருகின்ற நிலையில் வடக்கு மாகாண சபையின் நிலைப்பாடு சர்வதேச விசாரணையே. அதில் எவ்வித மாற்றமும் கிடையாது என வடக்கு மாகாணசபை அவைத் தலைவர் சீ.வீ.கே சிவஞானம் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் யப்பானிய அரசியல் விவகாரங்களுக்கு பொறுப்பான ஆலோசகர் மறிக்கோ யமமோட்டோ, சீ.வீ.கே.சிவஞானத்தை வடக்கு மாகாண பேரவை செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் மேற 24ஆம் பக்கம் பார்க்க....

## மகிந்தவுக்கு எதிரான வழக்கு வாபஸ்!

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு எதிரான வழக்கு வாபஸ்பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் மற்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. 24ஆம் பக்கம் பார்க்க....



## ஐரோ.ஒன்றிய பிரதிநிதிகள் நேற்று கிளிநொச்சி விஜயம்

(கிளிநொச்சி)

ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் நேற்று கிளிநொச்சி மாவட்டத்துக்கு விஜயம் மேற்கொண்டு, ஒன்றியத்தினால் அமைத்துக் கொடுக்கப்படவுள்ள வீட்டுத்திட்டங்கள் தொடர்பில் ஆராய்ந்துள்ளனர்.

காலை 9.30 மணியளவில் இரணைமடு குளம் அமைந்துள்ள பகுதியில் விசேட வானூர்தியில் வந்திறங்கிய குறித்த குழுவினரை, கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் வரவேற்றார். 24ஆம் பக்கம் பார்க்க....

## வினாத்தாள் திருத்தும் பணி செப்ரெம்பரில்

(கொழும்பு)

கடந்த ஆகஸ்ட் 23-ம் திகதி இடம்பெற்ற தரம் 5 மாணவர்களின பரீட்சை வினாத்தாள்களின் திருத்தம் எதிர்வரும் செப்டெம்பர் 9-ம் திகதி முதல் 14-ம் திகதி வரை இடம்பெறும் என 24ஆம் பக்கம் பார்க்க....

## சர்வதேச பிடியிலிருந்து தப்ப சிறுசிறு காணிகள் விடுவிப்பு

### மீள்குடியேற்ற குழு குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

பெருமளவிலான காணிகளை பிடித்து வைத்துக்கொண்டு சிறு சிறு பகுதிகளை மட்டும் விடுவித்துக் கொண்டு சர்வதேசத்தின் பிடியில் இருந்து தப்புவதற்கான நடவடிக்கைகளையே நல்லாட்சிக்கான புதிய அரசாங்கமும் மேற்கொண்டு வருவதாக யாழ்.வந்த ஜப்பான் அரசியல் விவகாரங்களுக்கான அதிகாரியிடம் கூறியுள்ள வலி.வடக்கு மீள்குடியேற்ற குழு இங்குள்ள மக்கள் நலம் சார்ந்து எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் குற்றம் சாட்டியுள்ளது.

ஜப்பான் அரசியல் விவ காரங்களுக்கான பொறுப்பதிகாரி மரிக்கோ யமமோடோ நேற்றையதினம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டு வலி.வடக்கில் மீள் குடியமர்த்தப்பட்ட மக்களையும் கோனப் 24ஆம் பக்கம் பார்க்க....

## விசாரணை அறிக்கையை கையளிக்க இலங்கை வரும் ஐ.நா ஆணையாளர்

(ஜெனிவா)

ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் செயிட் அல் ஹுசைன், இலங்கை தொடர்பான விசாரணை அறிக்கையை கையளிப்பதற்காக விரைவில் இலங்கை வரவுள்ளார்.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 14 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐ.நாவின் 30 ஆவது கூட்டத் தொடரில், இலங்கை தொடர்பான சர்வதேச விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்நிலையில், அதற்கு முன்னர் அதனை இலங்கை ஜனாதிபதியிடம் கையளிப்பதற்காக அவர் வருகை தரவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

இலங்கையில் இறுதிக்கட்ட போரின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றம் மற்றும் மனித உரிமை மீறல் தொடர்பான ஐ.நா. விசாரணை அறிக்கை, இமமாதம் இலங்கையிடம் கையளிக கப்படுமென எதிர்பார்க்கப்பட்ட போதும், அதனை பகிரங்கமாக வெளியிடுவதற்கு 48 மணித்தியாலங்களுக்கு முன்னரே இலங்கையிடம் கையளிப்பதாக பின்னர் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், இலங்கைக்கு வந்திருந்த தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவி ராஜாங்க செயலாளர் நிஷா பிஸ்வால், ஐ.நா பேரவையில் இலங்கைக்கு ஆதரவான தீர்மான மொன்றை முன் வைக்குமென நேற்றுமுன்தினம் த.தே.கூட்டமைப்பினருடனான சந்திப்பில் 24ஆம் பக்கம் பார்க்க....

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவியை கொலை செய்த கணவருக்கு மரணதண்டனை!

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை பகுதியில் மனைவியைக் கொலை செய்ததாகக் குற்றம் சுமத்தப்பட்ட கணவன் ஒருவருக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் நேற்று வியாழனன்று மரண தண்டனை வழங்கி தீர்ப்பளித்துள்ளார்.

கடந்த 2008 ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதி யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை பகுதியில் யேசுராசா அமுதவர்த்தனி என்பவரை கொலை செய்ததாக அவரது கணவன் சீலன் என்றழைக்கப்படும் இராசமணி யேசுராசா என்பவருக்கு எதிராக சட்டமா அதிபரினால் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கு விசாரணை நீதிபதி இளஞ்செழியன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, வழக்குத் தொடுநர் தரப்பு சாட்சியங்கள் மற்றும் எதிரி தரப்பு சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டதன் பின்னர் சட்டத்தரணிகளின் தொகுப்புரை இடம்பெற்று நேற்று 27ஆம் திகதி தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

மரணமடைந்த பெண்ணை உடைக்கப்பட்ட போத்தல் ஒன்றினால் கழுத்தில் குத்தி கொலை செய்ததாக வழக்குத் தொடுநர் சாட்சியங்கள் முன்வைக்கப்பட்டன. இந்த சாட்சியங்களை ஒப்புறுதி செய்யும் வகையில் மிக முக்கியமான ஒப்புறுதி சாட்சியமாக பிரேத பரிசோதனை செய்த வைத்திய நிபுணர் என்.சுகுந்தன் என்பவரின் சாட்சியம் அமைந்திருக்கின்றது என நீதிபதி தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்.

இறந்த பெண்ணின் உடலில் 5 காயங்கள் காணப்பட்டுள்ளன. அதில் முக்கியமானது கழுத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள வெட்டுக் காயமாகும். மற்றைய காயங்களும் வெட்டுக் காயங்களே. ஆயினும் இந்தக் காயங்கள் தாக்குதல் நடத்தப்பட்டபோது எதிர்த்துப் போராடியதனால் ஏற்பட்ட காயங்களாக இருக்கின்றன என்று வைத்திய சாட்சியத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, வழக்குத் தொடுநர் நியாயமான சந்தேகத்திற்கு அப்பால், எதிரிக்கு எதிரான கொலைக்குற்றத்தை எண்பித்துள்ளபடியால், எதிரியை குற்றவாளி என நீதிமன்றம் கண்டு, இந்த கொலைக்குற்றத்திற்கு எதிரிக்கு மரண தண்டனை வழங்கப்படுகின்றது என நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியினால் குறிப்பிடப்படுகின்ற தினத்தன்று குறிப்பிடப்படும் நேரத்தில், குறிப்பிடப்படும் இடத்தில் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படும் என்றும் நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளார். (எ-9)

## இந்துவாக வாழ்வோம் ஆன்மிக அருளுரை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகப்பெருமான் ஆலய வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மய மிஷன் நடத்தும் இந்துவாக வாழ்வோம் செயற்றிடத்தின் ஓர் அங்கமான ஆன்மிக அருளுரை வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா சுவாமிகளினால் இன்று நல்லூர் வடக்கு வீதியிலுள்ள மகேஸ்வரன் மணிமண்டபத்தில் மாலை 7.15 மணி தொடக்கம் 8.00 மணிவரை நடத்தப்படவுள்ளது. (எ-11)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நாரந்தனை சைவ மகா சபையின் வருடாந்த பொதுக் கூட்டம் நாளை சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய மண்டபத்தின் சபைத் தலைவர் வே.துரைராசா தலைமையில் நடைபெறவுள்ளது. (எ-5)

# ஆலமரத்தில் பிள்ளையார் அநுராதபுரத்தில் அதிசயம்

(வவுனியா)

அநுராதபுரம் பிரதேசத்தில் ஆலமரமொன்றில் பிள்ளையார் சிலையை ஒத்த உருவமொன்று தோன்றி அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

அநுராதபுரம் தப்போவ பகுதியில் உள்ள நூற்றாண்டுகள் பழைமையான ஆலமரம் ஒன்றிலேயே பிள்ளையாரின் சிலையை ஒத்த உருவம் வெளிப்பட்டுள்ளது.

புத்தளம் - அநுராதபுர பாதையோரமாக உள்ள இந்த "ஆலமர பிள்ளையார்" உருவம தற்போது சிங்கள - தமிழ் மக்களின் வழிபாட்டு இடமாக மாற்றம் பெற்றுள்ளது.

நூற்றாண்டுகள் பழைமைவாய்ந்த மரமொன்றில் அச்சு அசலாக பிள்ளையார் உருவம் தோன்றி இருப்பது பெரும் அதிசயம் என்பதாக அப்பகுதி மக்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.



தற்போது இந்த ஆலமரத்தின் பிள்ளையார் உருவம் அருகே உண்மையான பிள்ளையார் சிலை ஒன்றும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளதுடன், தற்காலிக கோயில் எழுப்பி வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. (எ-11)

# அரசியல் நடவடிக்கைக்கு நீதிமன்றை பயன்படுத்த வேண்டாம்

## நீதவான் எச்சரிக்கை

(கொழும்பு)

அதியுயர் நீதிமன்றத்தை அரசியல் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவதை தவிர்க்குமாறு கொழும்பு பிரதான நீதவான் கியான் பிலப்பிட்டிய, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதிநிதிகளை கடுமையாக எச்சரித்துள்ளார்.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனுக்கு எதிராக கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் ரேணுக பெரேரா என்ற அரசியல்வாதி வழக்கொன்றை தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கை அவர் நேற்று தனது சட்டத்தரணி செனரத் ஜயசுந்தர ஊடாக திரும்ப பெற்றுக்கொண்டார். அப்போதே நீதவான் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.



வழக்கை வாபஸ் பெற்ற பின்னர், நீதவான் கியான் பிலப்பிட்டிய, சட்டத்தரணி ஜயசுந்தரவிடம் கேள்வி எழுப்பினார்.

மத்திய வங்கியின் ஆளுநர் தற்போது குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளாரா? தேர்தல்கள் நெருங்கும் போது அரசியல் செயற்பாடுகளுக்காக நீதிமன்றத்தை பயன்படுத்துவதை தவிர்க்குமாறும், இல்லையொன்றால், கடும் நடவடிக்கை எடுக்க நேரிடும் எனவும் நீதவான் எச்சரித்தார். (எ-11)

# யால சரணாலயம் மூடப்படுகின்றது



(பொலநறுவை)

கடும் வரட்சியின் காரணமாக யால தேசிய சரணாலயத்தினை ஒரு மாத காலத்திற்கு மூடுவதற்கு தீர்மானித்துள்ளதாக வன விலங்குகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் அடிப்படையில் செப்டம்பர் 07ஆம் திகதி முதல் ஒக்டோபர் 06ஆம் திகதி வரை சரணாலயம் மூடப்படும் என்றும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை யாழ்ப்பாணம், திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு, பொலநறுவை, அநுராதபுரம் உட்பட்ட பல மாவட்டங்களில் தற்போது வரட்சியான காலநிலை நிலவுகின்றமை,

இலங்கையில் தற்பொழுது பருவமாற்றம் அடிக்கடி நிகழ்வதனால் வன விலங்குகள் அதிகம் பாதிப்படைவதாகவும், இதன் காரணமாக அவ்விலங்குகள் காடுகளை விட்டு குடிமனைகளுக்குள் புகுந்து கொள்வதும் அடிக்கடி நிகழ்ந்து கொள்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. (எ-11)

# போரின் வலிகளுக்கூடாக வாழ்ந்தவர்கள் தமிழர்கள்

## சிறீதரன் எம்.பி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

போரினால் நாம் தோற்றுப் போனவர்கள் அல்ல, போரின் வலிகளுக்கூடாக வாழ்ந்தவர்கள். போரின் வலிகள் எங்களை புடமிட்டிருக்கிறது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் யாழ். மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றியீட்டிய சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

பாடசாலையிலிருந்து இடைவிலகிய மாணவர்களை மீண்டும் பாடசாலையில் இணைப்பதற்கு தேவையான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு யாழ்.பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன் போது அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில்,

வறுமையில் வாழும் பிள்ளைகள்தான் தேசத்தினையும் தேசியத்தினையும் நேசிப்பவர்களாக இருப்பார்கள். அத்துடன் தேசிய இனம் தேசிய சிந்தனை என்பன இன்னும் உங்களிடம் அதிகமாக வளரும். எனவே துன்பங்களை கண்டு மிரளாமல் குமுறி எழ வேண்டும். நாம் போரின் வலிகளுக்குள் வாழ்ந்தவர்கள். அதிலிருந்து எவ்வாறு எழுந்து நடப்பது என்கின்ற எண்ணங்களை நாம் கொண்டிருக்க வேண்டும்.

எமது வாழ்க்கை எமக்குத் தந்த அடையாளத்தையும் பாடத்தினையும் சிறுவர்களாகிய நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டும். அதனூடாக நம்பிக்கையினையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். பலவிதமான இடைஞ்சல்களுக்கு மத்தியில் சிறுவர்கள் புறந்தள்ளப்பட்டுள்ளார்கள். தாய் தந்தையரின் இழப்புகள், மறுமணம் போன்றவை பிள்ளைகளை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்துகின்றது.

அண்மையில் நடைபெற்ற வித்தியாவின் படுகொலையினைத் தொடர்ந்து பல துஷ்பிரயோகங்கள் நடைபெற்றுள்ளன.



எனவே வளரும் சந்ததியினராகிய நீங்கள்தான் அநியாயங்களையும் துன்பங்களையும் கண்டு குமுறி எழுவீர்கள்.

எனவே இந்த நிலையுடன் நின்றுவிடாது கல்வியை கற்று இளைய சமுதாயத்தை முன்னேற்றப் பாதையில் வழிநடத்த பெற்றோர்கள் முன்வரவேண்டும் என குறிப்பிட்டார். (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோத்தா வெளிநாடு செல்ல விதிக்கப்பட்ட தடை நீக்கம்

(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு தற்காலிகமாக வெளிநாடு செல்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை காலி நீதிமன்றத்தால் நேற்று நீக்கப்பட்டுள்ளது.

காலி துறைமுகத்தில் கடந்த ஜனவரி மாதம் 18 ஆம் திகதி கண்டுபிடிக்கப்பட்ட மிதக்கும் ஆயுதக் களஞ்சியம் குறித்த விசாரணைகளுக்கு பாதிப்பு ஏற்படலாம் என இரகசியப் பொலிஸார் நீதிமன்றத்தில் விடுத்த கோரிக்கைக்கு அமையவே குறித்த தடையுத்தரவு கோத்த பாயவுக்கு பிறப்பிக்கப்படடிருந்தது.

குறித்த தடையுத்தரவு காலி நீதிமன்றத்தால் கடந்த மார்ச் மாதம் 9 ஆம் திகதி விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)



இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றினை மேற்கொண்டுள்ள அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் நிஷா பிஸ்வால் காணாமற் போன ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிய கொடவின் மனைவியை நேற்றுமுன்தினம் சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

## சந்திரிகாவிற்கு முக்கிய பதவி



முன்னாள் ஜனர்திபதி சந்திரிகா பண்டாரநாயக்கவிற்கு புதிய அரசாங்கத்தில் முக்கிய பதவியொன்று வழங்கப்படவுள்ளதாக கொழும்பு ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கம் தொடர்பிலான புதிய நிறுவனமொன்று நிறுவப்பட்டு அதன் பொறுப்பு சந்திரிகாவிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின கோரிக்கைகளையும் கருத்திற் கொண்டு ஜனாதிபதி இந்த புதிய நிறுவனத்தை ஆரம்பிக்கவுள்ளார்.

கடந்த 25ஆம் திகதி ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இந்த விடயம் குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் சந்திரிகாவிற்கு பதவி வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

## பிரகீத் காணாமற்போன சம்பவம் குறித்த விசாரணைகளுக்கு பூரண ஒத்துழைப்பு

### இராணுவம் அறிவிப்பு

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமற்போன சம்பவம் தொடர்பிலான விசாரணைகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கப்படும் என இராணுவம் அறிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் கிருசாந்த டி சில்வா இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளுக்கு முழுஅளவில் ஆதரவளிக்கப்படும்.

விசாரணை நடத்தப்பட்டு வருவதனால் அது குறித்து கூடுதலாக கருத்து எதனையும் வெளியிட முடியாது.

விசாரணைகள் நிறைவடைந்து சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதன் பின்னரே சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இராணுவ உத்தியோகத்தர்கள் தொடர்பில், இராணுவம் நடவடிக்கை எடுக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

பிரகீத் எக்னெலிகொட காணாமற்போன சம்பவம் தொடர்பில் ஐந்து இராணுவ உத்தியோகத்தர்கள் இதுவரையில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சிறுவர் துஷ்பிரயோகத்தினை கட்டுப்படுத்த குழு நியமனம்

சிறுவர் துஷ்பிரயோகத்தினை கட்டுப்படுத்துவதற்கு, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால், நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

16 வயதுக்கு கீழ்பட்ட சிறுவர்களுக்கெதிராக, துஷ்பிரயோக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் குற்றவாளிகளுக்கு, முறையான வகையில் தண்டனைகளை பெற்றுக் கொடுக்க, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் புதியகுழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த,

இச்சபையின் அதிகார தலைவர் நடாஷா பாலேந்திரன், வயதுக்கு வராத சிறுவர்களிடம் மேற்கொள்ளப்படுகின்ற சிறு துஷ்பிரயோக நடவடிக்கைகளும், சட்டக் கோவையின் பிராகரம், தண்டனைக்கு உள்வாங்கப்படும் என்றார்.

இருப்பினும், சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு எதிராக கொடுக்கப்படுகின்ற தண்டனைகள் போதுமானதாக இல்லை எனவும், இத்தகைய சூழ்நிலைக்கான காரணங்களை கண்டறியவே இப் புதிய குழு அமைக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

சிறுவர் துஷ்பிரயோகம் மேற்கொள்ளுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், இதற்கான தண்டனைகள் மற்றும் பரிந்துரைகளை இக்குழுவின் மூலம் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு, எதிர்காலத்தில் அனுப்பி வைக்கப்படும் எனவும் தெரிவித்தார். (இ-7)

## சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு இன்று கூடுகிறது

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு இன்று கூட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விசேட கூட்டமாக இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளை பொறுப்பேற்றுக் கொள்ளுதல் உள்ளிட்ட தற்போதைய அரசியல் சூழ்நிலைமைகள் தொடர்பில் இந்தக் கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மத்திய செயற்குழுவின் அனைத்து உறுப்பினர்களும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ-7)

## தேசிய அரசாங்கம் குறித்து இணக்கம்

சிநேகபூர்வமான பேச்சுவார்த்தையின் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குமிடையில் தேசிய அரசாங்கம் நிறுவுவது தொடர்பில் இணக்கம் ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் மலிக் சமரவிக்கிரம தெரிவித்துள்ளார்.

அமைச்சுப் பதவிகளை எதிர்பாராது தாய் நாட்டைக் கட்டியெழுப்புவதே எமது பிரதான நோக்கமாகும். ஆகையால் பல்வேறு தியாகங்களுக்கு மத்தியில் இரண்டு தரப்புக்களும் தேசிய அரசாங்கத்தை நிறுவுவதற்கு முன்வந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதியதொரு அமைச்சரவை மற்றும் பாராளுமன்றத்தை கொண்டு 60 மாதங்களில் புதிய நாட்டை உருவாக்குவோம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேசிய அரசாங்கம் நிறுவுவதில் ஏற்பட்டுள்ள சர்ச்சை தொடர்பில் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## சம்பூரில் மீள்குடியேறியோருக்கு உதவ உலக உணவுத் திட்டம் முன்வந்துள்ளது

(கொழும்பு)

சம்பூரில் அண்மையில் விடுவிக்கப்பட்ட பிரதேசத்தில் மீளக் குடியேறியவர்களுக்கு உலர் உணவு மற்றும் நிவாரண உதவிகளை வழங்க உலக உணவுத்திட்டம் முன் வந்துள்ளது.

இலங்கையின் உள்நாட்டு யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்னர் கடந்த 2012ஆம் ஆண்டு உலக உணவுத்திட்டம் தனது செயற்பாடுகளை நிறுத்திக் கொண்டிருந்தது.

இது ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஒரு துணை அமைப்பாகும்.

இந்நிலையில் அண்மையில் யாழ்ப்பாணம் மற்றும் சம்பூரில் மீளக்குடியேறியுள்ளவர்களுக்கு ஒன்றரை மாத காலம் வரையான உலர் உணவு மற்றும் நான்கு மாதங்கள் வரை மீள்குடியேற்ற நிவாரண நிதியும் வழங்க உலக உணவுத்திட்டம் நடவடிக்கை எடுத்துள்ளது.

சம்பூர் அகதிகள் தொடர்பில் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹபிஸ் நஸிர் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக யாழ்ப்பாண அகதிகளுக்கு சேர்த்து இந்தச் செயற்றிட்டம் விரிவுபடுத்தப்படவுள்ளது.


இத்திட்டத்தின் கீழ் ஆயிரதது 428 குடும்பங்கள் பயன் பெறவுள்ளன.

யாழில் ஆயிரத்து 194 மற்றும் சம்பூரில் 234 குடும்பங்களும் அண்மையில் மீள் குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்டைதீவு திருவெண்காடு சித்தி விநாயகர்

# ஆலய தேர்த் திருவிழா சிறப்புமலர்- 28.08.2015



## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி



சிவநேயச் செல்வர்களே!

சைவமும் தமிழும் செழுமையுறும் மண்டைதீவுப் பதியில் இன்று திருவெண்காட்டு சித்தி விநாயகர் சித்திரத்தேரில் பவனி வருவது நமக்கெல்லாம் மகிழ்வைத் தருவதாகும்., பல்வேறு இன்னல்களைச் சந்தித்த மண்டைதீவு மக்கள் எத்தனை துன்பம் வந்தபோதிலும் திருவெண்காடு சித்திவிநாயகன் மீது கொண்ட அளவு கடந்த அன்பை இவ்விழா உணர்த்தி நிற்கின்றது.

விநாயகரின் திருவருளும் அடியார்களின் பக்திப் பிரவாகமும் சேர்ந்து தேர்த் திருவிழா சிறப்புற நல்லாசி கூறுகின்றேன்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாச்சார்ய சுவாமிகள், ஆதீன குருமுதல்வர்,
நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்.

## சின்மய மிஷன் சுவாமிகளின் ஆசிச் செய்தி



மண்டைதீவு திருவெண்காடு திருவருள்மிகு சித்தி விநாயகப் பெருமானுக்கு இன்று தேர்த்திருவிழா இடம் பெறுவது நம் எல்லோருக்கும் ஆனந்தத்தைத் தருவதாகும்.

சித்தர்கள் வாழ்ந்த மண்டைதீவுப் பதி சைவப் பண்பாடு நிறைந்த புண்ணியபூமி.

இவ்வூரில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் திருவெண்காட்டு சித்தி விநாயகப் பெருமான் மண்டைதீவு மக்களின் மனங்களில் நீக்கமற நின்றந்துள்ளார்.

திருவெண்காட்டுப் பெருமான் தேரேறி வந்து திருவருள் பாலிக்க வேண்டி ஆசி கூறுகின்றோம்.

ஜாக்கிரத சைதன்ய சுவாமிகள்
வதிவிட ஆச்சார்யார்
சின்மய மிஷன்
யாழ்ப்பாணம்.

## தேர்த் திருவிழா

சங்கற்பம் :
காலை 6.00 மணி
விசேட பூசை :
காலை 7.45 மணி
வசந்தமண்டபப் பூசை :
காலை 8.15 மணி
தம்பபூசை :
காலை 9.00 மணி
தேரில் ஆரோகணம் :
காலை 10.30 மணி

## ஆலய வரலாறு

மண்டைதீவு மையப்பகுதியில் அமைந்துள்ள திருவெண்காடு எனும் குறிச்சி அக்காலத்தில் பற்றைகளும் திருக்கொன்றை, வேம்பு முதலிய மரங்களும் அடர்ந்த காட்டுப் பகுதியாகத் திகழ்ந்தது. இக்காட்டில் ஒரு பெரிய ஆலய விருட்சமும் காணப்பட்டது. இக்கிராமத்தின் வடபகுதியில் வசித்த மக்கள் தென்பகுதிக்கு இக்காட்டின் ஊடாகவே சென்று வந்தார்கள். அவர்கள் சென்ற இப்பாதை அந்த ஆல விருட்சத்தின் அருகாமையில் அமைந்திருந்தது.

ஒருநாள் மாலைநேரம் ஐயம்பிள்ளை உடையார் இப்பாதை வழியாகச் சென்று அவ் ஆலய விருட்சத்தைக் கடந்து கொண்டிருக்கையில் தன்னைப் பின் பக்கத்தினால் ஏதோ ஒன்று பிடித்து இழுப்பது போன்ற பிரமை அவருக்கு ஏற்பட்டது. அவர் திணுக்குற்றுத் திரும்பிப் பார்த்தபோது ஆலய விருட்சத்தின் கீழ் பெரிய வெள்ளை யானை ஒன்று அவரை நோக்கி தன் துதிக்கையை நீட்டிய வண்ணம் நின்றது. இதைக் கண்ணுற்ற ஐயம்பிள்ளை உடையார் ஆச்சரியப்பட்டார். இதன்போது யானை ஆலமரத்தின் மறுபக்கம் சென்று மறைந்து விட்டது.

இச்சம்பவம் அவருக்கு ஓர் அதிசயமாகவும் மிகுந்த பயமாகவும் இருந்தது. எனினும் அவ்யானையைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலுடன் அச்சுற்றாடலில் தேடினார். ஆனால் அவரால் யானையை மீண்டும் காணமுடியவில்லை. அவர் இச்சம்பவத்தை தனது உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் தெரிவித்து அவர்களுடன் கலந்தாலோசித்தார்.

அவர்கள் எல்லோரும் பிள்ளையார்தான் இவ்வாறு காட்சி அளித்தார் என்ற கருத்தைக் கூறினார்கள். இதன் காரணமாகவே அவர் அவ்வாலய விருட்சத்தின் அருகில் பிள்ளையார் ஆலயத்தை அமைத்தார். அதுவே திருவெண்காடு சித்தி விநாயகர் ஆலயமாகச் சிறப்புற்று விளங்குகின்றது.

18 ஆம் நூற்றாண்டில் அமைக்கப் பெற்ற வரலாற்று பெருமைமிக்க இவ்வாலயத்தில் இன்று சித்திரத்தேரில் விநாயகன் வீதியுலா வரும் அற்புதம் நாம் செய்த தவப் பேறேயாகும். திருவெண்காடு சித்தி விநாயகன் தேரேறி வருகின்ற இந்நாளில் நாமும் அவன் திருப்பாதம் தொழுது இன்புறுவோமாக.

பொ.வி.திருநாவுக்கரசு, ஆலய தர்மகர்த்தா.

## திருவெண்காட்டில் திருத்தேர் காண்போம்

சைவமும் தமிழும் உயர் பண்பாடும் என்றும் குறையாது, மண்டைதீவில் வீற்றிருந்து அருளாட்சி புரியும் திருவெண்காடு சித்திவிநாயகர் ஆலயத்தின் மஹோற்சவம் வெகு சிறப்பாக நடைபெறுவது இறைவனின் திருவருளேயாம். மக்கள்பட்ட துன்பங்கள் விலகி இன்பமயமான சூழ்நிலை தோன்ற சித்திரத் தேரில் திருவெண்காடு விநாயகன் வலம்வரும் அற்புதக் காட்சி அமைகிறது.

இடப்பெயர்வுகள், சொத்து இழப்புகள் என்ற பல்வேறு துன்பங்களை மண்டைதீவு மக்கள் கடந்த காலங்களில் சந்தித்த போதிலும் அவர்கள் திருவெண்காடு சித்தி விநாயகர் மீது கொண்ட பக்தியில் இம்மியும் மறையேற்பட்டதில்லை.

தாம் செய்கின்ற எல்லா செயல்களிலும் திருவெண்காடு சித்தி விநாயகனை நினைந்து கொள்ளும் அளவில் அவனுடைய அருளாட்சி எங்கள் அனைவரையும் பரிபாலித்துவருகிறது.

வெண்காட்டுப் பெருமானின் திருத் தேர் பவனியை நாம் அனைவரும் கண்டு பெரும் பேறு அடைவோமாக.

இரத்தினசபாபதி யோகநாதன்
(இந்திரன்)
ஆலய தர்மகர்த்தா

## மஹோற்சவ பிரதம குருவின் ஆசிச் செய்தி



சைவமும் தமிழும் உயர் பண்பாடும் என்றும் குறையாது மண்டைதீவில் வீற்றிருந்து அருளாட்சி புரியும் திருவெண்காடு சித்திவிநாயகர் ஆலயத்தின் மஹோற்சவம் சிறப்பாக நடைபெறுவது இறைவனின் திருவருளேயாம். மக்கள் பட்ட துன்பங்கள் விலகி இன்பமயமான சூழ்நிலை தோன்ற சித்திரத்தேரில் திருவெண்காடு விநாயகன் வலம் வரும் அற்புதக்காட்சி அமைகின்றது.

இடப்பெயர்வுகள், சொத்து இழப்புக்கள் என்ற பல்வேறு துன்பங்களை மண்டைதீவு மக்கள் கடந்த காலங்களில் சந்தித்த போதிலும் அவர்கள் திருவெண்காடு சித்தி விநாயகர் மீது அளவு கடந்த பக்தி கொண்டிருந்ததை நினைக்கும் போது திருவெண்காடு விநாயகனின் பெருமை புலப்படும். எத்தனையோ சிரமங்களுக்கு மத்தியிலும் இத்தேர் மஹோற்சவத்தை சிறப்புற நடத்தும் ஆலய அறங்காவலர்களுக்கும் உபயகாரர்களுக்கும் ஊர் மக்களுக்கும் விநாயகனின் திருவருள் கிடைக்க வேண்டி ஆசி கூறுகின்றேன்.

சிவஸ்ரீ ம.பிரபாகரக் குருக்கள்
(மஹோற்சவ பிரதம குரு)

## குரு பீடாதிபதியின் ஆசி உரை




திருவெண்காடு திவ்ய பதியில் வீற்றிருக்கும் சித்திவிநாயகப் பெருமானின் பெருந்திருவிழாவின் இரதோற்சவம் இன்றாகும். 1773 ஆம் ஆண்டு வெள்ளை யானை வடிவில் தோன்றி திருவெண்காட்டில் ஆலமர நிழலில் குடியமர்ந்து அருள் சுரக்கும் ஆனைமுகனுக்கு இன்று பெருவிழா பொலிவுற நடைபெறுகின்றது.

தர்மகர்த்தாக்களாகத் திகழும் திரு.பொ.வி. திருநாவுக்கரசு மற்றும் திரு.இரட்ணசபாபதி யோகநாதன் அவர்களும் அவர்கள் குடும்பத்தினரும் பிள்ளையார் மீது கொண்ட அன்பு மிகப்பெரியது. இவர்களைப்போல் இப்பதிவாழ் மக்களும் அன்பும் பக்தியும் உடையவர்களாக திகழ்கின்றார்கள். அதனால் திருவிழா மிகமிக சிறப்பாக நடைபெற்றுவருகின்றது. தர்மகர்த்தாக்கள், அவர் குடும்பத்தினர், விழா உபயகாரர்கள், அன்னதானத்தினர், தொண்டர்கள், இளைஞர்கள், கலைஞர்கள், சமய சொற்பொழிவாளர்கள், அடியார்கள் அனைவருக்கும் திருவிழாவின் திருவருள்சிந்திக்க விநாயகரை வேண்டி ஆசிர்வதிக்கின்றேன்.

இந்திரலோகத்து பெருவிழாவாக நடைபெறும் விநாயகர் மகோற்சவத்தின் அருளால் அனைவரும் சகல செல்வங்களோடு வாழ திருவெண்காடு விநாயகரை வேண்டி ஆசிர்வதிக்கின்றேன்.

வித்தியாசாகரர் சிவஸ்ரீ சபா.வாசுதேவக்குருக்கள்
குரு பீடாதிபதி, வீணாகான குருபீடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பளை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
## பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பம் கோரல்

01. பதவி. குறியீட்டு இல : பொதுமுகாமையாளர் 101/8
சம்பள அளவுத் திட்டம் : 11200 - 140X10 - 150X10 – 14100.00 (66/2006 ன் படி)
**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் :**
அ. கூட்டுறவு ஊழியர் 09வது சம்பளத் திட்ட முகாமை அல்லது மேற்பார்வை மட்டத்திலான பதவியில் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் 10வது சம்பளத் திட்ட முகாமை அல்லது மேற்பார்வை மட்டத்திலான பதவியில் ஆகக் குறைந்தது 06 ஆண்டு கால அனுபவம்

அல்லது

ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டமொன்றுடன் அல்லது அதற்குச் சமனான தகைமை யொன்றுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டத் திலான பதவியில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்

அல்லது

இ. கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் 04 வருடகால அனுபவம் அல்லது க.பொ.த உயர்தர பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் அங் கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் ஆகக்குறைந்தது 06 ஆண்டு சேவையாற்றிய அனுபவம்

02. பதவி. குறியீட்டு இல : கணக்காளர் - 104/10
சம்பள அளவுத் திட்டம் : 10700 - 120X10 - 130 X 10 – 13200.00 (66/2006 ன் படி)
**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் :**
அ. கூட்டுறவு ஊழியர் 11வது சம்பளத்திட்ட கணக்குப் பதிவாளர் / கணக்கு அல்லது கணக்காய்வுப்பகுதி இலிகிதர் பதவியில் 03 வருடங்களிற்குக் குறையாத அனுபவம் அல்லது 12வது சம்பளத் திட்டத்தில் கணக்குப் பதிவாளர் /கணக்கு அல்லது கணக்காய்வுப்பகுதி இலிகிதர் பதவியில் 06 வருடங்களிற்குக் குறையாத அனுபவம்

அல்லது

ஆ. ஐக்கிய இராச்சிய கணக்குப் பதிவாளர் இறுதியாண்டுப் பரீட்சையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கு/கணக்குப் பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான மேற்பார்வை மட்டப் பதவியொன்றில் 02 வருடங்களிற்குக் குறையாத அனுபவம் அல்லது ஐக்கிய இராச்சிய கணக்குப் பதிவாளர் இடைநிலைப் பரீட்சையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத் தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கு அல்லது கணக்குப் பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான மேற் பார்வை மட்டப் பதவியொன்றில் 04 வருடங்களிற்குக் குறையாத அனுபவம்

அல்லது

இ. கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி அல்லது கூட்டுறவுத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி. அத்துடன் கூட்டுறவு நிறுவனமொன்றில் 02 வருட கால அனுபவம் அல்லது க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் கணக்கியல் உள்ளிட்ட 03 பாடங்களு டனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல் அல்லது கணக்காய்வுத்துறையில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு சேவையாற்றிய அனுபவம்.

03. பதவி. குறியீட்டு இல : களஞ்சிய மேற்பார்வையாளர் - 207/13
சம்பள அளவுத் திட்டம் : 9950 - 85X10 - 90X10 – 11700.00 (66/2006 ன் படி)
**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் :**
அ.கூட்டுறவு ஊழியர் 14வது சம்பளத் திட்ட தொடர்புபட்ட துறைப் பதவியொன்றில் 02 வருடங்களிற்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் 15வது சம்பளத் திட்ட தொடர்புபட்ட துறைப் பதவியொன்றில் 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ. கூட்டுறவு பணியாளர் (சாதாரண தரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த. சாதாரணதரத்தில் கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியும் தொடர்புபட்ட துறைப் பதவியொன்றில் 02 ஆண்டு கால அனுபவம்.

04. பதவி. குறியீட்டு இல : களஞ்சிய பொறுப்பாளர் - 202/13
சம்பள அளவுத் திட்டம் : **9950 - 85 x 10 - 90x10 – 11700.00 (66/2006** ன் படி)
**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் :**
அ.கூட்டுறவு ஊழியர் 14வது சம்பளத் திட்ட தொடர்புபட்ட துறைப் பதவியொன்றில் 02 வருடங்களிற்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் 15வது சம்பளத் திட்ட தொடர்புபட்ட துறைப் பதவியொன்றில் 04 ஆண்டு கால அனுபவம்

அல்லது

ஆ. கூட்டுறவு பணியாளர் (சாதாரண தரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த. சாதாரணதரத்தில் கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியும் தொடர்புபட்ட துறைப் பதவியொன்றில் 02 ஆண்டு கால அனுபவம்.

05.பதவி. குறியீட்டு இல : களஞ்சிய முகாமையாளர் - 208/14
சம்பள அளவுத் திட்டம் : 9700 - 80X10 - 85X10 – 11350.00 (66/2006 ன் படி)
**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் :**
அ. கூட்டுறவு ஊழியர் 15வது சம்பளத் திட்ட தொடர்புபட்ட துறைப் பதவியொன்றில் 02 வருடங் களிற்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் 16 வது சம்பளத் திட்ட தொடர்புபட்ட துறைப் பதவியொன்றில் 04 ஆண்டு கால அனுபவம்

அல்லது

ஆ. கூட்டுறவு பணியாளர் சாதாரண தரப் பத்திரம் அல்லது க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் இரு அமர்வுகளிற்கு மேற்படாது எண்கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது தூயகணிதம். கணிதமுடன் சிங்களம் அல்லது தமிழ்மொழி என்பவற்றை உள்ளடக்கிய 06 பாடங்களுடனான சித்தி

06. பதவி. குறியீட்டு இல : களஞ்சிய முகாமையாளர் - 208/15
சம்பள அளவுத் திட்டம் : 9450 - 75X10 - 80X10 – 11000.00 (66/2006 ன் படி)
**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள :**
அ. கூட்டுறவு ஊழியர் 16வது சம்பளத் திட்ட தொடர்புபட்ட துறைப் பதவியொன்றில் 02 வருடங் களிற்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் 17வது சம்பளத் திட்ட தொடர்புபட்ட துறைப் பதவியொன்றில் 04 ஆண்டு கால அனுபவம்

அல்லது

ஆ. கூட்டுறவு பணியாளர் சாதாரண தரப் பத்திரம் அல்லது க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் இரு அமர்வுகளிற்கு மேற்படாது எண்கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது தூயகணிதம். கணிதமுடன் சிங்களம் அல்லது தமிழ்மொழி என்பவற்றை உள்ளடக்கிய 06 பாடங்களுடனான சித்தி அத்துடன் சம்பந்தப்பட்ட துறையில் அனுபவம் உள்ளவர்களிற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

07. பதவி. குறியீட்டு இல : கணக்குப் பதிவாளர் - 301/12
சம்பள அளவுத் திட்டம் : 10200 - 90X10 - 100X10 – 12100.00 (66/2006ன் படி)
**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் :**
அ. கூட்டுறவு ஊழியர் 13வது சம்பளத் திட்ட கணக்குப் பதிவாளர் அல்லது கணக்குப் பகுதி பதவி யொன்றில் 02 வருடங்களிற்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் 14வது சம்பளத் திட்ட கணக்குப் பகுதி பதவியொன்றில் 04 ஆண்டு கால அனுபவம்

அல்லது

ஆ. ஐக்கிய இராச்சிய கணக்குப் பதிவாளர் இடை நிலைப் பரீட்சை சித்தி
இ. கூட்டுறவு பணியாளர் (உயர்தரம்) சான்றிதழ்
அல்லது க.பொ.த. உயர்தரத்தில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தி

08. பதவி. குறியீட்டு இல : எழுதுநர் - 302/14
சம்பள அளவுத் திட்டம் : 9700 - 80X10 - 85X10 – 11350.00 (66/2006 ன் படி)
**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் :**
அ. கூட்டுறவு ஊழியர் 15வது சம்பளத் திட்ட எழுதுநர் பதவியொன்றில் 02 வருடங்களிற்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் 16வது சம்பளத் திட்ட எழுதுநர் பதவியொன்றில் 04 ஆண்டு கால அனுபவம்

அல்லது

ஆ. க.பொ.த. (சாதாரண தரம்) கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம். அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட 05 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

09. பதவி. குறியீட்டு இல : தட்டெழுத்தாளர் - 305/15
சம்பள அளவுத் திட்டம் : 9450 - 75x 10 - 80x 10 – 11000.00 (66/2006 ன் படி)
**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் :**
அ. க.பொ.த சாதாரண தரத்தில் தொடர்புபட்ட மொழி உட்பட 06 பாடங்களில் சித்தியும் சிங்களம் அல்லது தமிழ் தட்டெழுத்து வேகம் நிமிடத்திற்கு 20 சொற்களுடன் ஆங்கில தட்டெழுத்து நிமிடத்திற்கு 30 சொற்கள் என்ற வேகத்தில் இருத்தல் வேண்டும்.

10. பதவி. குறியீட்டு இல : சாரதி - 312/14
சம்பள அளவுத் திட்டம் : 9700 - 80X10 - 85X10 – 11350.00 (66/2006 ன் படி)
**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் :**
அ. 05ம் தரக் கல்விச் சான்றிதழுடன் பேருந்து அல்லது லொறி அல்லது பெட்டியுடன் கூடிய உழவு இயந்திர சாரதி அனுமதிப் பத்திரத்துடன் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்

11. பதவி. குறியீட்டு இல : விற்பனை உதவியாளர் - 308/17
சம்பள அளவுத் திட்டம் : 8950 - 65X10 - 70X10 – 10300.00 (66/2006ன் படி)
**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் :**
அ. கூட்டுறவுப் பணியாளர் கனிஷ்ட தரச் சான்றிதழ்

அல்லது

ஆ. 08ம் வகுப்புச் சித்தியுடன் விற்பனை அலுவல்களுடன் தொடர்புடையதாக மூன்று (03) வருடங்களிற்குக் குறையாத அனுபவம்

12. பதவி. குறியீட்டு இல : காவலாளி - 315/17
சம்பள அளவுத் திட்டம் : 8950 - 65X10 - 70X10 – 10300.00 (66/2006ன் படி)
**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் :**
அ. 5ம் வகுப்பு கல்விச் சான்றிதழும் நல்ல தேகாரோக்கியமும் இருத்தல் வேண்டும்.
விண்ணப்ப முடிவுத் திகதி : 14.09.2015

**பொதுவான நிபந்தனைகள்**

அ) வயதெல்லை 18-45 வரை (கூட்டுறவுச் சங்கப் பணியாளருக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது)
ஆ) அடிப்படைச் சம்பளத்திற்கு மேலதிகமாக கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட சுற்று நிருபங்களான 66/2006இன் படியான 10 % சம்பள அதிகரிப்பு 02/2015 (1) இன் படியான 30% சம்பள அதிகரிப்பு மற்றும் 15 % விசேட படியும் வாழ்க்கைச் செலவுப் படியும் வழங்கப்படும்.
இ) கூட்டுறவுச் சங்கங்களில் தற்போது கடமையாற்றுபவர்கள் சங்கத்தின் ஊடாக சிபார்சு செய்து விண்ணப்பித்தல் வேண்டும்.
ஈ) சங்க எல்லைப் பரப்பினுள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
உ) விண்ணப்பங்கள் முழுப்பெயர். முகவரி, தே.அ.அ.இல. பிறந்ததிகதி. தகைமைகள், அனுபவம் என்பவை உள்ளடங்கலாக சுயமாகத் தயாரிக்கப்பட்டு அல்லது சங்கத்தில் மாதிரி விண்ணப்பப்படிவத்தினைப் பெற்று பூர்த்தி செய்து கல்விச் சான்றிதழ். பிறப்பு சான்றிதழ். அனுபவச் சான்றிதழ். மேலதிக தகைமைகளுக்கான சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து அனுப்பி வைத்தல் வேண்டும்.
ஊ) விண்ணப்பங்களை ஏற்கவோ. நிராகரிக்கவோ நெறியாளர் குழுவுக்கு உரிமையுண்டு.
எ) விண்ணப்பங்கள் **"தலைவர் பளை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு சங்கம் - கண்டி வீதி பளை"** எனும் முகவரிக்கு எதிர்வரும் 14.09.2015ந் திகதிக்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.
ஏ) தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர். குறியீட்டு இலக்கம் என்பன குறிப்பிடப்படல் வேண்டும்.

***சி.பொன்னுத்துரை***
**தலைவர்**
**பளை.ப.தெ.வ.அ.கூட்டுறவுச்சங்கம்**
**28.08.2015**

# ராசி பலன்

28.08.2015
(ஆவணி 11, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
சதுர்த்தசி பின்னிரவு 3.29 மணிவரை
திருவோணம் மாலை 6.09 மணிவரை
இராகுகாலம் 10.35-12.05 மணிவரை
சுபநேரம் 6.05-7.35 மணிவரை
நடேசர் அபிஷேகம், ஆவணி ஓணம், இருக்குவேத உபாகருமம் ஸ்ரீவரலட்சுமி விரதம்

**வளவன்**

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>திருவாதிரை, புனர்பூசம்<br>மேல் நோக்கு நாள் | | செவ் சுக் |
| சந் | | | குரு சூரி |
| | | சனி | புத ராகு |

**மீனம்**
பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறலாம், பயணங்கள் எளிதில் கைகூடும், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும்.

**மேடம்**
புதிய முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள், பெரிய மனிதர்களின் உதவிகள் கிடைக்கும், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், ஆரோக்கியமான நாள்.

**இடபம்**
அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், நல்லவர்களை சந்தித்து நலம் காணும் நாள், குடும்பத்தில் நிலவிவந்த மனஸ்தாபங்கள் அகலும், பயணங்களால் பலனுண்டு.

**மிதுனம்**
கவலைகள் தீர சுந்தனை வழிபட வேண்டிய நாள், எந்தக் காரியத்திலும் நிதானமாகச் செயற்படுவது நல்லது, வேலைச்சுமை கூடும், செலவுகளில் விழிப்புணர்வு அவசியம்.

**கும்பம்**
வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், சாப்பிடக்கூட நேரமில்லாமல் சில வேலைகளைச் செய்யலாம், பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கடகம்**
நட்பால் நல்ல காரியமொன்று நடைபெறலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், தொழிலில் மேலதிகாரிகளின் நட்பைப் பெறுவீர்கள்.

**மகரம்**
ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கப் பெறுவீர்கள், ஆரம்பத்தில் அச்சுறுத்தலாகத் தோன்றிய தகவல் முடிவில் ஆதாயத்தைக் கொடுக்கும், பயணத்தால் பலன் கிடைக்கும்.

**சிம்மம்**
பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், மறைமுக எதிர்ப்புகள் மாறும், சிக்கனத்தைக் கடைப்பிடிக்க முற்படுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு**
எதிர்பாராத வகையில் தனவரவுகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, செய்தொழிலில் மேன்மையும் உயர்வும் கிட்டும், குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு.

**விருச்சிகம்**
சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும் நாள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**துலாம்**
செல்வாக்கு அதிகரிக்கும் நாள், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், நண்பர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம்.

**கன்னி**
மனநிறைவு கூடும் நாள், தொழிலில் முன்னேற்றமுண்டு, உயரதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள், நீண்ட நாட்களாக தள்ளிப் போட்ட காரியம் ஒன்றை இன்று செய்து முடிப்பீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத தடுப்புப்பிரிவு கையகப்படுத்திய காணியைப் பெற்றுத் தருமாறு கோரிக்கை

## யாழ்.போதனா வைத்தியசாலை தரப்பினர் விடுத்துள்ளனர்

(யாழ்ப்பாணம்)

**யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முன்பாக பயங்கரவாத தடுப்புப்பிரிவினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணியை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு பெற்றுத்தர நடவடிக்கையெடுக்க வேண்டுமென வைத்தியசாலைத் தரப்பினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

இக் காணி யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வழங்கப்படுவதன் மூலம் வைத்தியசாலைக்கு தேவையான விடுதிகள் மற்றும் சிகிச்சை பிரிவுகளினை அமைத்துக் கொள்ள முடியும் என யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஸ்ரீ பவானந்தராஜா தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளினால் முன்னர் பயன்படுத்தப்பட்டுவந்த குறித்த காணியை யுத்தத்திற்கு பின்பு இராணுவமும் தற்போது பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரும் பயன்படுத்தி வருகின்றனர்.

குறித்த காணியை தனியார் ஒருவர் தன்னுடைய காணி என உரிமை கோரியிருந்த போதிலும் நீதிமன்றம் மூலம் அக்காணி அரசுடமைக் கப்பட்டது.

இதன்பின்னர் குறித்த காணியினை பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினர் தமது தேவைகளிற்கு பயன்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் நிலவும் இடப்பற்றாக்குறையினை காரணம் காட்டி யாழ்.மாவட்ட அரச அதிபர் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் ஆகியோருக்கு குறித்த காணியினை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கடிதமொன்று அனுப்பப்பட்டிருந்தது.

இக் கடிதத்தின் பிரகாரம் குறித்த காணியில் பயங்கரவாத குற்றத் தடுப்பு பிரினருக்கு தேவையான பகுதியை விடுத்து ஏனைய பகுதிகளை வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும் ஆளுநர் யாழ்.போனா வைத்தியசாலைக்கு தெரியப்படுத்தியிருந்தார்.

இவ்வாறானதொரு நிலையிலேயே யாழ்.போதனா வைத்தியசாலைக்கு குறித்த காரணியினை வழங்குமாறு வைத்தியசாலைச் சமூகம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரதிப்பணிப்பாளரிடம் கேட்ட போது,

இக் காணி தொடர்பில் ஆளுநருக்கு முன்னரே தெரியப்படுத்தியிருந்தேன். அவரும் சாதகமான பதிலளித்திருந்தார்.

ஏற்கனவே யாழ்.போதனா வைத்தியசாலையில் வைத்திய நிபுணர்கள், தாதியர்கள் மற்றும் பல விடுதிகள் இன்மையினால் ஆளணிப் பற்றாக்குறை என்பது அதிகமாகவே காணப்படுகின்றது. வெளி மாவட்டங்களிலிருந்து வரும் வைத்தியர்கள், தாதியர்கள் தனியார் இடங்களில் வாடகை செலுத்தியே தங்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.

இக்காணி கிடைப்பதன் மூலம் இவற்றை ஓரளவிற்கு நிவர்த்தி செய்து கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

# ‘காண்டாவனம்’ நூல் அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

சண்முகம் சிவலிங்கம் நினைவும் காண்டாவனம் (சிறுகதை)நூல் அறிமுகமும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.45 மணிக்கு திருநெல்வேலியில் அமைந்துள்ள இந்து வாலிபர் சங்கத்தில் நடைபெறவுள்ளது.

அ.யேசுராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வின் சிறப்புரையினை உமா வரதராஜன் வழங்கவுள்ளதுடன் கருத்துரைகளை தெ.மதுசூதனன், தி.செல்வமனோகரன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.




மட்டக்களப்பு கல்முனையைசொந்த இடமாகக் கொண்ட சண்முகம் -சிவலிங்கம் கவிதை, சிறுகதை, நாவல், நாடக எழுத்துரு, நெறியாள்கை, நடிப்பு, விமர்சனம் ஆகிய துறைகளில் ஈடுபட்டவராவார்.

1998 இல் இவரது நீர் வளையங்கள், 2010இல் சிதைந்து போன தேசமும் தூர்ந்து போன மனக்குகையும் ஆகிய கவிதை நூல்கள் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5-51)

# யாழில் 1055 வீடுகள் புனரமைக்க முதற்கட்ட கொடுப்பனவு வழங்கல்

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் யாழ்.மாவட்டத்தில் ஆயிரத்து 55 வீடுகள் புனரமைப்பதற்கான முதற்கட்ட கொடுப்பனவுகள் யாவும் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் யாழ்.மாவட்ட முகாமையாளர் எம்.ரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தினால் அமுல்படுத்தப்பட்டுவரும் 100நாள் வேலைத்திட்டத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் 50ஆயிரம் வீடுகள் அமைக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் இத்திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்படுகின்றது.அதில் நான்கு கட்டங்களாக பிரிக்கப்பட்டு முதலாம் கட்டமாக 20 ஆயிரம் ரூபாவும் 2ஆம் கட்டமாக 30 ஆயிரம் ரூபாவும் 3 ஆம் கட்டமாக 30 ஆயிரம் ரூபாவும் 4ஆம் கட்டமாக 20ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும்.

அந்தவகையில் இத்திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் ஆயிரத்து 55 வீடுகள் புனரமைப்பதற்காக 25.06 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் வேலணை பிரதேச செயலர் பிரிவின் கீழ் 5 வீடுகளும் ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவின் கீழ் 8வீடுகளும் யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவின் கீழ் 61 வீடுகளும் நல்லூர் பிரதேச செயலர் பிரிவின் கீழ் 73 வீடுகளும் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவின் கீழ் 77 வீடுகளும் உடுவில் பிரதேச செயலர் பிரிவின் கீழ் 117வீடுகளும் சங்கானை பிரதேச செயலர் பிரிவின் கீழ் 96 வீடுகளும் காரைநகர் பிரதேச செயலர் பிரிவின் கீழ் 11 வீடுகளும் தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவின் கீழ் 123 வீடுகளும் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவின் கீழ் 61 வீடுகளும் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் 178 வீடுகளும் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் 188 வீடுகளும் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் 56 வீடுகளும் மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் ஒரு வீடும் அமைப்பதற்கு முதற் கட்ட கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் சில பிரதேசங்களில் 2ஆம் கட்ட கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# கடவுச்சீட்டு பெற்றுக்கொள்வதற்கான புதிய நடைமுறையைப் பின்பற்றுங்கள்

## நல்லூர் பிரதேச செயலாளர் அறிவிப்பு

குடிவரவு குடியகல்வு திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டுள்ள புதிய கடவுச்சீட்டை பெற்றுக்கொள்வதற்கான புதிய நடைமுறைகளை உரிய முறையில் பின்பற்றுமாறு நல்லூர் பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறி அறிவித்துள்ளார்.

தொடர்ந்து அவரது அறிவித்தலில்,

சர்வதேச அங்கீகாரத்துடனான ஆவணமாக பயன்படுத்துவதற்காக 2015 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி முதல் கடவுச்சீட்டு விநியோகத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என குடிவரவு குடியகல்வு திணைக்களம் அறிவித்துள்ளது.

அந்தவகையில் திருத்தப்பட்ட புதிய விண்ணப்பப்படிவம் K 35 A இல் விண்ணப்பிக்கப்பட வேண்டும்.

அச்சிடப்பட்ட நிழற்படங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பதுடன் குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட புகைப்பட நிலையங்களில் புகைப்படங்கள் எடுக்கப்பட்டு இணையத்தின் வாயிலாக தொகுத்து அனுப்பி வைக்கப்படும்.

மேலும் விண்ணப்பப்படிவத்துடன் புகைப்பட நிலையத்தினால் வழங்கப்படும் அறிவித்தல் குறிப்புடன் நேரடியாக தலைமைக்காரியாலயம் அல்லது பிராந்தியக் காரியாலயங்களுக்கு விண்ணப்பதாரர் சமுகமளிக்க வேண்டும்.

அத்துடன் நல்லூர் பிரதேசத்திற்கென அங்கீகரிக்கப்பட்ட புகைப்பட நிலையமாக இல. 124, கந்தர்மடம் பலாலி வீதியில் அமைந்துள்ள குமரன் போட்டோ தெரிவு செய்யப்பட்டுள்ளது. அவர்களுடன் 021 222 4833 மற்றும் 077 722 2601 என்ற தொலைபேசி இலக்கங்களூடாக தொடர்பு கொள்ள முடியும்.

இந்த நடைமுறைகள் தொடர்பான விபரங்களையும் படிவங்களையும் www.immigration.gov.lk எனும் இணையத்தளத்தினூடாக பெற்றுக்கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)



இணுவில் திருக்குறள் மன்றம் நடத்திய திருக்குறள் மனனம் போட்டிக்கான பரிசளிப்பு விழா அண்மையில் இணுவில் அறிவாலயத்தில் இடம் பெற்றபோது...

# கர்ப்பிணித் தாய்மாருக்கான போசாக்கு உணவுப்பொதிகள்

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச செயலகத்திற்குட்பட்ட கர்ப்பிணி தாய்மாருக்கான ஆனிமாத இலவச போசாக்கு உணவுப்பொதி கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருவதாக கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சிவசிறி தெரிவித்தார்.

இக்கொடுப்பனவுகள் உடுப்பிட்டி, கட்டைவேலி போன்ற பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் வழங்கப்பட்டு வருகிறது.

ஒருவார காலம் வரை வழங்கப்படவுள்ள இக்கொடுப்பனவுகளை உரிய பயனாளிகள் தவறாது பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச செயலர் மேலும் கேட்டுள்ளார். (இ-5-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலக்சுமி விரதம் இன்றாகும்

வரலட்சுமி விரதம் என்பது பதினாறு வகைச் செல்வத்துக்கும் அதிபதியான இலட்சுமியின் அருள் வேண்டும் இந்துக்களின் நோன்பாகும். ஆவணி மாத வளர்பிறையில் முழுநிலவு வருவதற்கு முந்தைய வெள்ளிக்கிழமையில் கணவன் நலத்தோடும், ஆரோக்கியத்தோடும், செல்வத்தோடும் இருக்கவும், தாலி பாக்கியம் நிலைக்கவும், இல்லத்தில் செல்வம் கொழிக்கவும் இந்த நோன்பை கடைப்பிடிக்கின்றனர்.

இந்நாளில் வீட்டைச் சுத்தம் செய்து விளக்கேற்றி வாசனைப் புகையினால் இல்லத்தை நிறைத்து கலசம் ஒன்றில் இலட்சுமியை வணாங்கித் தொடங்குவர். கலசத்தினுள் பச்சரிசி, எலுமிச்சை, பொற்காசு என்பவற்றை இட்டு கலசத்தைப் பட்டாடையால் அலங்கரித்து, தங்கம், வெள்ளி அல்லது பஞ்ச உலோகங்களினால் ஆன இலட்சுமியின் உருவச்சிலையை அல்லது படத்தை கலசத்திலுள்ள தேங்காயில் வைப்பர்.

மஞ்சள் சரட்டை குங்குமத்தல் வைத்துக் கலசத்தில் அணிந்து வரலட்சுமியைக் கிழக்குப் பக்கமாக வைத்து வணங்குவர்.

தீப ஆராதனை செய்து இனிப்பான பலகாரங்களைப் படைப்பர். பின்னர் கலசத்தில் வைத்த மஞ்சள் சரட்டை விரதமிருந்தவர் கையில் கட்டுவர். பின்னர் படைக்கப்பட்ட பொருட்களுடன் தாம்பூலம், மஞ்சள், புடைவை போன்றவற்றை சுமங்கலிகளுக்கு தானமாகக் கொடுத்து ஆசி பெற்று காலை முதல் உண்ணா நோனபிருந்ததை முறித்து தாமும் உண்டு விரதத்தை நிறைவேற்றுவர்.

அன்று முழுவதும் அஷ்டலட்மி தோத்திரம், லலிதா சகஸ்ர நாமம் பாராயணம் செய்வர். மாலை வேளைகளில் உற்றார், சுற்றார் வீடுகளுக்குச் சென்று ஒருவருக்கொருவர் தாம்பூலம் பெற்றுக்கொள்வர்.

சுமங்கலிகளுக்கான மிக முக்கியமான பண்டிகை வரலட்சுமி விரதம் ஆகும்.

இந்த விரதம் மாமியார் தொடங்கிக் கொடுக்க மருமகள் தொடர்ந்து செய்வது வழக்கம். பின்னர் அந்த மருமகள் எடுத்துக் கொடுக்க அடுத்து வரும் மருமகள் தொடர்ந்து பூஜை செய்ய வேண்டும். அவரவர்களும் தனித்தனியே தாயார் திருமுகம் வைத்துக்கொள்ள வேண்டும்.

### விரத கதை

மகத இராச்சியத்தில், குணதினபுரம் என்ற ஒரு நகரம் இருந்தது. அங்கு சாருமதி என்கிற பெண்ணும் அவளது கணவனும் வசித்துவந்தனர். அவள் தன் குடும்பத்தின் மீது மிகுந்த அக்கறை கொண்டவள். சிறந்த பக்தி உடைய அவளின் கனவில் வந்த லட்சுமி, தன்னை வரலட்சுமியாக வழிபட்டால் அவளுக்கு அனைத்து செல்வங்களும் கிடைக்கும் என்று கூறினாள். தாயாரே எடுத்துக் கொடுத்ததாக எண்ணிய சாருமதி அதன் பிறகு வெள்ளிக்கிழமை அன்று வரலட்சுமி அம்மனை வழிபட்டாள். வரலட்சுமியை வழிபட்டு அவளின் வாழ்வின் தரம் உயர்வதைக் கண்ட பிற பெண்களும், சாருமதியிடம் தங்களுக்கும் இப்பூஜையை எடுத்துத் தருமாறு கூறி, அதன் பின்னர் வரலட்சுமி விரதத்தை அவர்களும் கடைப்பிடித்தனர்.

வரலட்சுமி விரதத்தன்று வரலட்சுமி தாயாரை மனதால் வேண்டினால், ஆதி லட்சுமி, தனலட்சுமி, தானியலட்சுமி, வித்யா லட்சுமி, வீர லட்சுமி, கஜ லட்சுமி, சந்தானலட்சுமி, விஜய லட்சுமி ஆகிய அஷ்டலட்சுமிகளையும் வேண்டிய பலன் ஒரு சேரக் கிடைக்கும் என்பது ஐதீகம். இவர்கள் அனைவரும் வரலட்சுமி விரதத்தன்று ஒரே தாயாரான வரலட்சுமியில் ஐக்கியம் ஆவதாக நம்பிக்கை.

### வழிபடும் முறை

அழகிய தாம்பாளத்தின் மீது தலை வாழை இலை இட்டு அதன் மீது அரிசி பரப்ப வேண்டும். பின்னர் இதன் மீது கலசம் வைக்க வேண்டும். இக்கலசத்தினுள் கால் பங்கு அரிசியை நிரப்பி, காதோலைக் கருக மணி, கரும் புள்ளி இல்லாத மஞ்சள் நிற எலுமிச்சம் பழம், தங்கக் காசு, வெள்ளிக் காசு, சிறிய கண்ணாடி, மரச் சீப்பு, இரண்டு வெற்றிலை பாக்கு ஆகியவற்றை இட்டு நிரப்ப வேண்டும். கலசத்தின் அகன்ற வாய்ப் பகுதியின் மீது தேங்காயின் குடுமிப் பகுதி மேல்புறம் இருக்குமாறு வைக்க வேண்டும்.

அத்தேங்காய்க்கு மஞ்சள் குங்குமம் இட வேண்டும். பின்னர் ஆண்டுதோறும் தாயார் முகமாக வைக்கப்படும் திருமுகத்தை, தேங்காயின் குடுமிப் பகுதி மறையுமாறு செருக வேண்டும். தாயாருக்குப் பொட்டு இட்டு, அதில் ஜொலிக்கும் கற்களைப் பதிக்கலாம். பின் பகுதியில் பூச்சரமும், பூ ஜடையும் வைத்தால் அழகாக இருக்கும். தாயாருக்கும், கலசத்திற்குமாக அழகிய ஆடை அணிய வேணடும். அழகிய முத்து மாலை உள்ளிட்ட நகைகளைத் தாயாருக்கு அணிவிக்க வேண் டும்.

முதல் நாளான வியாழன் இரவே தாயார் தயாராகிவிடுவார். ஒரு வருட மாக பூஜை அறையில் பெட்டிக்குள் இந்தத் தாயார், கண் திறக்கும் நேரத்தில் உணவு படைக்க வேண்டும். முன்னதாக வெண்பொங்கல் தயாரித்து வைத்துக் கொள்ள வேண்டும். வெற்றிலை பாக்கு, பழம் ஆகியவற்றைத் தட்டில் வைத்து, தீபாராதனை, ஆரத்தி போன்றவறறைத் தயார் நிலையில் வைத்துவிட வேண்டும். புதிய கண்மை எடுத்துத் தாயார் திருமுக மண்டலத்தில், கண்களுக்கு இட வேண்டும. இதனையே தாயார் கண் திறத்தல் என்று சொல்வார்கள். பின்னர் தாயாருக்குப் படைத்த பிரசாதத்தையே நோனபு நோற்கும்பெண் சாப்பிட வேண்டும்.

மறுநாள் விடியற்காலை இநதத்தாயாரை இல்லத்திற்குள் வருமாறுஅழைக்க வேண்டும். பக்கத்திற்கு [illegible] சுமங்கலிப் பெண்கள் அலங்கரித்து வைத்துள்ள தாயாரைத் தாம்பாளத்துடன் தூக்கி வந்து முன்னதாகத் தயா ரிக்கப்பட்ட சிறிய மண்டபத்தினுள் வைக்க வேண்டும். அந்த மண்டபத்தின் இரு புறமும் வாழைக்கன்றுகளைக் கட்டி, மாவிலை, தென்னை இலை தோரணங் ளால் அலங்கரிக்க் வேண்டும். மண்டபத்துக்கும் மஞ்சள், குங்குமம் இட வேண் டும்.

### விநாயகருக்கு வணக்கம்

முதலில் விநாயகர் பூஜையைச் செய்துவிட்டு பிறகு மகாலட்சுமி அஷ்டோத்திரம் பாடி வழிபட வேண்டும். நோன்புச் சரட்டுக்குத் தனியாகப் பூஜை செய்ய வேண்டும். பூஜை முடிந்தபின்பு தாயாருக்குப் பருப்பு பாயாசம், தேங்காய், உளுந்துக் கொழுக்கட்டை, பால், தயிர், வெற்றிலை பாக்கு, பழம் இவை அனைத்தையும் நைவேத்தியம் செய்ய வேண்டும். பிறகு பெரியோர்களிடம் ஆசீர்வாதம் வாங்கிய பின்னர் நோன்புச் சரட்டை வலது கையில் கட்டிக்கொள்ள வேண்டும்.

### தாயாரின் முகம்?

தாயார் முகமாக வந்த வரலாறு சுவையானதுதான். தன்னை வரலஷ்மியாக வைத்து பூஜிக்கக் கூறி தனது பக்தையின் கனவில்



வந்தாள் தாயார். அக் காலத்தில் மாட்டு சாணத்தைக் கொண்டு இல்லம் மெழுகுதல் வழக்கம். தன்னை விட்டுத் தாயார் என்றும் பிரிந்துவிடக் கூடாது என்பதற்காக தங்கள் இல்லச் சுவரில், அழகிய செம்பு ஒன்றினை ஓவியமாக வரைந்து அதன் மேல் அப்படியே தாயார் முகம் வரைவார்கள். இதனையே வெள்ளிக்கிழமை தோறும் பூஜித்தும் வந்தார்கள். ஆண்டு தோறும் புதுப்பிப்பார்கள். சமீப காலமாக அழகிய, கருணை சொரியும் தாயார் முகங்களை, அச்சு செய்து வெள்ளி மற்றும் தங்கத்தில் வார்த்தெடுத்து அந்த முகங்கள் நகைக் கடைகளிலும் கிடைக்கின்றன.?


டயானா பிளாஸ்ரிக் மீள் சுழற்சி

சகல விதமான உடைந்த பிளாஸ்ரிக் போன்றவை உத்தரவாதத்துடன் ஒட்டிக் கொடுக்கப்படும்.

* பழைய பிளாஸ்ரிக் விலைக்கு வாங்கப்படும்.

108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
T.P 077 5925088, 021 222 8680
(1572)



6ஆவது ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
உயர் திரு.தம்பியப்பா தெட்சணாமூர்த்தி
(முன்னாள் உதவித் திட்டமிடல் பணிப்பாளர்,
(வேலணை பிரதேச செயலகம்.)

அன்னை மடியில் : 10.03.1943
ஆண்டவன் அடியில் : 28.08.2009

ஆண்டுகள் எத்தனை கடந்தாலும்
நெஞ்சங்கள் உள்ளவரை நினைவுகள் அகலாது

63, ராணி வீதி, நல்லூர்.
பிரிவால் வாடும் குடும்பத்தினர்.
(1595)



கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 62<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: பொறியியலாளர்<br>தொ.இ: B/1214 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 24<br>உயரம்: 4'8"<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/1969 |
| பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 20 சூரிசெவ் 5 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L/ அரச தொழில்<br>தொ.இ: B/1215 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 14 சூரிசெவ் 12 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: பட்டதாரி<br>தொ.இ: G/1977 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 46<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: A/L/ அரச தொழில்<br>தொ.இ: B/1216 | பிறப்பு: 1973 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 47 செவ் 1 இல்<br>உயரம்: 4'10"<br>தகைமை/தொழில்: BA, MA/ அரச தொழில்<br>தொ.இ: G/1978 |
| பிறப்பு: 1971 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 31 செவ் 12 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: O/L ஜேமன் PR<br>தொ.இ: B/1217 | பிறப்பு: 1987 RC<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 14<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BSC/ ஆசிரியர்<br>தொ.இ: G/1979 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail: kalyanamalai.jaffna@gmail.com
[illegible]


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# திருட்டுப் பயலே!

…அவள் அருகே வந்த இன்னொருவன், "உன் நகைகளை எல்லாம் தந்து விடு.

இல்லையேல் உன்னைக் கொன்று விடுவேன்," என்று மிரட்டினான்.

"என்னக் கொன்று விடா தீர்கள்.

என்னால் இப்போது நகைகளை உங்களிடம் தர முடியாது," என்று கெஞ்சினாள் அவள்.

"ஏன் தர முடியாது?" என்று மிரட்டினான் மற்றொரு வன்.

"நான் என்ன செய்வேன்? நகைகள் எல்லாம் அலமாரியில் வைத்துப் பூட்டப்பட்டு உள்ளன.

சாவி என் கணவரிடம் உள்ளது," என்றாள்.

"உன் கணவனிடம் சாவி உள்ளதா? அவன் எங்கே இருக்கிறான்?" என்று கத்தினான் முதலாம் திருடன்.

நடுங்கியபடியே அவள், "உங்களைப் பார்த்து அஞ்சிய அவர் கட்டிலுக்கு அடியில் ஒளிந்து கொண்டார்," என்றாள்.

அப்போதுதான் அவர்கள் கட்டிலுக்கு அடியில் ஒருவன் ஒளிந்து இருப்பதை பார்த்தனர்.



"ஏ கோழையே!

நீயும் ஒரு ஆண்மகனா?

மனைவியை எங்களிடம் சிக்க வைத்துவிட்டு, நீ ஒளிந்து கொண்டாயா? எழுந்து வெளியே வா," என்று கோபத்துடன் கத்தினான் அவர்களில் ஒருவன்.

ஐயோ! ஆபத்தில் சிக்கிக் கொண்டேனே என்று நடுங்கிய அந்தத் திருடன்.

வெளியே வரத் தயக்கம் காட்டினான்.

கோபத்துடன் கட்டிலைப் புரட்டிப் போட்ட அவர்கள் அவனைத் தூக்கினர்.

"நான் அவள் கணவன் அல்ல…

உங்களைப் போன்ற திருடன் நான்.

அவள் பொய் சொல்கிறாள்.

என்னிடம் எந்தச் சாவியும் இல்லை.

நான் சொல்வதை நம்புங்கள்," என்று கதறினான்.

"எங்களைப் பார்த்துவிட்டுக் கட்டிலுக்கு அடியில் ஒளிந்து கொண்டாய்.

இவள் உன் மனைவி இல்லை என்கிறாய்.

திருடன் என்று சொல்லி எங்களை ஏமாற்றப் பார்க்கிறாய்.

இப்படிப்பட்ட கோழையை நாங்கள் இதுவரை பார்த்தது கிடையாது.

இவனை உயிருடன் விடக் கூடாது" என்று கோபத்துடன் கத்திய அவர்கள்.

அவனை அடிக்கத் தொடங்கினர்.

அவர்களின் உதையைத் தாங்க முடியாத அவன், "நான் சொல்வதை நம்புங்கள். நான் இவள் கணவன் அல்ல," என்று கதறி அழுதான்.

அவர்களோ அவனை அடிப்பதை நிறுத்த வில்லை.

விரைந்து செயற்பட்ட நீலகண்டன் அரண்மனை வீரர்களை அழைத்துக் கொண்டு அங்கு வந்தான்.

எல்லாத் திருடர்களும் சிக்கிக் கொண்டனர். வீரர்கள் அவர்களைக் கைது செய்தனர்.

"இப்படி எதிர்பாராமல் சிக்கிக் கொண்டோமே" என்று திருடர்கள் அதிர்ச்சியடைந்தனர்.

நீலகண்டனும், அவர் மனைவியும் சேர்ந்து செய்த சூழ்ச்சி அவர்களுக்குப் புரிந்தது.

நீலகண்டனிடம் வீரர்களின் தலைவன், "ஐயா! உங்களின் அறிவுக்கூர்மையால் தான் இவர்கள் எங்களிடம் சிக்கினர். எத்தனை நாட்களாக இவர்களைப் பிடிக்க முயற்சி செய்தோம் தெரியுமா? உங்களைப் எப்படிப் பாராட்டுவது என்றே தெரியவில்லை," என்றான்.

உதைபட்டு முனகிக் கொண்டே தரையில் கிடந்த முதலாம் திருடனை அவன் பார்த்தான்.

"ஏன் இவனை இவர்கள் இப்படி அடித்து இருக்கின்றனர்? இவனும் இந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவனா? இவனையும் கைது செய்யட்டுமா?" என்று கேட்டான்.

"இவன் சிறிய திருடன். இவனுக்குத் தகுந்த தண்டனை கிடைத்து விட்டது. இனி இவன் திருட மாட்டான். இவனை விட்டுவிடுங்கள்." என்றான் நீலகண்டன்.

அடுத்த நாள் அரசவைக்கு வந்த நீலகண்டனை அரசர் பாராட்டினார். சொன்னது போலவே நூறு பொற்காசுகளை அவனுக்குப் பரிசாகத் தந்தார். அவனும் மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொண்டான்.

(முற்றும்)




- 1349 - கொள்ளை நோயைக் காரணம் காட்டி ஜேர்மனியின் மாயின்ஸ் நகரில் 6,000 யூதர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1511 - போர்த்துக்கீசர்கள் மலாக்காவைக் கைப்பற்றினர்,
- 1521 - ஒட்டோமான் துருக்கியர் பெல்கிரேட் நகரைக் கைப்பற்றினர்.
- 1619 - ஜேர்மனியின் இரண்டாம் பேர்டினண்ட் புனித உரோமப் பேரரசன் ஆனான்.
- 1789 - வில்லியம் ஹேர்ச்செல் சனிக் கோளின் புதிய சந்திரனைக் கண்டுபிடித்தார்.
- 1844 - பிரெட்ரிக் எங்கெல்ஸ் மற்றும் கார்ல் மார்க்ஸ் இருவரும் பாரிசில் சந்தித்தனர்.
- 1845 - சயன்டிஃபிக் அமெரிக்கன் முதலாவது இதழ் வெளிவந்தது.
- 1849 - ஒரு மாதகால முற்றுகையின் பின்னர் வெனிஸ் நகரம் ஆஸ்திரியாவிடம் வீழ்ந்தது.
- 1867 - ஐக்கிய அமெரிக்கா மிட்வே தீவைப் பிடித்தது.
- 1879 - சூளுக்களின் கடைசி மன்னன் செட்ஸ்வாயோ பிரித்தானியர்களினால் சிறைப்பிடிக்கப்பட்டான.
- 1898 - காலெப் பிராடம் தான் கண்டுபிடித்த மென்பானத்திற்கு பெப்சி கோலா எனப் பெயரிட்டார்.
- 1913 - நெதர்லாந்தின் அரசி வில்ஹெல்மினா த ஹேக் நகரில் அமைதி அரண்மனையைத் திறந்தார்.
- 1916 - முதலாம் உலகப் போர்: ஜேர்மனி, ருமேனியா மீதும், இத்தாலி ஜேர்மனி மீதும் போரை அறிவித்தன.
- 1922 - ஜப்பான் சைபீரியாவில் இருந்து தனது படைகளை விலக்கச் சம்மதித்தது.
- 1924 - சோவியத் ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக ஜோர்ஜியர்கள் கிளர்ச்சியை ஆரம்பித்னர்.
- 1931 - பிரான்சும், சோவியத் ஒன்றியமும் போர் தவிர்ப்பு ஒப்பந்தத்தை ஏற்படுத்தின.
- 1943 - நாசி ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக டென்மார்க்கில் பொது வேலை நிறுத்தம் ஆரம்பமானது.
- 1963 - மார்ட்டின் லூதர் கிங், 200,000 பேருடன் 'என் கனவு யாதெனில்…' என்ற புகழ்பெற்ற வார்த்தைகளுடன் சொற்பொழிவாற்றினார்.
- 1964 - பிலடெல்பியாவில் இனக்கலவரம் ஆரம்பித்தது.
- 1979 - ஐ.ஆர்.ஏயின் குண்டு ஒன்று பிரசல்சில் வெடித்தது.
- 1988 - ஜேர்மனியில் வான வேடிக்கை விழா ஒன்றின் போது மூன்று விமானங்கள் மோதி பார்வையாளர்கள் மீது வீழ்ந்ததில் 75 பேர் கொல்லப்பட்டு 346 பேர் படுகாயமடைந்தனர்.
- 1991 - சோவியத்திடம் இருந்து உக்ரைன் விடுதலை பெற்றது.
- 1991 - மிக்கைல் கொர்பச்சோவ் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலர் பதவியில் இருந்து விலகினார்.
- 1996 - வேல்ஸ் இளவரசர் சார்ல்ஸ், இளவரசி டயானா மணமுறிவு ஏற்பட்டது.
- 2006 - திருகோணமலை, சம்பூரில் இலங்கை இராணுவம் தாக்குதல் நடத்தியதில் 20 பொது மக்கள் கொல்லப்பட்டனர்.
- 2006 - இலங்கையில் பத்தாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் முடிவடைந்தன.

### பிறப்புக்கள்


- 1749 - ஜொஹான் வூல்ப்காங் ஃபொன் கேத்தா, ஜெர்மனிய எழுத்தாளர், அறிவியலாளர் (இ. 1832)
- 1828 - லியோ டால்ஸ்டாய், உருசிய எழுத்தாளர் (இ. 1910)
- 1855 - ஶ்ரீநாராயணகுரு, இந்து ஆன்மிகவாதி (இ. 1928)
- 1863 - அய்யன்காளி, தலித் தலைவர் (இ. 1914)
- 1983 - லசித் மாலிங்க, இலங்கைத் துடுப்பாட்ட அணியின் அதிவேகப் பந்து வீச்சாளர்

### இறப்புகள்

- 1891 - ராபர்ட் கால்டுவெல், பிரித்தானியத் தமிழறிஞர் (பி. 1814)
- 1973 - முகவை கண்ண முருகனார், கவிஞர், தமிழறிஞர (பி. 1890)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்டி வருவோரின் சரணாலயம் செல்வச்சந்நிதி



தமிழர் தம் பெருந் தெய்வமாகவும் அண்டி வருவோர்க்கு ஆதரவளிக்கும் தெய்வமாகவும் விளங்குபவன் செல்வச் சந்நிதியான். இதனால் அவனே தஞ்சமென்று வந்தடையும் அடியவர்களின் சரணாலயமாகவும் இவ்வாலயம் விளங்கி வருகின்றது.

அனுதினமும் அறுபத்து நான்கு ஆலமிலைகளில் நிவேதிகப்படும் அமுதினை அருமருந்தாகக் கொண்டு தீராத பிணியாவும் தீர்த்தருளும் அற்புதம் வேறெந்த ஆலயங்களிலும் நிகழ முடியாத பேருண்மையாகும். இந்த அற்புதத்தின் காரணமாகத்தான் சந்நிதி ஆலயத்தைச் சூழ நாற்பத்தியைந்து மடங்கள் வரை அமைந்திருந்து அடியவர்களுக்கான அன்னதானப் பணியை நிறைவேற்றி வந்திருக்கின்றன. நம் தமிழர்களின் மத்தியில் வேறு அசாதாரண நிலைமைகள் ஏற்படுத்தப்பட்ட போதிலும் இன்று வரைக்கும் சந்நிதியானின் அன்னதான ஆற்றல் குறைவுபடாத ஓர் நிகழ்வாக எந்தவித குறைவும் இல்லாமல் பல்வேறு மடங்களிலும் ஆச்சிரமத்திலும் நிகழப்பெற்று வருகின்றது. இதனால்தான் சந்நிதியானை அன்னதானக் கந்தனென்று வழிபடும் மரபு காலாதிகாலமாக இருந்து வருகின்றது.

தமிழர் தம் வழிபாட்டு மரபின் பெருந்தெய்வமாக போற்றப்பட்டு வரும் முருகக் கடவுள் செல்வச்சந்நிதியிலே வெற்றி வேலாக எழுந்தருளி அருளாட்சி செய்கின்றான். நெற்றித் திருநீறும், வெற்றிலைப் பொட்டும், அட்சர மாலையும் இவ் வேலவனின் அலங்காரக் கோலமாகும். அதுபோல அடியார்க்கருளும் கைங்கரியத்தின் மகத்துவமாக அறுபத்து நான்கு ஆலமிலைகளில் பூசிக்கப்படும் பச்சையரிசி அமுதும் பயற்றங்கறியும் அமைகின்றது.

இவ்வண்ணம் பெரு மகிமையும் அற்புதங்களும் நிறையப்பெற்ற சந்நிதி வேலவனின் தேர்த்திருவிழா இன்றையதினம் வெகு சிறப்பாக நடைபெறுகின்றது.

வேண்டுவோர் வேண்டுவதை ஈந்தருளும் வேற்பெருமான் நம் எல்லோர்க்கும் தேரேறி ஆரோகணித்து பேரருள் செய்ய அவன்தாள் பணித்தேற்றுவோமாக

நம் தமிழர் பண்பாட்டு பாரம்பரியங்களும் ஆள்வோராகும் எதிர்பார்ப்புகளும் நம்மை நாமே விரைவில் நிறைவேறும்.

**சந்நிதி வசந்தம்**
**ஆசிரியர்**
**துரைகணேசமூர்த்தி.**

"அழகி னுருவே தமிழின் பெயரே
அமு தெனும் மருந்தே யடியரின் குருவே
தாயும் நீயே தந்தையும் நீ-யே
ஆதியும் நீயே யந்தமும் நீயே
நீயே யாவுமாய் நிறைந்தாயிறையே
நின் தாள் சரணமே சந்நிதி வேலனே"



### வடம் பிடிக்கின்றோம் உன் தேர் ஓட

சந்நிதி முருகனுக்கின்று தேர்திருவிழா-எம்
சந்ததி கொண்டாடும் ஊர்த் திருவிழா
வந்தவர் எம் வாழ்வைக் காத்திடுவரா- இல்லை
எந்தையர் வாழ்வினிலும் நடுத்தெருவிலா
செல்வச் சந்நிதியானே பதில்கூறய்யா
நல்ல காட்சிகளை இனியாவது காட்டைய்யா
வடம் பிடிக்கின்றோம் உன் தேர் ஓட
வரம் கொடுத்திடு எம் வாழ்க்கைத் தேரும் ஓட

புலோலியூர் வேல்நந்தன்

### சந்நிதி வேலன் தேரில் வருகின்றான்

தேவர்கள் சகிதம் தேரேறி வருகிறார்
தேவனாம் சந்நிதி முருகன் வருகிறார்
சந்நிதியானே அகதிகள் எம்மை
சந்திக்க வருகிறாயா எம் பாவங்களை
கட்டி இழுத்து எங்கே விடுவதையா
தேரிலிருந்து எம்பாவக் கண்ணீரை துடைத்திடப்பா
தேவர்கள் துயர்துடைத்தவா- சூரனை அழித்தவா
நம்பி வருகின்றோம் ஐயா எம்
துயர் தீருமையா சந்நிதி வேலவனே

ம.கணேசலிங்கம்
திணைப்புனம்
அல்வாய்.

### சந்நிதிச் சண்முகா

சஞ்சலம் தீர்த்திடும் சந்நிதிச் சண்முகா
சரவணபவ குகனே சற்குருவே
விஞ்சிடும் துன்பத்தில் வீழ்ந்த எம் விதிகளை
விலக்க முடியவில்லையே வேலவா
கஞ்சியைக் குடித்துக் கடினமாய் உழைத்தாலும்
கவலை கலையவில்லையே கந்தா
அஞ்சி முகாம்களில் அதிக நாள் அடைபட்டும்
அவலங்கள் ஆறவில்லையே அழகா
மிஞ்சிடும் வறுமையில் மிடிபட்டுக் கொண்டதால்
மீள முடியவில்லையே முருகா.

ஆ.வடிவேலு
தும்பளை

## அசாத்சாலிக்கு தேசியப்பட்டியல் நியமனம் கோரி ஆதரவாளர்கள் ஜனநாயக வழியில் போராட்டம்



அசாத் சாலிக்கு தேசியப் பட்டியல் நியமனம் கோரி அவரது ஆதரவாளர்கள் ஜனநாயக வழியில் போராட்டமொன்றை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி கண்டி மாவட்டத்தில் போட்டியிட தயாராக இருந்தார்.

ஏற்கனவே மத்திய மாகாண சபை உறுப்பினராக இருக்கும் அவர், தனது வெற்றி வாய்ப்பு குறித்து நம்பிக்கையுடன் அரசியல் நகர்வுகளை முன்னெடுத்திருந்தார்.

எனினும் அவருக்கு தேசியப் பட்டியல் நியமனம் வழங்கப்படும் என்ற ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையின் வாக்குறுதியை நம்பி தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து விலகிக்கொண்டு, தனது வாய்ப்பை இன்னொருவருக்கு விட்டுக் கொடுத்தார்.

தேர்தலின் பின்னர் தேசியப் பட்டியல் நியமனத்திலும் அசாத் சாலி புறக்கணிக்கப்பட்டுள்ளார். இது அவரது ஆதரவாளர்களுக்கு கடும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதன் காரணமாக அவருக்கு தேசியப் பட்டியல் நியமனம் வழங்கக் கோரி அவர்கள் ஜனநாயகப் போராட்டமொன்றை ஆரம்பித்துள்ளனர்.

அதன் ஒரு கட்டமாக நல்லாட்சியை உருவாக்கும் நோக்கில் முன்னின்று உழைத்தவர்கள் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்களை சந்தித்து அசாத் சாலிக்கான தேசியப் பட்டியல் நியமனம் தொடர்பில் நியாயங்களை எடுத்துக் கூறுவது இந்த ஜனநாயகப் போராட்டத்தின் நோக்கமாகும்.

இதன் ஒரு கட்டமாக கண்டி மாவட்ட தேசிய ஐக்கிய முன்னணி உறுப்பினர்கள் சிலர் நேற்று முன்தினம் காலை சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவர் மாதுளுவாவே சோபித தேரரை சந்தித்தனர். இந்த சந்திப்பு கோட்டை நாஹ் விகாரையில் இடம்பெற்றது.

இதன்போது ஐக்கிய தேசிய கட்சியினால் தேசிய பட்டியல் வழங்குவதாக வாக்குறுதியளிக்கப்பட்டு, ஏமாற்றப்பட்ட தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலிக்கு நியாயம் பெற்றுகொடுக்க முன்வர வேண்டும் என மாதுளுவாவே சோபித தேரரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. (இ-7)

## சிவன் மானுட மேம்பாட்டு நிறுவனம் ஏற்பாடு செய்த வதிவிட பயிற்சிநெறி

ஆன்மீகம் மற்றும் மானுட மேம்பாட்டுடன் தொடர்புடைய அறிவை மேம்படுத்தி சமூகத்தில் ஆன்மீகம் மற்றும் மானுட மேம்பாட்டுடன் தொடர்புடைய வேலைத் திட்டங்களை மேற்கொள்வதற்காக 5 நாட்கள் வதிவிடப் பயிற்சி நெறியொன்று தொண்டைமானாறில் அமைந்துள்ள செல்வச்சந்நிதியான் ஆச்சிரமத்துடன் சிவன் மானுட மேம்பாட்டு நிறுவனம் இணைந்து கடந்த 20 ஆம் திகதியிலிருந்து 24 ஆம் திகதி வரை நடத்தப்பட்டது. இப் பயிற்சியில் இலங்கையின் சில பகுதிகளிலிருந்து 39 பயிற்சியாளர்கள் கலந்து கொண்டனர்.

பல்துறைசார் வல்லுநர்கள் வளவாளர்களாக பங்கு பற்றி போதனைகளை வழங்கினர். அனைத்துப் பயிற்சியாளர்களுக்கும் சிவதீட்சை வழங்கப்பட்டது. அத்துடன் அறிமுகப் போதனைப் பயிற்சி, மௌனவிரதப் பயிற்சி ஆகிய செயற்பாடுகளும் இடம்பெற்றன. சின்மயாமிஷன் யாழ்ப்பாணம் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யாவால் வாழ்வின் விஞ்ஞானம் எனும் தொனிப்பொருளில் மிகவும் சிறந்த பயனுள்ள ஆன்மீகப் போதனை வழங்கப்பட்டது. இறுதிநாளான 23ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு சான்றிதழ்கள் வழங்கி பயிற்சியாளர்கள் ஊக்குவிக்கப்பட்டனர்.

சித்திரை மாதப் பயிற்சியில் கலந்துகொண்ட சிவ தொண்டர்கள் இணைந்து 2015.04.05 ஆம் திகதி அங்குரார்ப்பம் செய்த சிவதொண்டர் குடும்பத்தில் தற்பொழுது பயிற்சியை நிறைவு செய்தவர்கள் சுயவிருப்பில் தாமும் சிவதொண்டர் குடும்பத்தின் அன்பர்களாக இணைந்து கொண்டனர். அவ்வேளையிலேயே அவ் அமைப்பின் தலைவராக சு.தியாகலிங்கமும், செயலாளராக தா.நிகேதனும் தெரிவு செய்யப்பட்டனர். கலந்து கொண்டவர்களின் மாவட்டங்கள் அல்லது பிரதேசங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக இணைப்பாளர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

பயிற்சியை நிறைவு செய்தவர்களின் சமய சமூகத் தொண்டு வருங்காலத்தில் எவ்வாறு அவரவர் கிராமங்களில் அமையவேண்டும் என்பது தொடர்பாக நிறுவனத் தலைவர் இ.கலியுகவரதன் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து அனைவரும் இணைந்து கலந்துரையாடி முன்னெடுக்கவுள்ள தொண்டுகள் தொடர்பான முடிவுகளும் எடுக்கப்பட்டன.

இச்சிவதொண்டர் குடும்பத்தின் அன்பர்கள் தத்தமது மாவட்டங்களில் சமயம், சமூகம் சார்ந்த மேம்பாட்டுக்கான திட்டங்களை இனம்கண்டு சாத்தியமானவற்றை ஆரம்பிப்பதற்கான ஆலோசனைகளும் வழங்கப்பட்டுள்ளன. (இ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூந்தோட்டம் நலன்புரி நிலைய

# மக்களை மீள்குடியேற்றுவதற்கு வீட்டுத்திட்டத்துடன் கூடிய காணிகள்

## வழங்கி வைத்தார் சந்திரிகா





(குருமன்காடு)

வவுனியா, பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் வசிக்கின்ற மக்களுக்கு காணிகள் மற்றும் வீட்டுத் திட்டம் என்பன வழங்கிய நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

வவுனியா பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் யுத்தம் காரணமாக நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் இடம்பெயர்ந்த மக்களில் கடந்த 20 வருடங்களாக பல குடும்பங்கள் வசித்து வருகின்றன.

யுத்தம் முடிவடைந்து 6 வருடங்கள் கடந்த நிலையிலும் மீள்குடியேறுவதற்கு ஒரு துண்டு காணிகூட இல்லாமையால் மூன்று தலை முறைகளைக் கண்டும் இம் மூகாம் மூடப் படாத நிலையில் இருந்தது.

இந்நிலையில் தற்போது இம்முகாமினை மூடி இங்கு வசிக்கும் 104 குடும்பங்களுக்கும் வவுனியா, நெடுங்கேணி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சின்னடம்பன் இராசபுரம் பகுதியில் காணிகளும் வீட்டுத் திட்டமும் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

காணிகளுக்கான உறுதிப்பத்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளதுடன் அப்பகுதியில் 150 வீடுகளை அமைப்பதற்காக அடிக்கல் நாட்டும் நிகழ்வும் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

லைக்கா மொபைல் நிறுவனத்தின் ஞானம் அறக்கட்டளை நிறுவனம் இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து இந்த வீட்டுத் திட்டத்தை வழங்குகின்றது.

இதன் ஆரம்ப நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்மந்தன், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான துமிந்த திஸாநாயக்க, ஞானம் பவுண்டேசன் ஸ்தாபகர் திருமதி அல்லிராஜா, அதன் இயக்குனர் அ.சுபாஸ்கரன், வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (2-250)

# ஆத்ம ஞானத்தைத் தேடி

ஆன்மீகம் 264

## அஹங்காரத்தை விடுதல்

...ஆனால் துச்சாதனனோ, திரௌபதி தனது பாத்திரத்தை மிகவும் அருமையாக நடிப்பதாக நினைத்து தொடர்ந்து இழுத்துக் கொண்டிருந்தான்!

இறுதியில் திரௌபதி மேடையில் வெறும் அரைடிராயருடனும் இரவிக்கையுடனும் பெண் வேடத்தில் நின்று கொண்டிருந்தார்!

ஆனால், அவருடைய சமயோசித புத்தியால் ஏ கிருஷ்ணா! நீதான் எவ்வளவு கருணையுள்ளவன்;

அவமானத்திலிருந்து காப்பதற்காக என்னையே ஆணாக மாற்றி விட்டாயே என்று கதறினார்.

(பரமஹம்ச இதைச் சொல்லும் பொழுது குலங்கிக் குலுங்கிச் சிரிக்கிறார்) அந்தக் காட்சியை இப்பொழுது நினைத்தால்கூட என்னால் சிரிக்காமல் இருக்க முடியாது!

அதனால் புரிந்துகொள்ளுங்கள்... கல்வியறிவு இருக்கட்டும்.

ஆனால், அதனால் நீங்கள் இறுகி திடமாகிவிடாதீர்கள்.

உங்களுடைய உள்ளார்ந்த இயல்பு ஒரு நதி போன்றது- பிரவகித்துக் கொண்டே இருப்பது.

தன்னிச்சையான இயல்பே உங்கள் இயற்கை.

பெயரளவிலான கல்வியறிவினால் நீங்கள் அதை விட்டு வெகுநேரம் தள்ளிச் சென்றுவிட்டீர்கள்.

நீங்கள் கள்ளம் கபட மற்று வாழ்வீர்களானால், உங்களுக்கு ஒரு புதிய உலகம் திறக்கும்.

ஒவ்வொரு கணத்தையும் வெறு



மனே திறந்த நிலையில் எதிர்கொள்ளுங்கள்.

எதைப் பற்றியும் முன்கூட்டியே கருத்துக்களை வைத்துக்கொள்ளாதீர்கள்.

நீங்கள் [illegible] னால், எது[illegible] பைத் தராது.

அப்பொழுது நீங்கள் தினசரி உடன் வாழ்ந்து கொண்டிருக்கும் உங்கள் மனைவி கூட புதியவராகவும் புத்துணர்ச்சியையும் மகிழ்ச்சியையும் அளிப்பவராகவும் இருப்பதைக் காண்பீர்கள்.

இதுவே உங்கள் மனோபாவமாகி விடும் போது மற்றவரும் உங்கள் [illegible] தன்மையை உணர்ந்து, பல [illegible] வழிகளிலும் அவரும் உங்களிடம் திறந்த தன்மையுடன் இருக்கும் வாய்ப்புகள் நிறைய இருக்கிறது.

பிறகு, இது நீங்கள் ஒவ்வொரு கணமும் புத்துணர்ச்சியில் இருந்து புத்துணர்ச்சிக்கே செல்லும் ஒரு நேர்மறைச் சுழற்சியாகிவிடும்.

பின்னர் எங்கும் புத்துணர்ச்சி மட்டுமே இருக்கும்.

எதுவுமே சுவாரஸ்யமற்றிருக்காது!

நீங்கள் அஹங்காரத்துடன் வாழும் பொழுது உங்களைச் சுற்றி எப்பொழுதும் சில உடமைகள், சில ஆதரவுகள், சில மனிதர்கள் என்று ஏதாவது இருந்துகொண்டே இருக்க வேண்டும்.

இந்த ஆதரவுகளே உங்களுக்கு ஒரு அடையாளத்தைத் தருகிறது.

அவை இல்லாவிடில், நீங்கள் ஒரு இல்லாதவராகி விடுவீர்கள்.

ஒரு அரசன், அவனது இராஸ்யம் இருந்தால் மட்டுமே அரசனாக இருக்க முடியும்.

இன்னொரு பக்கம் ஒரு பரமஹம்சருக்கே எதுவும் தேவையில்லை. அவர் கால்களை நீட்டினால் உறங்குகிறார். கைகளை நீட்டினால் உணர்கிறார்!

அவர் வெறுமனே பிரபஞ்ச இருப்புத் தன்மையுடன் இசைந்து சென்று கொண்டிருக்கிறார். தன்னை உணர்ந்த ஒரு ஆத்மாவான அவர் தானே தனக்கு அரசனாக இருக்கிறார். அவருக்கு எந்த இராஜ்ஜியமும் தேவையில்லை!

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இ.போ.ச. சாரதி தாக்கப்பட்டமையைக் கண்டித்து ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பு

## பொலிசாரின் தலையீட்டையடுத்து சேவைகள் வழமைக்கு திரும்பின

(குருமன்காடு)

இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான வவுனியா டிப்போ சாரதிகள், நடத்துநர்கள் நேற்று அதிகாலை 5 மணியிலிருந்து முற்பகல் 11 மணிவரை பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

எனினும் வவுனியா பொலிசாரின் தலையீட்டை அடுத்து பணிப்புறக்கணிப்பு நிறுத்தப்பட்டு பேருந்து சேவைகள் அனைத்தும் வழமைக்குத் திரும்பின.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

வவுனியா நகரப் பகுதியில் சேவையில் ஈடுபட்ட தனியார் மற்றும் இலங்கை போக்குவரத்துச் சபை சாரதிகள், நடத்துநர்கள் ஆகியோருக்கிடையில் ஏற்பட்ட முரண்பாட்டை அடுத்து இலங்கை போக்குவரத்துச் சபை சாரதி தாக்கப்பட்டிருந்தார்.

இதன் காரணமாக காயமடைந்த சாரதி வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.



இவ்வாறு சிகிச்சை பெற்றுவந்த குறித்த சாரதியை நேற்றுமுன்தினம் மாலை பொலிசார் கைவிலங்கிட்டு வைத்துள்ளனர்.

குறித்த சாரதி கை விலங்கிடப்பட்ட நிலையில் பொலிசாரால் ஒரு குற்றவாளிபோல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதைக் கண்டித்தும் இது தொடர்பில் தனியார் போக்குவரத்து சாரதிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கவில்லையென தெரிவித்தும் வவுனியா சாலை சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் ஒன்றிணைந்து இலங்கை போக்குவரத்துச் சாலைக்கு முன்பாக ஒன்றுகூடி பதாகைகளை ஏந்தியவாறு ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் வெளியூர், உள்ளூர் போக்குவரத்து சேவைகள் இன்றி பொது மக்களும் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள், அலுவலர்கள் எனப்பலதரப்பினரும் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் தமது பயணத்தை மேற்கொண்டனர்.

எனினும் வெளியூர் பிரதேசங்களைச் சேர்ந்த பேருந்துகள் வவுனியா பேருந்து தரிப்பிடத்திற்கு பயணிகளுடன் வந்து சென்றமை குறிப்பிடத்தக்கது. (2-250-281)

# சமுதாய அடிப்படை வங்கி மாங்குளத்தில் திறந்து வைப்பு



(பனிக்கன்குளம்)

வாழ்வாதார எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி மாங்குளத்தில் நேற்று காலை 8.30 மணிக்கு ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் இ.குருபரனினால் திறந்து வைக்கப்பட்டது.

இவ்வங்கியானது எட்டு கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கான சேவைகளை வழங்குவதற்கே திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய மாங்குளம் பனிக்கன்குளம், திருமுறிகண்டி, இந்துபுரம், ஒலுமடு, அம்பகாமம், தச்சடம்பன், மணவாளன் பட்டமுறிப்பு ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்கள் இந்த வங்கியூடாக பயனடையவுள்ளனர்.

வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கியானது சமுர்த்தி பயனாளிகளுக்கான பணி முத்திரை கொடுப்பனவு, வாழ்வாதார கடனுதவிகள், வாழ்வாதார உதவிகள் ஆகியவற்றை வழங்கி மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்தோடு ஆரம்பித்து இயங்கிக் கொண்டிருக்கும் வங்கி என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரதேச செயலக வாழ்வின் எழுச்சி தலைமை முகாமையாளர், பிரதேச செயலக வாழ்வின் எழுச்சி கருத்திட்ட முகாமையாளர், மாங்குளம் வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி முகாமையாளர், வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர்கள், வாழ்வின் எழுச்சி பயனாளிகள் எனப் பல தரப்பினர் கலந்து கொண்டனர். (2-281)




முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரியின் பௌதீக தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு ஞானம் அறக்கட்டளையின் மூன்று கோடி ரூபா செலவில் ஆண், பெண்கள் ஆகியோருக்கான தங்குமிட விடுதிகள் அமைக்கப்பட்டு நேற்று முன்தினம் பாடசாலை சமூகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

ஞானம் அறக்கட்டளையின் நிறுவுநர் திருமதி. அல்லிராஜா பாஸ்கரன் மற்றும் லைக்கா மொபைல் நிறைவேற்றுப் பணிப்பாளர் சுபாஸ்கரன் அல்லிராஜா ஆகியோரினால் கையளிக்கப்பட்டுள்ளது.

(படங்கள்:- முள்ளியவளை செய்தியாளர்)

# களஞ்சியசாலையில் இடவசதியின்மையால் நெல் மூடைகள் கொள்வனவில் காலதாமதம்

(சிவநகர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் நெல் சந்தைப்படுத்தும் சபையினரால், விவசாயிகளிடம் உள்ள நெல் மூடைகள் கொள்வனவு செய்யும் நடவடிக்கைகள் கண்டாவளை நெற்களஞ்சியத்தில் வைத்து நடைபெற்று வருகின்றது.

இந்த நெல் மூடைகள் கொள்வனவானது ஐந்து ஏக்கர்களுக்கு உட்பட்டதான விதைப்பில் ஈடுபட்ட விவசாயிகளிடமிருந்து தலா 2 ஆயிரம் கிலோகிராம் வீதம் கொள்வனவு செய்யப்படுகின்றது.

இவ்வாறு கொள்வனவு செய்யப்படுகின்ற நெல் மூடைகளைக் களஞ்சியப்படுத்தும் களஞ்சியசாலையில் போதுமான அளவு இட வசதியின்மையால், நெற் கொள்வனவை மேற்கொள்வதில் காலதாமதம் ஏற்படுகின்றது.

இதனால் தூர இடங்களில் இருந்தும் நெல் மூடைகளை விற்பனைக்காக கொண்டு வரும் விவசாயிகள் மிகவும் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதோடு பல சிரமங்களையும் எதிர்கொண்டு வருவதாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

நெல் மூடைகளைக் களஞ்சியப்படுத்துவதற்கு ஏதுவாக தற்போது இயங்காத நிலையில் உள்ள கரைச்சி, தெற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் உருத்திரபுரம் பகுதியில் உள்ள நெற்களஞ்சியசாலையையும் நெற் சந்தைப்படுத்தும் சபையினர் பயன்படுத்துவதன் மூலம் விவசாயிகளின் நெல் மூடைகளை விரைவாக கொள்வனவு செய்வதோடு, நெல் மூடைகளை களஞ்சியப்படுத்தும் களஞ்சிய சாலைகள் போதாமையாகவுள்ளது என்ற குறைபாட்டையும் நிவர்த்தி செய்யக்கூடியதாக இருக்கும் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.


அத்துடன் குறிப்பிட்ட 2 ஆயிரம் கிலோகிராம் அளவிற்கு மேலதிகமாகவும் விவசாயிகளிடம் இருந்து நெல் மூடைகளைக் கொள்வனவு செய்ய ஆக்கபூர்வமான ஒழுங்குகளை மேற்கொள்ளலாம் எனவும் இம்மாவட்ட விவசாயிகள், சமூக ஆர்வலர்கள் ஆகியோரால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள், அரசாங்க அதிபர், அரசியல்வாதிகள் ஆகியோர் இவ்விடயத்தில் கூடிய கவனமெடுத்து விவசாயிகளை ஊக்குவிக்கும் முகமாக ஒழுங்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது. (2-254)

# பிரமோற்சவம்

(திருவையாறு)

கிளிநொச்சி வட்டக்கச்சி ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் கோவில் பிரமோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து திருவிழா நடைபெறும். இதில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 5 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். எதிர்வரும் 6 ஆம் திகதி திங்கட்கிழமை பூங்காவனத்திருவிழா இடம்பெறும். திருவிழாக்காலங்களில் காலை பூசைகள் காலை 9 மணிக்கும் மாலை பூசைகள் 5.15 மணிக்கு ஆரம்பமாகும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர் (2-273)




## 150 குடும்பங்களுக்கு காணி அனுமதிப்பத்திரங்கள் வழங்கி வைப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட திருமுறிகண்டி, இந்துபுரம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 150 குடும்பங்களுக்கான காணி அனுமதிப்பத்திரங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 3 மணியளவில் திருமுறிகண்டி கிராம அலுவலர் அலுவலகத்தில் வைத்து இடம்பெற்றது.

இந்நிகழ்வில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் இ.குருபரன் மக்களுக்கான காணி அனுமதிப்பத்திரங்களை வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது. (2-281)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசண்டையீனமும் அறிவின்மையுமே உயிரிழப்புக்களை அதிகரிக்கின்றன

## வீதி விபத்து குறித்து விழிப்புணர்வு அவசியம் என்கிறார் சத்திரசிகிச்சை நிபுணர் கோபிஷங்கர்



யாழ்.மாவட்டத்தில் வீதி விபத்துக்களும் அதனால் ஏற்படும் உயிராபத்துக்களும் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றன. அந்த வகையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் கடந்த காலங்களை விட அதிகமாக வீதி விபத்துக்கள் காரணமாக சிகிச்சைக்காக அனுமதிக்கப்படும் நோயாளர்



களும் அதனால் ஏற்படும் உயிரிழப்புக்களும் அதிகரித்து வருகின்றன என யாழ். போதனா வைத்தியசாலை என்பு முறிவு சத்திரசிகிச்சை நிபுணர் த.கோபிஷங்கர் தெரிவித்தார்.

சத்திரசிகிச்சை நிபுணர் கோபிஷங்கருடனான நேர்காணலில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

வீதி விபத்துக்கள் தொடர்பாக மக்களுக்கு போதியளவு விழிப்புணர்வு இல்லாத காரணத்தாலும் பாதிப்புக்கள் தொடர்பான அசண்டையீனத்தாலும் அறிவின்மையாலும் விபத்துக்களும் உயிரிழப்புக்களும் வேகமாக அதிகரித்துச் செல்கின்றன.

**நேர்காணல்:சோபிகா**

துக்கள் காரணமாக உயிரிழந்துள்ளார்கள். அதிலும் கடந்த 2 மாதங்களில் மட்டும் 48 பேர் உயிரிழந்துள்ளனர். அதாவது ஒரு நாளைக்கு ஒவ்வொருவர் என்ற வீதம் உயிரிழக்கின்றனர்.

அது உடனடி இறப்பாகவும் இருக்கலாம். அல்லது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட பின்னர் காயங்களின் தன்மை காரணமாகவும் உயிரிழப்புக்கள் நிகழ்கின்றனவாகவும் இருக்கலாம்.

விபத்துக்களில் பெரும்பாலானவை என்பு முறிவு, பல்வகை காயங்கள், தலை, மூளை காயங்கள் என்பன காரணமாக நோயாளர்கள் அனுமதிக்கப்படுகின்றனர்.

இவற்றில் உயிரிழப்புக்கள் அதிகமாக நடைபெறுவதற்கு அடிப்படைக் காரணங்களாக விபத்தின் தன்மை, சிகிச்சைக்காக நோயாளியைக் கொண்டு செல்வதில் தாமதம் மற்றும் நோயாளர்களின் அசண்டையீனம் என்பவற்றைக் குறிப்பிட முடியும்.

வீதி விபத்துக்கள் நிகழ்வதற்கு மிக முக்கிய காரணங்களாக தரமில்லாத வாகனப் பயன்பாடு, பயிற்சி பெறாத சாரதிகள் மற்றும் வீதி அமைவிடங்களின் தன்மை என்பன காணப்படுகின்றன.

அத்துடன் வீதி ஒழுங்குகளை மதித்து நடக்காமை, அவசர பிரயாணம், குறிப்பாக சிலர் தாம் வீதி விபத்துக்ளுக்கு உள்ளாகாத போதிலும் அவர்களது நடத்தையால் மற்

வர்களும் இணைந்து வீதி விபத்துக்கள் பற்றிய விழிப்புணர்வு கண்காட்சியும் உதிரம் கொடுப்போம் உயிரைக் காப்போம் எனும் தலைப்பில் இரத்ததான முகாமும் நடத்தவுள்ளோம்.

இதில் கடந்த காலங்களில் ஏற்பட்ட விபத்துக்கள் பற்றிய ஒளி நாடாக்களும் விபத்துக்களைக் குறைக்கக்கூடிய வழிமுறைகள் பற்றிய தெளிவூட்டல்களும் இடம் பெறவுள்ளது.

அத்துடன் கடந்த காலங்களில் பல உயிர்களை விபத்துக்களால் இழக்க நேரிட்டமையும் பலர் விபத்துக்களால் பெரும் பாதிப்புக்குள்ளானமை பற்றியும் புள்ளி விபரங்களுடன்

தியசாலையில் தனியான விபத்துச் சேவைப் பிரிவு ஒன்று ஆரம்பிக்கவேண்டிய தேவையிருக்கின்றது. அது ஆரம்பிக்கப்பட்டால் மக்களுக்கு முழுமையான சிறந்த சேவை வழங்க முடியும்.

விபத்துக்கள் ஏற்பட்டவுடன் தாமதமின்றி



கூடிய விளக்கங்கள் வழங்கப்படவுள்ளன.

இத்தகைய நிகழ்வுகளில் கலந்து கொள்வதன்மூலம் எதிர்காலத்தில் எமது பாதுகாப்பை நாமே உறுதி செய்யக்கூடியதாக இருக்கும்.

இது ஒரு ஆரம்பகட்ட முயற்சியாகக் காணப்பட்டாலும் பல தரப்பினருடன் இணைந்து இந்த விழிப்புணர்வு நடவடிக்கையை தொடர்ச்சியாக மேற்கொள்ளவுள்ளோம். வடக்கு மாகாண சபை மற்றும் பொலிஸாரின் உதவியுடன் பெரியளவில் இதைக் கொண்டு செல்வதற்கு ஆயத்தம் மேற்கொண்டுள்ளோம்.

யாழ்.மாவட்டத்தில் எந்தவொரு பகுதியில் விபத்து ஏற்பட்டாலும் அந்தந்தப் பகுதியில் உள்ள வைத்தியசாலைக்கு கொண்டுசென்று அவசர சிகிச்சைகள் அளிக்கப்படுகின்ற போதி

பாதிக்கப்பட்டவர்களை வைத்தியசாலையில் அவசர சிகிச்சைக்காக அனுமதிக்க வேண்டும்.

தாமதமாக சிகிச்சை பெறும் காரணத்தால் முள்ளந்தண்டு வடங்கள் பாதிக்கப்பட்டு இறப்புக்கள் ஏற்படுகின்றன. உரிய நேரத்தில் சிகிச்சை அளிக்கப்பட்டால் பெரும்பாலான உயிர்களை உயிராபத்தில் இருந்து பாதுகாத்துக்கொள்ள முடியும்.

இவ்வாறான வீதி விபத்துக்கள் இவற்றால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்ச்சியாக அதிகரிக்குமாயின் எதிர்காலத்தில் எமது சமுதாயம் ஊனமுற்றவர்களை அதிகமாகக் கொண்டதாகவும் குழந்தைகள் அநாதைகளாக ஆக்கப்பட்டும் எதிர்கால சந்ததியே கேள்விக்குரியதானதாகவும் மாறும் நிலை ஏற்பட வாய்ப்புள்ளது.



இந்த வருடத்தில் கடந்த 23 ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலையில் 18 ஆயிரம் பேர் வரையில் விபத்துக்களால் பாதிக்கப்பட்டு பல்வகைக் காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களில் 5ஆயிரத்துக்கு மேற்பட்டவர்க்ள் பலதரப்பட்ட என்பு முறிவுகள் காரணமாக அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

அதாவது மாதம் ஒன்றுக்கு 3 ஆயிரத்து 200 பேர் வரையில் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுகிறார்கள்.

அவர்களில் 2 ஆயிரத்து 700 பேர் இளம் வயதினராகவே காணப்படுகின்றனர்.

அதிகளவிலான விபத்துக்கள் மோட்டார் சைக்கிள்களினால் இடம் பெறுகின்றனவாகவே காணப்படுகின்றது. தற்போது அவற்றில் 20 வீதம் பெண்களே உள்ளடங்குகின்றனர்.

இந்த வருடத்தில் 70 பேர் வரையில் விபத்

றவர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை அறியாமல் செயற்படுவது பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன.

இதுவரை காலம் மக்கள் மத்தியில் வீதி விபத்துக்கள் தொடர்பான விளக்கங்களை எடுத்துச் செல்கின்ற அளவு பாரியளவிலான விழிப்புணர்வு நடவடிக்கைகளை நாம் எடுத்துச் செல்லவில்லை. ஆளணிப் பற்றாக்குறை, நேரப்பற்றாக்குறை மற்றும் வளப் பற்றாக்குறை காரணமாக அவற்றை முன்னெடுத்துச் செய்ய முடியவில்லை. ஆனால் இனிவரும் காலங்களில் கூடிய அக்கறை செலுத்தி மக்கள் மத்தியில் விபத்துக்கள் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோம்.

அந்த வகையில் ஆரம்ப கட்ட நடவடிக்கையாக எங்கள் பாதுகாப்பு எங்கள் கைகளில் என்ற தொனிப்பொருளில் யாழ். போதனா [illegible] பிரிவும் 35 [illegible]



லும் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலையில்தான் அதிகளவில் அனுமதிக்கப்படுகின்றார்கள்.

போதியளவு வளங்கள் இங்கு காணப்ப [illegible] வளப்பற்றாக்குறை இருக் [illegible] அதனால் யாழ். போதனா வைத்

எனவே எமது உயிரைப் பாதுகாப்பது எமது கடமை எனும் உணர்வு ஒவ்வொருவருடைய மனதிலும் ஆணித்தரமாகப் பதிய வேண்டும்.

எனவேதான் விபத்துக்களால் ஏற்படும் இழப்புக்களை தவிர்த்துக்கொள்ளமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் சமூகத்தை மறந்து ஐ.தே.க. செயற்படுகின்றது

## அசாத்சாலி அதிருப்தி

**மத்திய மாகாண சபை உறுப்பினர் பதவியிலிருந்து விலகுவதற்குத் தீர்மானித்துள்ளதாக தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவரும் மத்திய மாகாண சபை உறுப்பினருமான அசாத் சாலி தெரிவித்தார்.**

சர்வாதிகார ஆட்சியிலிருந்து நாட்டை விடுவித்து நல்லாட்சியை ஸ்தாபிக்க தொடர்ந்து முன்னின்ற எமது முழு முஸ்லிம் சமூகத்தையும் மறந்து இன்று ஐக்கிய தேசியக் கட்சி செயற்படுவதானது மிகவும் வருந்தத்தக்கது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதிகாரத்தை பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்தும் இயக்கத்தினால் கொழும்பில் நேற்று முன்தினம் புதன்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன் போது அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், கடந்த ஜனாதிபதிதேர்தல் மற்றும் நடைபெற்று முடிந்த பாராளுமன்ற தேர்தலில் நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்த நாம் பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுத்தோம். அவ்வாறான நிலையில் ஆட்சி மாற்றம் ஒன்றுக்காக நாம் முன்னெடுத்த செயற்றிட்டங்களில் நம்பிக்கை வைத்து அனைத்து முஸ்லிம் சமூகமும் நல்லாட்சியை தொடர்ந்தும் முன்னெடுக்க ஆதரவளித்தது. அத்துடன் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சர்வாதிகார மிக்க குடும்ப ஆட்சிக்கும் மகிந்தவின் அரசியல் மீளப்பிரவேசத்திற்கும் முற்றுப்புள்ளி வைக்க துணைநின்றனர்.

கடந்த ஜனவரி மாதம் வென்றெடுக்கப்பட்ட நல்லாட்சியை தொடர்ந்தும் முன்னெடுத்து செல்ல மக்கள் மீண்டும் வாய்ப்பு வழங்கியமைக்கு நாம் எனது நன்றியினை தெரிவித்து கொள்கின்றோம்.

பாராளுமன்ற தேர்தல் முடிவடைந்துள்ள இந்நிலையில் கட்சிகளின் தேசியல் பட்டியலின் கீழ் உள்வாங்கப்பட்டுள்ள உறுப்பினர்கள் தொடர்பில் மக்களிடையே பல்வேறு வகையான விமர்சனங்கள் தெரிவிக்கப்படுகின்றன. அந்தவகையில் இன்று பிரதான கட்சிகளின் தேசியப்பட்டியலில் நியமிக்கப்பட்டுள்ள உறுப்பினர்களை நோக்கினால் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கீழ் மூன்று முஸ்லிம் உறுப்பினர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர். அவர்களின் தனிப்பட்ட விடயங்கள் தொடர்பில் நாம் எதனையும் குறிப்பிட விரும்பவில்லை. இருந்த போதிலும் முஸ்லிம் சமூகத்தினரின் நன்மை கருதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மூன்று உறுப்பினர்களை தேசிய பட்டியலின் கீழ் கொண்டுவந்தமைக்கு நான் தனிப்பட்ட ரீதியில் ஜனாதிபதிக்கு நன்றியினை தெரிவித்துக்கொள்கின்றேன்.

மறுபுறம் நல்லாட்சியை ஸ்தாபிக்க தொடர்ச்சியாக முன்னின்ற முஸ்லிம் சமூகம் சார்பில் ஐக்கிய தேசிய கட்சியில் ஒருவரேனும் தேசியப் பட்டியலின் கீழ் உள்வாங்கப்படவில்லை. ஐக்கிய தேசியக்கட்சியின் இந்த செயற்பாடானது மிகவும் வருந்ததக்கது. முஸ்லிம் சமூகம் தொடர்பில் கட்சியானது தொடர்ச்சியாக அக்கறையற்ற முறையிலேயே செயற்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# புதிய நாடாளுமன்றில் ரோசி இல்லை

## கீதா குமாரசிங்க வருத்தம்

(கொழும்பு)

புதிய நாடாளுமன்றில் ரோசி சேனநாயக்கவுக்கு அங்கத்துவம் கிடைக்காமை குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் கீதா குமார சிங்க தனது வருத்தத்தை வெளியிட்டுள்ளார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

புதிய உறுப்பினராக நாடாளுமன்றத்தின் நடைமுறைகளை வெகு விரைவில் கற்றுக் கொள்வதற்கும் மக்களுக்கு சேவை செய்யும் நடவடிக்கைகளில் தன்னை அர்ப்பணிப்பதாக அவர் தெரிவித்தார்.

தான் நாடாளுமன்றத்திற்கு செல்லும் முதல் நாளில் ரோசி சேனநாயக்க இருந்திருந்தால் எவ்வளவு நல்லது என அவர் மேலும் தெரிவித்தார்.

(இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கிளிநொச்சி | சுன்னாகம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 80 | 100 | 100 | 90 |
| பச்சைமிளகாய் | 150 | 100 | 120 | 140 |
| தக்காளி | 80 | 100 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 60 | 60 |
| கோவா | 80 | 100 | 80 | 70 |
| கரட் | 100 | 100 | 150 | 120-200 |
| பூசணி | 40 | 40 | 60 | 40 |
| புடோல் | 40 | 40 | 60 | 40 |
| வாழைக்காய் | 80 | 80 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 80 | 100 | 120 | 60 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 120 | 120 |
| பாகற்காய் | 80 | 100 | 100 | 100 |
| வெண்டிக்காய் | 50 | 40 | 80 | 40 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | 100 | 100 |
| பயற்றங்காய் | 120 | 100 | 100 | 90 |
| லீக்ஸ் | 80 | 100 | 100 | 110 |
| பீற்றூட் | 30 | 30 | 60 | 40 |
| கறிமிளகாய் | 100 | 100 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 160 | 100 | 120 | 120 |
| போஞ்சி | 200 | 200 | 200 | 160 |
| கத்தரிதம்புள்ள | 80 | 40 | 80 | — |
| கீரை - 1 பிடி | 30 | 10 | 30 | 30 |
| தேசிக்காய் | 120 | 120 | 120 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 25-60 | 40-45 | 50 |
| இராசவள்ளி | 140 | 250 | — | — |
| வெங்காயப்பூ | 200 | 150 | 200 | 130 |
| முள்ளங்கி | 40 | 60 | 80 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 30 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 10 |

# facebook (f) :.பேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 471

ஸ்ரீந்துஜன் சிந்தா




சுலக்சனா மனோ





ஹாட் பெயின்



*100 கிலோ அரிசி மூட்டை தூக்குபவனுக்கு அதை வாங்க சக்தி இல்லை.*

*100 கிலோ அரிசி மூட்டை வாங்குபவனுக்கு அதை தூக்க சக்தி இல்லை.*

டிலானி புவி




சிந்தியா சிந்தியா




நீங்கள் பார்த்த :.பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசியப் பிரச்சினை விடயத்தில் உரிய முறையில் செயற்படவில்லை

## மகிந்த அரசாங்கம் குறித்து மனம்திறக்கிறார் கெஹலிய

மகிந்த ராஜபக்ஷவுடன் சேர்ந்து மைத்திரிபால சிறிசேனவும் தேர்தல் மேடையில் ஏறியிருந்தால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நிச்சயம் ஆட்சி அமைத்திருக்கும். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினதும் ஸ்ரீலங்கா சுதந்திரக்-கட்சியினதும் தலைவரான மைத்திரிபால சிறிசேன தேர்தல் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்தால் நாங்கள் நிச்சயம் ஆட்சி அமைத்திருப்போம் என்று கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

கடந்த 2010 முதல் 2015 வரையான காலப்பகுதியில் தேசிய பிரச்சினை தீர்வு விவகாரத்தில் நாங்கள் பின்னடைவையே சந்தித்திருக்கிறோம். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் மனதை வெல்வதற்கு எம்மால் முடியவில்லை. அந்த மக்களின் மனக்குழப்பங்களுக்கு தீர்வு காண முடியாமல் போய்விட்டது. இது பின்னடைவு தான் என்றும் அவர் தெரிவித்தார்.

நடந்து முடிந்த தேர்தல் முடிவுகள் மற்றும் தேசிய அரசாங்க செயற்பாடு என்பன தொடர்பில் விபரிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

**கேள்வி:- தேர்தல் முடிவுகள் தொடர்பில் உங்கள் நிலைப்பாடு என்ன?**

பதில்:- நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தல் முடிவுகளை நாங்கள் ஏற்றுக் கொள்கின்றோம். தேர்தல் மிகவும் சுயாதீனமாகவும் நடைபெற்றது. அந்த வகையில் தேர்தல்கள் ஆணையாளரின் அறிவிப்பையும் முழுமனதுடன் ஏற்றுக்கொள்கின்றோம். எவ்வாறெனினும் தேர்தல் முடிவுகளில் மூலம் பிரபலமான எதிர்க் கட்சி உருவாகியுள்ளது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு 95 ஆசனங்கள் கிடைத்துள்ளன. இதன்மூலம் சிறந்த எதிர்க்கட்சியே உருவாகியுள்ளது. வழமையாக எதிர்க்கட்சிக்கு இந்தளவு ஆசனங்கள் கிடைப்பதில்லை. ஆனால் இம்முறை அதிக ஆசனங்கள் கிடைத்துள்ளன.

**கேள்வி:- தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ உங்கள் கட்சியில் மிகப் பிரதான கதாபாத்திரத்தை வகித்திருந்தாரே?**


பதில்:- ஆம், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தேர்தலில் எமது கட்சியில் பிரதான பாத்திரத்தை வகித்திருந்தார். அவரால்தான் இந்தளவு ஆசனங்களை நாங்கள் பெற்றுள்ளோம். இல்லாவிடின் குறைந்த ஆசனங்களையே பெற்றிருப்போம். ஆனால் மகிந்த ராஜபக்ஷவுடன் சேர்ந்து மைத்திரிபால சிறிசேனவும் தேர்தல் மேடையில் ஏறியிருந்தால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நிச்சயம் ஆட்சி அமைத்திருக்கும். அதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினதும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினதும் தலைவரான மைத்திரிபால சிறிசேன தேர்தல் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்தால் நாங்கள் நிச்சயம் ஆட்சி அமைத்திருப்போம்.

**கேள்வி:- எவ்வாறெனினும் தற்போது தேசிய அரசாங்கம் அமையப்போகிறதே?**

பதில்:- ஐக்கிய தேசியக்கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் நேர்மையாக செயற்பட்டால் நிச்சயம் இந்த தேசிய அரசாங்க செயற்பாட்டின் ஊடாக இந்த வெற்றியைக் காண முடியும். இரண்டு பக்கங்களிலும், நேர்மை வெளிப்படுத்தப்படாவிடின் என்ன நடக்கும் என்று கூற முடியாது.

**கேள்வி:- எதிர்வரும் ஐந்து வருடங்களை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

பதில்:- ஐந்து வருடங்களை நான் நன்றாகவே பார்க்கின்றேன். ஆனால் நான் முதலில் கூறியது போன்று இரண்டு தரப்பிலும் நேர்மை வெளிக்காட்டப்படுமானால் வெற்றியை நோக்கிப் பயணிக்கலாம் என்ற நம்பிக்கை உள்ளது. எவ்வாறெனினும் தற்போது மிகவும் தெளிவான குழப்பத்தில் நாம் இருப்பதாகவே உணர்கின்றேன். நாடு அபிவிருத்தியில் பின்னடைவு கண்டு விடுமோ என்ற பயம் எமக்கு உள்ளது.



**கேள்வி:- எதிர்வரும் ஐந்து வருடங்களில் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண முடியும் என கருதுகிறீர்களா?**

பதில்:- இந்த இடத்திலும் நேர்மை என்ற விடயமே பிரதான இடத்தை வகிக்கிறது. தமிழ் தேசியக் கூட்டமைப்பும் அரசாங்கமும் நேர்மையாக இந்த விடயத்தில் செயற்பட்டால் நிச்சயம் தீர்வைக் காண முடியும்.

**கேள்வி:- 2010 முதல் 2015 ஆம் ஆண்டுவரையான காலப் பகுதியில் உங்களுடைய முன்னைய அரசாங்கம் சரியாக செயற்பட்டதா?**

பதில்:- அதிகமான விடயங்களில் எமது அரசாங்கம் இக்காலப்பகுதியில் சரியாகவே செயற்பட்டது. ஆனால் ஒரு சில விடயங்களில் நாங்கள் சில பின்னடைவுகளை சந்தித்திருந்தோம் என்பதை ஏற்றுக் கொள்கிறோம்.

**கேள்வி:- அவ்வாறு பின்னடைவை சந்தித்த ஒரு சில விடயம் என்னவென்று கூற முடியுமா?**

பதில்:- தேசிய பிரச்சினை தீர்வு விவகாரத்தில் நாங்கள் பின்னடைவையே சந்தித்திருக்கிறோம். நாட்டை அபிவிருத்தி செய்வதிலும் மக்களின் கல்வி சுகாதாரத்தை மேம்படுத்துவதிலும், நாங்கள் முன்னேற்றமடைந்திருக்கிறோம். எனினும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் மனதை வெல்லுவதற்கு எம்மால் முடியவில்லை. அந்த மக்களின் மனக்குழப்பங்களுக்கு தீர்வு காண முடியாமல் போய்விட்டது.

அந்த விடயத்தில் நாங்கள் பின்னடைவை சந்தித்தோம் என்பதை ஏற்றுக் கொண்டே ஆகவேண்டும். ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் எமது அரசாங்க காலத்தில் எமக்கு ஒத்துழைப்புடன் செயற்படவில்லை.


அவர்களும் எம்முடன் ஏட்டிக்குப் போட்டியாகவே செயற்பட்டு வந்தனர். எனவே, இரண்டு தரப்பினரும் இந்த பின்னடைவுக்கு பொறுப்புக்கூறியாக வேண்டும் என்றார்.


# வடக்கு கிழக்கும் சமஷ்டி தீர்வும்





## செய்தவையும் செய்யக்கூடியவையும்





...இந்த உத்தேச திட்டத்தின்படி அதாவது - சம்பந்தன் ஆட்களுக்கு சமஷ்டியைக் கொடுக்கப் போகிறார் என்று அண்மைய தேர்தல் பிரசாரத்தில் பேசிய தினேஷ் குணவர்த்தனவின் மக்கள் ஐக்கிய முன்னணியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் சேர்ந்த ஜனநாயக முன்னணி புலிகளுடன் பேசி - வடக்குக் கிழக்கு மாகாணங்கள் இணைந்த பிரதேசத்தில் முஸ்லிம்கள் அறுதிப் பெரும் பான்மையாக இருக்கும் அலகு களைத் தவிர - தமிழர்கள் அறுதிப் பெரும் பான்மையாக இருக்கும் இடத்தில் இவ்வமைப்பு இருக்கும்.

இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் கூட தற்காலிகம் என்ற ஒரு பதம் பாவிக்கப்பட்டது.

ஆனால் தினேஷின் - மக்கள் ஐக்கிய முன்னணி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முஸ்லிம் காங்கிரஸ்- தமிழ்க் காங்கிரஸ் தலைவர்களின் முன்னெடுப்பில்- உருவான இந்த உத்தேசத் திட்டத்தில் "தற்காலிகம்" என்ற சொல் பாவிக்கப்படவேயில்லை .

எனவே வடக்குக் கிழக்கு இணைந்தமை - விரும்பியோ விரும்பாமலோ இந்த நாட்டின் சமூக அரசியல் பிறப்புரிமை அலகுகளில் இணைந்த ஒன்றாகிவிட்டது.

திருமதி விஜயகாலவுக்கு முன்னரே ஐக்கிய தேசியக் கட்சியுடன் (1956 இல் வடக்குக் கிழக்கிற்கு மை தீட்டப்பட்டமை) இணைந்த ஒன்றை சிங்களத் தலைமைகளே (தினேஷ் குணவர்த்தன வரையில்) ஏற்றுக் கொண்டுள்ளன.

சுய கட்சி அரசியல் நலன்களை விட்டு நல்ல முடிவுகளை தீர்க்கமானவையாக எடுக்க வேண்டும்.

அதற்கு நாட்டின் தலைவர்கள் எனப்படுபவர்கள் அனைவரும் இன்று ஒத்துழைப்பது இன்றி அமையாதது.

ஆயின் முதலில், இந்தக் கட்சிகளுடன் இணைந்து செயற்படுகின்ற தமிழர்கள் முயல வேண்டும். முயல்வார்களா? (முற்றும்)

எஸ்.எம்.வரதராஜன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியால் தனித்து ஆட்சியமைக்க முடியும்

## துமிந்த திஸாநாயக்க தெரிவிப்பு



(கொழும்பு)

**ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் தனித்து ஆட்சியமைக்க முடியும் என்பதை ஐக்கிய தேசிய முன்னணி புரிந்து கொள்ள வேண்டும். ஜனாதிபதியின் முடிவை சுசில் பிரேம ஜயந்த ஏற்றுக் கொண்டு செயலாளர் பதவியை இராஜினாமா செய்தது வரவேற்புக்குரியது என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

தேசிய அரசை ஏற்படுத்த முடியாவிட்டால் தனியே ஆட்சியமைக்க தயார் என ஐ.தே.கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான கபீர் ஹாசிம் தெரிவித்துள்ளமை தொடர்பில் துமிந்த திஸாநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசிய முன்னணிக்கு மட்டுமல்ல ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் தனித்து ஆட்சியமைக்க முடியும் என்பதை அக் கட்சி புரிந்து கொள்ள வேண்டும்.நாம் தனித்து ஆட்சியமைப்பதில் எந்தவிதமான சிக்கலும் இல்லை.

நாட்டினதும், மக்களினதும் நன்மை கருதி நல்லாட்சியை தொடரும் நோக்கிலேயே தேசிய அரசு தொடர்பாக ஐக்கிய தேசிய முன்னணியுடன் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது.

இந்த நிலையில் ஐக்கிய தேசிய முன்னணி தனித்துச் செல்ல முடிவெடுத்தால் அதில் பிரச்சினை எதுவும் இல்லை. அதேவேளை எமக்கும் தனித்து ஆட்சியமைக்க முடியும்.ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து சுசில் பிரேம ஜயந்த இராஜினாமா செய்துள்ளதை வரவேற்கின்றேன்.

இது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எடுத்த முடிவுக்குக் கிடைத்த அங்கீகாரமாகும்.அத்தோடு எமது கட்சியின் ஒற்றுமைக்கும் இது சிறப்பான முன்னுதாரணமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# 'மகிந்த குழு புதிய அணியாக வரும்'

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் "மகிந்த" சார்ந்த குழுவினர் புதிய அணியொன்றை ஏற்படுத்தி பாராளுமன்றத்தில் தனித்துவமான எதிர்க்கட்சியாக செயற்படப் போவதாக தூய்மையான ஹெல உறுமயவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

விரைவில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் வெற்றிலைச் சின்னமும் காணாமற் போய்விடுமென்றும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக உதய கம்மன்பில மேலும் தெரிவிக்கையில்,

பொது ஜன ஐக்கிய முன்னணிக்கும் அதன் கதிரைச் சின்னத்திற்கும் நடந்த கதியே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கும் வெற்றிலைச் சின்னத்திற்கும் ஏற்படவுள்ளது. இன்று இம்முன்னணியிலிருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வெளியேறி ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து தேசிய அரசு அமைக்கவுள்ளது.

அத்தோடு தேர்தல் முடிந்த பின்னர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கட்சித் தலைவர்கள் கூட்டமோ மத்திய செயற்குழுவோ கூட்டப்படவில்லை. திட்டமிட்டு வேண்டுமென்றே கூட்டங்கள் கூட்டப்படாமல் உள்ளன.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை இல்லாதொழிக்க முடியாது. ஏனென்றால் 95 எம்.பிக்கள் 300 இற்கு மேற்பட்ட மாகாணசபை உறுபபினர்கள் உள்ளனர். இவர்களில் வெற்றிடம் ஏற்படும்போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளரால் தான் வெற்றிடம் நிரப்பப்பட வேண்டும்.

தேர்தல்கள் ஆணையாளரும் இதனையே ஏற்றுக் கொள்வார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை செயலிழக்கச் செய்யும் நடவடிக்கை தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இது தொடர்ந்தால் பொது ஜன ஐக்கிய முன்னணிக்கு ஏற்பட்ட கதியே உருவாகும். இவ்வாறானதோர் சூழ்நிலையில் தினேஷ் குணவர்தன தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி, விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி, எமது தூய்மையான ஹெல உறுமய சமசமாஜக்கட்சி கம்யூனிசக் கட்சி என அனைத்து கட்சிகளும் இணைந்து பொது எதிர்க்கட்சியாக செயற்பட தீர்மானித்துள்ளோம்.

நாமனைவரும் பாராளுமன்றத்தில் பொது எதிர்க்கட்சியாக செயற்படவும் தீர்மானித்துள்ளோம். எதிர்க்கட்சித் தலைவர் யாரென்பது தொடர்பில் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றோம்.

ஆனால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று நிறைவேற்று அதிகாரத்தை முழுமையாக பயன்படுத்தி சர்வாதிகாரியாகி செயற்படுகின்றார்.ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர்களையும் ஜனாதிபதி தனது அதிகாரத்தை பயன்படுத்தி நீக்கினார்.எனவே எதிர்க்கட்சித் தலைவரையும் ஜனாதிபதி தனக்குள் நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்தி நியமிக்கும் நிலைமை தோன்றலாம் என அவா மேலும் தெரிவித்தார். (இ-7)

## மாணவன் மீது தாக்குதல்

மினுவாங்கொடையினை சேரந்த க.பொ.த உ/த பரீட்சை மாணவன் ஒருவன் பரீட்சை நிறைவடைந்து, வீட்டுக்கு செல்லும் வழியில், இனம்தெரியாத குழுவொன்றினால் கடுமையாக தாக்கப்பட்டுள்ளார்.

காயமடைந்த மாணவன், தற்போது கம்பஹா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என பொலிஸ ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். ஆட்டோ ஒன்றில் வந்த குழு ஒன்றினாலேயே மேற்படி மாணவன் தாக்கப்பட்டுள்ளதாகவும், சந்தேக நபர்கள் இன்னும் கைது செய்யப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காயமடைந்த மாணவன், மினுவாங்கொடை பன்சில்புர எனும் இடத்தினை சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# ஜப்பானின் பிரதமர் ரணிலுக்கு வாழ்த்து

ஜப்பானின் பிரதமர் ஷின்சோ அபே, இலங்கையின் பிரதமராக பதவியேற்ற ரணில் விக்கிரமசிங்கவிற்கு வாழ்த்து செய்தி அனுப்பியுள்ளார். கொழும்பில் அமையப்பெற்றுள்ள, ஜப்பான் தூதரகத்தினால், வெளியிட்ட அறிக்கையின் ஊடாகவே இவ்வாழ்த்துச் செய்தி தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் பிரதமரின் பதவியேற்பிற்கும், சுதந்திரம் மற்றும் ஜனநாயக ரீதியான பாராளுமன்ற தேர்தல் நடத்தியமைக்கும் வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

புதிய அரசாங்கத்தின் ஊடாக, ஜப்பானுக்கும், இலங்கைக்கும் இடையிலான உறவு மிக நெருக்கமாக்கப்படும் எனவும், இலங்கையின் தேசிய ஒற்றுமை மற்றும் பொருளாதார வளர்ச்சி என்பவற்றிற்கு ஜப்பானின் ஆதரவு தொடரும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(இ-7)

# இன்று ஒரு தகவல்

## உயிர்கள் இடத்தில் அன்பு வேண்டும்

அசுரத்தனத்தோடு அலையும் ஒருவனைத் தேவனாக மாற்றும் வலிமை பகவத்கீதையின் பதினாறாவது அத்தியாயத்திற்கு இருக்கிறது. அதை ஒவ்வொரு மனிதனும் ஊன்றிப்படிக்கவேண்டும்.

நமது மனத்தில் படிந்திருக்கின்ற அறியாமை, அசுரத்தனம் என்கின்ற குப்பைகளை எரிக்கிற நெருப்பு கீதையில் இருக்கிறது. ஸ்ரீசத்திய சாய் கீதாவாகினி என்கின்ற கீதைப் பேருரையில் கீதையில் மொத்தம் எழுநூறு தீக்குச்சிகள் இருக்கின்றன. மெய்யறிவு என்ற தீயை இதில் எந்தக்குச்சியிலிருந்தும் பற்ற வைக்கலாம். அனுபவம் என்ற கல்லில் அதை தேயுங்கள் அதுபோதும் என்கிறார். கீதையின் எழுநூறு சுலோகங்களையும் எழுநூறு தீக்குச்சிகளாக வர்ணிக்கிறார்.

கீதையைப்படித்தால் மட்டும் போதாது. அதை நடைமுறைப்படுத்த வேண்டும். **கற்க கசடற** என்ற வள்ளுவர் **கற்றவை கற்றபின நிற்க அதற்கு தக** என்றார். நம்மவர் கீதையைப் படிக்கின்றார்கள். பின்பற்றுவுது இல்லை. இதையும் ஸ்ரீ சத்யசாயி அபாரமாகக் கேலி செய்கின்றார். வடமொழியில் மூளைக்கு மஸ்தகம் என்று பெயர். நூலுக்கு புஸ்தகம் என்று பெயர். புஸ்தகத்தை மஸ்தகத்தில் மாற்றுவதால் எந்தப்பயனும் இல்லை. அதை ஏற்று நடத்திக் காண்பியுங்கள் என்கிறார் அவர்.

கோள் சொல்லாதவன், பிராணிகள் மீது தயை காட்டுபவன், பேராசை இல்லாதவன், மென்மை உள்ளவன், சபலமற்றவன் தேவனாகிறான் என்று பதினாறாவது அத்தியாயம் இரண்டாவது சுலோகம் கீதையில் பேசுகிறது.

அபிராமி அந்தாதி அருளிய அபிராமி பட்டர் தெய்வகுணம் மிக்கவர். ஆனால் அவர் தகுதி அறியாதவர்கள் சரபோயி மன்னரிடம் அவரைப்பற்றி கோள் சொல்லினர். காளிதாசன் மீது போஜ மகாராஜா அன்பு பூண்டிருந்தார். காளிதாசன் மீது பொறாமை கொண்ட புலவர்கள் அவன் மீது கோள் சொல்லினர். தான்ஸேன் என்ற இசைஞானி மீது அக்பர் மரியாதை வைத்திருந்தார். அக்பரிடமிருந்து அவரைப் பிரிக்க இசை வாணர்கள் கோள்மூட்டினர்.

கோள் மூட்டுதல் கீழான குணம். மோலோர் அதை விரும்புவதில்லை. அதனால் பாதிக்கப்படுவதில்லை. வேலைக்காரிகள் தங்களை தக்க வைத்துக் கொள்ள மாமியார் பற்றி மருமகளிடமும் மருமகள் பற்றிமாமியாரிடமும் கோள் மூட்டுவதுண்டு. மூடப் பெண்கள் அதை நம்பி சண்டை போடுகிறார்கள்.

முதலாளி பற்றி அவர் மனைவியிடம் கோள் மூட்டிக் காசு கறக்கிற சாரதிகள் சிலரை நான் பார்த்ததுண்டு. நண்பர்களை கோள் மூட்டிப் பிரிக்கிற நயவஞ்சகர்கள் பங்குதாரர்களை பகைவர்களாக்குகிற பாவிகள் பலரை உலகம் பார்த்திருக்கிறது.

கோள் மூட்டுபவனும் அதைக்கேட்டு நடப்பவனும் அசுர சாம்ராச்சியத்தைப் பூமியில் நிலைநிறுத்துபவர்கள்.

அடுத்து விலங்குகள்மீது தயை காட்டுதல் தெய்வ குணம் எனப்படுகிறது. சிலபேர் நாய்களைக் கல்லால் அடிப்பார்கள்.

மகான்கள் கருணையாகவே விலங்குகளை நடத்துவார்கள். சீரடி சாய்பாபா தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட குதிரையை அதன் காவலன் அடித்தபோது தாம் அடிபட்டதாகத் தம் முதுகைக் காட்டினார். தம்மோடு இருந்த நாய்களுக்கு உணவிட்டுத் தடவிக் கொடுக்காமல் அவர் சாப்பிட்டதில்லை.

ராமன் அணிலுக்கு அருள் பாலித்தார் என்பது செவிவழிக் கதை. அண்மைக் காலத்தில் வாழ்ந்த ரமண மகாரிஷி தம்முடன் வாழ்ந்த பல விலங்குகளையும் மறுபிறவியின்றி முக்தி பெறச் செய்தார். ரமண ஆசிரமத்தில் அந்த விலங்குகளின் சமாதி கூடவுள்ளன. கூண்டில் அடைக்கப்பட்ட பறவைகளை விலை கொடுத்து வாங்கி அவற்றைத் திறந்து விடுவதை வாடிக்கையாகக் கொண்ட சில பெரிய மனிதர்களை நான் அறிவேன்.

உயிர்களிடத்தில் அன்பு வேண்டும் என்றார் மகாகவி பாரதி. விசப்பாம்பு ஒன்றை மந்திரத்தால் ஒருவர் கட்டியதற்காக வள்ளலார் வருந்தினார். மீன்களைக் கொல்லும் தூண்டிலையும் வலைகளையும் கண்டபோதெல்லாம் கண்ணீர் விட்டுக் கதறினார் அவர்.

கால் ஒடிந்த ஆட்டுக்குட்டியைத் தோளில் போட்டுக்கொண்டு புத்தரும் இயேசுவும் நடந்து போன வரலாறுகள் உண்டு. கோவிந்தன் கோபாலன் என்ற பெயர்களுடன்ஸ்ரீகிருஸ்ணன் பசுக்களைக் காப்பாற்ற கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்தான் என்கிறது ஸ்ரீமத் பாகவதம்.

விஞ்ஞான ஆராய்ச்சியாளர் ஒருவர் பூனை வளர்த்தார். அது எரியும் மெழுகுவர்த்தியைத் தட்டி விட்டதால் அவரது நெடு நாளைய ஆராய்ச்சிக் காகிதங்கள் எரிந்து விட்டன. நியாயமாக பூனை மீது கோபம் வந்து பலர் கொன்றே போட்டிருப்பார்கள். அவரோ நெருப்பைப் பார்த்து பயந்த பூனையைத் தடவிக் கொடுத்து அதன் பயத்தை நீக்கப் பாடுபட்டார் என்று படித்திருக்கிறேன்.

இவர்களது இந்தப் பண்புகள் அவர்களைத் தெய்வங்களாக ஆக்கிவிட்டன: பிராணிகள் மீதுள்ள தயை பலருக்குள் இருந்த தெய்வீகத்தைத் கிளறிவிட்ட வரலாறுகள் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்படுகொலை விடயத்தில் மௌனம் சாதிக்கலாமா?

ஈழத் தமிழர் பிரச்சினை என்பது இலங்கையில் இருக்கிற தமிழர்களின் பிரச்சினை.....!

அவர்களாகவே அதற்கு முடிவு கட்டிக்கொள்ள விடுவது தான் நியாயம்....! இப்படியொரு பார்வை தமிழக பத்திரிகையாளர்கள் பலருக்கும் இருந்தது, இன்றும் இருக்கிறது.

பொதுவாக பார்த்தால், இந்தக் கருத்தில் எந்தத் தவறும் இல்லை என்றே தோன்றும். உற்றுப் பார்த்தால் தான், இதிலிருப்பதை உணர முடியும்.

"ஈழத்தமிழர் பிரச்சினை என்பது இலங்கையில் இருக்கிற தமிழர்களின் பிரச்சினை" என்பதை, இந்திய இராணுவம் ராஜீவ்காந்தியால் ஈழத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டபோது அதைப் படித்த இந்தப் பத்திரிகையாளர்கள் சுட்டிக்காட்டினார்களா இல்லையா?

விடுதலைப் புலிகள் இயக்கம் என்பது, ஒரு வினோதமான அமைப்பு அல்ல! ஆயுதம் தாங்கிப் போராடிய விடுதலைப் போராட்ட இயக்கங்களை வரலாற்றின் வழி நெடுகிலும் பார்க்க முடிகிறது.

அவற்றில் ஒன்றுதான் - விடுதலைப் புலிகள் இயக்கம்.


ஒரு விடுதலைப் போராட்ட இயக்கத்துக்கும், ஒரு இன வெறி இராணுவத்துக்கும் இடையில் நடக்கும் போரில், சிங்கள இராணுவத்தின் கூலிப்படையாக இறங்க வேண்டிய அவசியமென்ன - என்று ராஜீவை இவர்கள் கேட்டார்களா? இல்லையா?

2009 இல் தமிழ் மக்களை இலங்கை இராணுவம் கொன்றது. அதற்குத் தேவையான சகல ஒத்தாசையையும் செய்தவர்கள், இந்தியா உள்ளிட்ட 20 நாடுகள். அப்போதிருந்த முதல்வருக்குத் திரைப்பட நட்சத்திரங்கள் நடத்திய வண்ண ஜிகினா விழாக்களையெல்லாம் விலாவாரியாகச் விவரித்தவர்கள்,

"ஒரு இனப்படுகொலைக்கு இத்தனை நாடுகளுடன் சேர்ந்து இந்தியாவும் துணை போவது நியாயமா" என்று நச்சென்று நாலு வார்த்தை கேட்காதது ஏன்?

ஐந்தாயிரம் ஆறாயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்து, பத்திரிகையாளனும் இயக்குனருமான கலெம் மெக்ரே என்கிற மானுடன் ஈழத் தமிழருக்கு இழைக்கப்பட்ட அநீதியை ஆதாரங்களுடன் அம்பலப்படுத்த முடிகிறது.

26 ஆவது மைலில் இருக்கும் நம்மால் எதுவுமே கிழித்திருக்க முடியாது என்றா நினைக்கிறீர்கள்! கொல்லப்பட்ட அப்பாவித் தமிழர்களின் எண்ணிக்கை நாற்பதாயிரமா, எழுபதாயிரமா, ஒன்றரை இலட்சமா





என்பதல்ல கேள்வி! தமிழர்கள் என்கிற ஒரே காரணத்துக்காக நூறே நூறு தமிழர்கள் கொல்லப்பட்டிருந்தாலும் அது இனப்படு கொலைதான்!

ஒரே ஒரு கொலை செய்தவன் கூட தன்னைத் தானே விசாரித்துக் கொள்ள முடியாது என்றால், இனப்படுகொலை செய்தவன் மட்டும் எப்படி தன்னைத்தானே விசாரித்துக் கொள்ள முடியும்! இந்த விடயத்தில் கூட மௌனம் சாதிக்கலாமா பத்திரிகையாளர்கள்?

Financial Express போன்ற சில பத்திரிகைகள் இதில் விதிவிலக்கு. "தமிழர்களுக்கான அரசியல் தீர்வு எவ்வளவு முக்கியமோ, அதே அளவுக்கு 2009 இல் நடந்த படுகொலைகள் பற்றிய நம்பகமான விசாரணையும் முக்கியம்" என்று இரண்டு நாட்களுக்கு முன் தனது தலையங்கத்தில் எழுதியிருக்கிறது.

இந்தப் பத்திரிகைக்கு எதிராக வேறொரு ஆங்கிலப் பத்திரிகை. உதவி செய்யாவிட்டாலும் கூட பரவாயில்லை, உபத்திரவம் செய்யாதே - என்று நாம் வேதனையுடன் வேண்டுகோள் விடுக்க வேண்டியுள்ளது. 2009 ஆம் ஆண்டு இனப் படுகொலையை மூடி மறைக்க முயலுகிறது அது.

ஒரு திட்டமிட்ட இனப்படு கொலை நடந்து முடிந்த பின்னால், "நீங்கள்தான் பயங்கரவாதத்தை ஒழித்த பராக்கிரமசாலி" என்று மகிந்த ராஜபக்ஷவுக்குப் பாராட்டுப் பத்திரம் வாசித்துக் கொண்டிருந்தார்,

அந்தப் பத்திரிகையின் ஜாம்பவான். ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன், மூத்த பத்திரிகையாளரான அவருக்கு அளித்த பிரத்தியேகப் பேட்டியில்தான், "இலங்கைக்கு கலப்பினம் தான் சரிப்பட்டு வரும்" என்று திமிரோடு பேசியிருக்கிறார் மகிந்த.



இனப்படுகொலை குற்றவாளியை இலங்கையின் கதாநாயகனாக சித்தரித்த அதே மனிதர், மகிந்தவை குப்பைத் தொட்டியில் வீசியிருக்கும் பிரதமர் ரணிலிடம் பேட்டி எடுத்திருக்கிறார் இப்போது!

பத்திரிகைப் பேட்டிகளில் கேட்கப்படுகிற கேள்விகளை வைத்தே, அந்தப் பேட்டி எதற்காக எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

பிரதமர் ரணில் பேட்டியின் ஒரு பகுதியை இங்கே தருகிறேன். அதைவைத்து நீங்கள் சகலத்தையும் புரிந்துகொள்ள முடியும்.

"மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சர்வதேச விசாரணை தேவை என்றொரு கோரக்கை இருக்கிறது. ஆனால், அந்த விசாரணை உள்ளக விசாரணையாகத்தான் இருக்க வேண்டும் என்கிற கருத்தொற்றுமை (இலங்கையில்) இப்போது ஏற்பட்டுள்ளது...."

இது கேள்வியா, பதிலா என்று குழம்பாதீர்கள். (நல்லாக் கேட்கறாங்கல்ல!) கேள்வியே இந்த இலட்சணம் என்றால் பதில் எப்படியிருக்கும் என்று நீங்களே யூகித்துக் கொள்ளுங்கள்.

"ரோம் சாசனத்தில் நான் கையெழுத்திடாததால், மகிந்த ராஜபக்ஷ தப்பிக்க முடிந்துள்ளது...... மகிந்தவை நான் தான் மின்சார நாற்காலியிலிருந்து காப்பாற்றியிருக்கிறேன்" என்பது பிரதமர் ரணில் ஏற்கனவே அடிக்கிற டமாரம். இதையேதான் அவர் இப்போதும் சொல்லியிருக்கிறார்.

ரோம் சாசனத்தில் இலங்கை கையெழுத்திடாததால், சர்வதேச குற்றவாளிக் கூண்டில் மகிந்தவை நிறுத்த முடியாது.....

உள்ளக விசாரணை தான் நடைபெறும்.....

இதுதான் ரணிலின் பதில்.

மகிந்தவின் இராணுவம் ஆயிரமாயிரம் நிரபராதித் தமிழர்களைக் கொன்று குவித்திருக்கிறது. இது ஒரு திட்டமிட்ட இனப்படுகொலை.

ஒரு இனத்தைத் திட்டமிட்டுக் கொன்று குவித்திருக்கும் இன்னொரு இனம், தன்னைத் தானே எப்படி விசாரித்துக் கொள்ள முடியும்? சர்வதேச விசாரணை நடந்தால்தான், உண்மைகள் வெளிவரும்.

2009 இல் என்ன நடந்ததென்கிற உண்மையை மூடிமறைத்துவிட்டு கொடுங் குற்றவாளிகள் சுதந்திரமாக நடமாட அனுமதிப்பது - நல்லிணக்கம் ஏற்படுவதற்கான வாய்ப்பை அடியோடு தகர்த்துவிடும்...

இதைத்தான் மனித உரிமையை மதிக்கும் அனைவரும் வலியுறுத்தி வருகிறோம். இனப்படுகொலை என்பதை மறைக்கத்தான் "போர்க் குற்றம்" என்கிற வார்த்தையைப் பயன்படுத்தினார்கள்,

இலங்கையும் இலங்கைக்கு ஆயுதம் கொடுத்தவர்களும்! "ஒரு புல் பூண்டுக்குக் கூட சேதாரமின்றி போரை முடிவுக்குக் கொண்டுவந்தேன்" என்பது மகிந்தவின் பிரசாரமாக இருந்தது.

போரில் என்ன நடந்தது என்கிற உண்மையை அறிந்தே, இந்தியாவும் வேறு சில நாடுகளும் கொடுக்கும் நெருக்கடியால், சர்வதேச விசாரணை முயற்சிக்கு முட்டுக்கட்டையாக இருந்தது, இருக்கிறது. ஐ.நா. இதையெல் லாம் மீண்டும் நினைவுபடுத்துவதற்குக் காரணம் பிரதமர் ரணில்.


(தொடரும்)

**புகழேந்தி தங்கராஜ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதிகள் சென்ற கப்பலின் அறையில் 51 பேர் மூச்சுத் திணறி உயிரிழந்தனர்

## 130 பேர் உயிருடன் மீட்பு



(ரோம்)

**லிபியாவில் கடற்பகுதியில் அகதிகள் சென்ற கப்பலில் இருந்து 51 பேர் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர். கப்பலின் அறை ஒன்றில் அடைக்கப்பட்டிருந்த இவர்கள் மூச்சுத்திணறி உயிரிழந்துள்ளதாக தெரியவந்துள்ளது.**


லிபியாவில் நிலவி வரும் அரசியல் நெருக்கடி மற்றும் உள்நாட்டுப் போர் காரணமாக அந்த நாட்டைச் சேர்ந்தவர்களில் பெரும்பாலானவர்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு சட்டவிரோதமாக குடிபெயர்ந்து வருகிறார்கள். கடல்மார்க்கமாக செல்லும் அவர்கள், பழுதடைந்த படகுகளில் அளவுக்கு அதிகமாக ஆட்களை ஏற்றிச்செல்வதால் அடிக்கடி நடுக்கடலில் கவிழ்ந்து விபத்தில் சிக்கி விடுகிறார்கள். இதனால் உயிரிழப்புகள் ஏற்படுகிறது.

இவ்வாறு இந்த ஆண்டின் தொடக்கத்தில் இருந்து இதுவரை லிபியா மற்றும் இத்தாலி கடற்பகுதியில் 2.400 இற்கும் அதிகமானோர் பலியாகி உள்ளனர். சட்டவிரோதமாக ஐரோப்பாவிற்கு செல்ல முயன்றதாக 11 ஆயிரத்திற்கும் மேற்பட்டோரை இத்தாலி கடற்படையினர் கைது செய்துள்ளனர். இந்நிலையில் லிபியா கடற்பகுதியில் அகதிகள் சென்ற கப்பலில் இருந்து 51 பேர் சடலமாக மீட்கப்பட்டு உள்ளனர். மத்திய தரைக்கடல் வழியாக ஆபத்தான பயணத்தின் போது இவர்கள் மூச்சு திணறல் காரணமாக பலியாகி உள்ளனர் என்று கூறப்படுகிறது.

சுவீடன் நாட்டை சேர்ந்த போசிடன் கப்பலானது கடற்பகுதியில் ரோந்துபணியில் ஈடுபட்டிருந்த போது, நடுக்கடலில் சிக்கித்தவித்த 130 பேரை உயிருடன் மீட்டனர். இதற்கிடையே அப்பகுதியில் நின்றுகொண்டிருந்த மரக்கப்பலில் இருந்து உதவிகேட்டு குரல் எழுப்பட்டுள்ளது. இதனையடுத்து கப்பலானது அப்பகுதிக்கு சென்று கப்பலில் இருந்து 439 பேரை மீட்டுள்ளது. இதனையடுத்து கப்பலின் மையப்பகுதியில் இருந்த அறையில் சிக்கித்தவித்தவர்களை மரக்கட்டைகளை உடைத்து மீட்க முயற்சி செய்யப்பட்டது. அப்போது அறைக்குள் 51 பேர் சடலமாக காணப்பட்டுள்ளனர்.

கப்பலின் அறையில் அடைக்கப்பட்டிருந்தவர்கள், மூச்சு திணறல் காரணமாக உயிரிழந்தனர் என்று தெரியவந்து உள்ளது. இது போன்ற செய்திகள் தொடர்ந்து வெளியாகும் நிலையில், அகதிகள் தொடர்ந்து பெருமளவு பணம் கொடுத்து இந்த ஆபத்து நிறைந்த பயணத்தை மேற்கொள்கின்றனர். பயணத்திற்கு உதவாத கப்பல்கள் அகதிகள் பயணத்திற்கு பயன் படுத்தப் படுகிறது என்று குற்றஞ் சாட்டப்படுகிறது. (3-7)

# யானைத் தந்தங்களை அழித்தது தாய்லாந்து



(பாங்கொக்)

யானைத் தந்தங்கள் கடத்தல் அதிக அளவில் நடக்கும் நாடு தாய்லாந்து. தந்தங்கள் கடத்தலை தடுக்க அந்நாட்டு அரசு கடும் நடவடிக்கை எடுத்து வருகிறது.

அந்தவகையில் சுமார் 2,200 கிலோ கடத்தல் யானை தந்தங்களை அழித்துள்ளது தாய்லாந்து அரசு. தந்தங்கள் அனைத்தும், பாறைகளை மாவாக மாற்ற பயன்படும் இயந்திரங்களில் போட்டு அழிக்கப்பட்டதாக அரசு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்த தந்தங்களின் சர்வதேச சந்தை மதிப்பு சுமார் 2.8 மில்லியன் அமெரிக்க டொலர் ஆகும்.

யானை தந்தங்கள் அழிக்கப்பட்டதை பிரதமர் மற்றும் ஜெனரல் பிரய்வுத் சான்-ஓ-சா நேரில் பார்வையிட்டார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, "யானைகள் நமது தேசிய சின்னம். ஆனால், அவை சட்டவிரோத வேட்டையால் அழியும் நிலையில் உள்ளன. இந்த யானை தந்தம் கடத்தலை தடுக்க தாய்லாந்து அரசாங்கம் உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது" என தெரிவித்துள்ளார். (3-7)

# ஜப்பான் பிரதமரிடம் ஒபாமா வருத்தம்

ஜப்பான் நாட்டின் மூத்த அதிகாரிகளை அமெரிக்கா உளவு பார்த்ததாக விக்கி லீக்ஸில் செய்தி வெளியானதையடுத்து ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபேவிடம் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா வருத்தம் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபேயிடம் சுமார் 40 நிமிடங்கள் தொலைபேசியில் உரையாடியதாக ஜப்பானிய அரசு செய்தி தொடர்பாளர் தெரிவித்தார்.

இத்தகைய குற்றச்சாட்டுகள் இருநாடுகளுக்கும் இடையேயான நன்னம்பிக்கைக்கு ஊறு விளைவிக்கும். எனவே இது பற்றி விசாரணை செய்ய வேண்டும் என்று ஜப்பான் பிரதமர் அபே, அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவிடம் வேண்டுகோள் விடுத்தார்.

தொலைபேசி உரையாடலில் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா வருத்தம் தெரிவித்ததாக ஜப்பான் அரசு செய்தி தொடர்பாளர் தெரிவித்தார்.

மேலும், உரையாடலில் உலக பொருளாதார சூழ்நிலைமைகள், வடகொரியா விவகாரம் மற்றும் வானிலை மாற்றம் ஆகியவை பற்றியும் இருநாட்டுத் தலைவர்களும் பேசியுள்ளனர். (3-7)

# சுற்றுலா பயணிகளை சுமந்து கொண்டு தாய்லாந்தில் காட்டுக்குள் ஓடிய யானை

வட தாய்லாந்தில் யானையொன்று நேற்று முன்தினம் புதன் கிழமை அதன் பாகனைத் தாக்கிக் கொன்று விட்டு அதன் முதுகில் பயணித்த 3 சுற்றுலாப் பயணிகளுடன் காட்டுக்குள் ஓடியதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

சியாங் மேய் மாகாணத்திலுள்ள மே வாங் மாவட்டத்தில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் கரென் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த யானைப் பாகன் உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில் காட்டுக்குள் ஓடிய அந்த யானையின் முதுகில் பயணித்த தாய், தந்தை மற்றும் குழந்தை உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 சுற்றுலாப் பயணிகளும் பின்னர் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் கட்டளைத் தளபதியான கேணல் தவட்சேய் தெப்பூன் தெரிவித்துள்ளார். (3-7)

# அணுக்கதிர்வீச்சு பாதிப்புக்கு ஊசி மருந்து கண்டுபிடிப்பு

## அமெரிக்க ஆய்வாளர்கள் சாதனை

(நியூயோர்க்)

அணுக் கதிர்வீச்சால் ஏற்படும் பாதிப்புக்களால் உலகம் அச்சமடைந்து, இனி அணு உலைகளே வேண்டாம் என மக்கள் அவற்றை எதிர்த்து வருகின்றனர்.

இந்நேரத்தில் அதன் பாதிப்பிலிருந்து ஒரு ஊசியின் மூலம் காக்க முடியுமா? என்ற நோக்கில் அமெரிக்காவின் டெக்ஸாஸ் மருத்துவ பல்கலைக்கழக தலைமையில் பல்வேறு மருத்துவக் கல்வி நிறுவனங்கள் ஆய்வுகளை நடத்தி வந்தன. இதில், இந்த மிகப்பெரும் சவாலான பிரச்சினைக்கு தீர்வு கிடைத்துள்ளதாக அவர்கள் அண்மையில் அறிவித்துள்ளனர்.

அணுக்கதிர்களால் உடலின் இரைப்பை பகுதிதான் முதல்கட்ட பாதிப்புக்கு உள்ளாகிறது. இதைத் தொடர்ந்து, உடலின் நீர் உறிஞ்சும் தன்மைக்கு பாதிப்பு ஏற்படுவதால் மின்பகுளிகளில் (எலக்ட்ரோலைட்) ஏற்றத்தாழ்வும், பாக்டீரியா தொற்றுக்களும், குடல் கசிவும், சீழ்பிடித்தல் போன்றவையும் தொடர்ச்சியாக ஏற்பட்டு உயிரிழப்புக்கே காரணமாக அமைகிறது.

கதிர் வீச்சு வயிற்றின் சிறிய குழாய் சுரப்பிகளில் முதலில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. இது மிகச் சுலபமாக பாதிப்புக்கு உள்ளாகி விடும் என்பதால், இந்த பாதிப்பை தடுக்க கதிர்வீச்சுக்கு ஆளான மனிதருக்கு முதல் 24 மணி நேரத்துக்குள் புரதக்கூறு மருந்தான TP508ஐக் கொடுக்கப்பட வேண்டும். இது தசைகள், எலும்பு மற்றும் தோல் பகுதிகளில் ஏற்படும் பாதிப்பை தடுக்கும். இதனால் உடலின் இரத்த ஓட்டம் சீராகும். இது கதிர் வீச்சின் பாதிப்பைக் குறைத்து செல்கள் அழிவதைத் தடுக்கும்.

இந்நிலையில் TP508 மருந்தை அணுக் கதிர்களால் பாதிக்கப்பட்ட எலிக்கு 24 மணி நேரத்துக்கு பின்னர் செலுத்தி சோதனை செய்ததில் இம்மருந்து அந்த பாதிப்பிலிருந்து காப்பதாக ஊர்ஜிதமாகியுள்ளது.

ஏற்கனவே இம்மருந்து நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கால் புண்கள் குணப்படுத்துவதில் பயன்படுத்தப்படுகிறது. மேலும் மணிக்கட்டு முறிவுகளை சரிபடுத்துவதற்கும் இது பயன்படுத்தப்பட்டு வருகிறது, என்பது குறிப்பிடத்தக்கது. (3-7)

# தற்கொலைப் படையாக மாறும் ஐ.எஸ். எய்ட்ஸ் நோயாளர்கள்

## ஐ.எஸ்ஸின் தலைமை முடிவு

(ஈராக்)

ஈராக், சிரியா ஆகிய நாடுகளை தளமாக கொண்டு இயங்கி வரும் ஐ.எஸ். தீவிரவாதிகளை எய்ட்ஸ் நோய் மிரட்டி வருகின்றது.

ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக உலக நாடுகள் தொடர்ந்தும் போராடி வருகின்றது.

இந்தநிலையில் ஐ.எஸ். தீவிரவாதிகள் இடையே எய்ட்ஸ் நோய் வேகமாக பரவி வருகின்றது. இதனைத் தொடர்ந்து தீவிரவாதிகள் எய்ட்ஸ் பரிசோதனை செய்து கொள்ளவேண்டும் என்று தலைமை உத்தரவிட்டு உள்ளது. இந்நோயால் பாதிக்கப்பட்டவர்களை தற்கொலைப் படை தீவிரவாத தாக்குதலுக்கு பயன்படுத்த ஐ.எஸ். தீவிரவாத தலைமை தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுவரையில் 16க்கும் மேற்பட்ட தீவிரவாதிகளுக்கு எய்ட்ஸ் நோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. உலகை மிரட்டும் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு இயற்கையின் கொடையாக இந்த மரண பீதி ஏற்பட்டுள்ளது. (3-7)

# சீன வெடிவிபத்து 12 பேர் கைது

சீனாவின் துறைமுக நகரப்பகுதியில் கடந்த 12 ஆம்திகதி இடம்பெற்ற வெடிவிபத்துச்சம்பவம் தொடர்பாக 12 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி வெடிவிபத்தில் இதுவரை 139 பேர் பலியாகியுள்ளனர். அத்துடன் 600 பேர் இன்னமும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர். இவர்களில் சிலர் கவலைக்கிடமான நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டு பெண்களை கத்தியால் குத்திய 17 வயதுச் சிறுவனை தேடும் பொலிஸ்!

(கொழும்பு)


இரு பெண்களை கத்தியினால் குத்தியும் பொல்லுகளினால் தாக்கியும் படுகாயங்களுக்குள்ளாகிய 17 வயது சிறுவனை கண்டுபிடிக்க மடுல்சீமை பொலிஸார் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

பதுளை மாவட்டத்தின் மடுல்சீமை பகுதியின் மெட்டிகாதன்னை என்ற இடத்தை சேர்ந்த இரு பெண்களே பலத்த காயங்களுக்குள்ளாகி பதுளை அரசு வைத்தியசாலையின் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டிருப்பவர்களாவர்.

இச்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை மெட்டிகாதன்னை என்ற இடத்தில் இடம் பெற்றுள்ளது.

இத் தாக்குதல் சம்பவத்திற்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லையென்றும் தாக்குதலை மேற்கொண்ட 17 வயது சிறுவன் பிரதேசத்தை விட்டு தலைமறைவாகியிருப்பதால் கைது செய்ய முடியவில்லையென்றும் தேடுதல்கள் மேற்கொண்டிருப்பதாகவும், மடுல்சீமை பொலிஸார் தெரிவித்தனர்.

படுகாயங்களுக்குள்ளான ஸ்ரீயானி தேவிகா என்ற பெண்ணை கொலை செய்ய முயன்றபோது, அதனை கண்ட பெண்ணும் கடுமையாக தாக்கப்பட்டதுடன் கொலை முயற்சியும் தோல்வியுற்றிருப்பதாக ஆரம்ப பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. (இ-7)





# யுத்தக் குற்றச்சாட்டுக்கள் பொய்யென நிரூபிக்க வடக்குக் கிழக்கு மக்கள்தான் ஒரே சாட்சியாகும்

## இராணுவத்தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

**இலங்கை இராணுவத்தின் மீதான யுத்த குற்றச்சாட்டுகள் சர்வதேச மட்டத்தில் பலமடைந்து வருகின்றதை நாம் நன்கு அறிவோம். எனினும் எம்மீதான போர்க் குற்றச்சாட்டுகளை பொய்யென நிரூபிப்பதற்கு எமக்கு வடக்கு கிழக்கு மக்களே ஒரே சாட்சியாகும் என இராணுவத் தளபதி லெப்டினட் ஜெனரல் கிரிஷாந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.**



இம்முறை நடைபெறும் சர்வதேச பாதுகாப்பு மாநாட்டின் பின்னர் இராணுவத்தின் மீது எழுப்பப்படும் பல கேள்விகளுக்கு விடை கிடைக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

இராணுவத்தினால் நேற்று முன்தினம் கொழும்பில் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதில் இருந்து தொடர்ச்சியாக ஐந்தாவது தடவையாகவும் இலங்கை பாதுகாப்பு பிரிவினரால் நடத்தப்படும் சர்வதேச பாதுகாப்பு மாநாடு இம்முறையும் செப்டெம்பர் மாதம் முதலாம் இரண்டாம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவுள்ளது. உள்நாட்டு வெளிநாட்டு பிரதிநிதிகளின் பங்குபற்றலில் இம்முறையும் இந்த பாதுகாப்பு மாநாடு நடைபெறவுள்ளது.

மேலும் இலங்கை இராணுவம் யுத்த குற்றச் செயல்களில் ஈடுபடவில்லை என்பதை பல தடவைகள் வெளிப்படுத்தியுள்ளோம். ஒவ்வொரு ஆண்டும் இலங்கை இராணுவத்தினால் நடத்தப்படும் சர்வதேச பாதுகாப்பு மாநாட்டின் போதும் இந்த விடயம் நிரூபிக்கப்பட்டுள்ளது. யுத்த காலகட்டம் எவ்வாறு என்பதை விபரிக்க முடியாது. ஆனால் யுத்தம் முடிவடைந்ததில் இருந்து இன்று வரையில் வடக்கு மற்றும் கிழக்கு பகுதியில் இராணுவத்தின் செயற்பாடுகள் மிகவும் நேர்த்தியாகவும் மக்களை பாதுகாக்கும் வகையிலும் அவர்களுக்கு உதவும் வகையிலுமே அமையப்பெற்றுள்ளது.

எனினும் எம்மீதான யுத்த குற்றச்சாட்டுகள் சர்வதேச மட்டத்தில் இன்னமும் தலை தூக்கியுள்ளதை நாம் நன்கு அறிவோம். ஆனால் இந்த கேள்விகளுக்கான பதிலை வடக்கு கிழக்கு மக்களிடம் மட்டுமே அறிந்து கொள்ள முடியும். எமக்கு இருக்கும் நல்லதொரு சாட்சியாக வடக்கு கிழக்கு மக்களே உள்ளனர்.

கடந்த 2011 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரையில் வடக்கிலும் கிழக்கிலும் இராணுவத்தினால் கையாளப்படும் செயற்பாடுகள் அப்பகுதி மக்களுக்கு மட்டுமே தெரியும். ஆகவே எமக்கு இருக்கும் நல்லதொரு சாட்சி அப்பகுதி மக்களேயாவர்.

அதேபோல் நாம் நடத்தும் சர்வதேச பாதுகாப்பு மாநாட்டினூடாக எம்மீதான குற்றச்சாட்டுகளை நீக்குவதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளதாக நாம் நம்புகின்றோம். கடந்த காலங்களை விடவும் இம்முறை எமது பாதுகாப்பு மாநாட்டில் பங்குபற்றும் நாடுகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. அதேபோல் சர்வதேச மட்டத்தில் எம்மீதான நம்பிக்கையும் அதிகரித்து வருகின்றது. எனினும் சர்வதேச மட்டத்தில் எழும் எம்மீதான குற்றச்சாட்டுகளை பொய் என நிரூபிக்க இந்த பாதுகாப்பு மாநாடு நல்லதொரு வாய்ப்பாக அமையும். அதேபோல் எம்மீது எழுப்பப்படும் பலவிதமான விமர்சனங்களுக்கும் கேள்விகளுக்கும் இந்த மாநாட்டின் பின்னர் விடை கிடைக்கும்.

மேலும் சர்வதேச நாடுகளின் தலைவர்கள் விசேட பிரதிநிதிகள் இம்முறை எமது பாதுகாப்பு மாநாட்டில் கலந்து கொள்வதால் இலங்கையின் நிலைமைகளை வெளிப்படுத்த நல்லதொரு சந்தர்ப்பமாக அமையும். ஆகவே எமக்கு எமது உண்மையான நிலைப்பாட்டினை வெளிப்படுத்த முடியும் எனத் தெரிவித்தார். (இ-7)

# 5 ரூபா, 10 ரூபா நாணயக் குற்றிகளுக்கு தட்டுப்பாடு



இலங்கையில் ஐந்து ரூபா மற்றும் பத்து ரூபா நாணயக் குற்றிகளுக்கு பெரும் தட்டுப்பாடு காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொடுக்கல் வாங்கல்களின் போது ஐந்து ரூபா மற்றும் பத்து ரூபா நாணயங்களுக்கு கடுமையான தட்டுப்பாடு காணப்படுகின்றது.

இதனால் நுகர்வோருக்கு மிகுதிப் பணம் வழங்கும் போது சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

மிகுதிப் பணத்திற்கு பதிலாக இனிப்பு அல்லது சொக்லெட் வகைகளை வர்த்தகர்கள் வழங்கி வருவதாக நுகர்வோர் குற்றம் சுமத்துகின்றனர்.

இந்தப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வினை வழங்குமாறு நுகர்வோரும் வர்த்தகர்களும் இலங்கை மத்திய வங்கியிடம் கோரியுள்ளனர்.

ஏற்கனவே நாணயக் குற்றிகளை உண்டியல்கள் போட்டு வைத்திருத்தல் போன்ற நடவடிக்கைகளின் ஊடாக முடக்கி வைக்க வேண்டாம் என இலங்கை மத்திய வங்கி மக்களிடம் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது. பெரும் எண்ணிக்கையிலா[illegible] யக் குற்றிகள் புழக்கத்தில் [illegible] என தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

## கௌரவிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் 125வது ஆண்டு நிறைவினை முன்னிட்டு கல்லூரியில் இருந்து இளைப்பாறிய அதிபர்கள், பிரதி அதிபர்கள், உப அதிபர்கள், பகுதித்தலைவர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்களின் சேவைகளை பாராட்டி கௌரவிக்கும் முகமாகவும் கல்லூரியில் கல்வி கற்று 75 வயதைத் தாண்டிய பழைய மாணவர்களின் சேவைகளை கௌரவிக்கும் முகமாகவும் கௌரவிப்பு விழா நிகழ்வு நடைபெறவுள்ளது.

எனவே இந்த கௌரவிப்பு நிகழ்விற்குரியவர்கள் தமது பெயர் விபரங்களை கல்லூரி பிரதி அதிபர் ந.பரமேஸ்வரனிடம் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ எதிர்வரும் 2ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கல்லூரி அதிபர் கேட்டுள்ளார். (இ-7)

# தேர்தலில் தோல்வியடைந்தவர்களுக்கு ஜனாதிபதியால் பதவிகள் பகிர்ந்தளிப்பு

(கொழும்பு)



கடந்த நாடாளுமன்ற தேர்தலில் தோல்வியடைந்தவர்களுக்கு பல்வேறு பதவிகளை வழங்குவதற்கு ஜனாதிபதி முயற்சி மேற்கொண்டுள்ளமையால் மக்கள் அதிருப்தியடைந் துள்ளனர்.

முக்கியமாக தேர்தலில் தோல்வியடைந்த 07 வேட்பாளர்களுக்கு முன்னணியின் தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்றிற்கு வருவதற்கு ஜனாதிபதி இடமளித்திருப்பது தொடர்பில் நாட்டின் சாதாரண மக்கள் உட்பட் விமர்சித்து வருகின்றனர்.

மக்களால் நிராகரிக்கப்பட்ட எஸ்.பீ.சொய்ஸா போன்றோருக்கு மீண்டும் தேசியப் பட்டியல் ஊடாக இடமளித்திருப்பதன் மூலம் ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு எதிராகியுள்ளதாக மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

எப்படியிருப்பினும் ஜனாதிபதியினால் தோல்வியுற்றவர்களுக்கு பதவி வழங்கும் நடவடிக்கைகள் இன்னமும் நிறைவடையவில்லை.

கடந்த தேர்தலில் தோல்வியடைந்த ஷாந்த பண்டார, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் மத்திய செயற்குழுவிற்கு ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

குறித்த நியமிப்பு நேற்று முன்தினம் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி மைத்திரியின் கொள்கைகள் சர்வதேசத்தின் பாராட்டை பெற்றுள்ளன

மஹிந்த சமரசிங்க தெரிவிப்பு




**ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வேலைத்திட்டங்கள் மற்றும் கொள்கைகள் சர்வதேசத்தின் பாராட்டுக்களை பெற்றுள்ளதாக முன்னாள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.**

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பல் அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் கடும் சீன ஆதரவு கொள்கையை முன்னெடுத்து வந்தது.

தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த கொள்கைக்கு பதிலாக அனைத்து நாடுகளுடனும் நட்பு மற்றும் நடுநிலை யான தொடர்புகளை முன்னெடுத்து வருவதால், அடுத்த மனிதவுரிமை ஆணைக்குழுவின் மாநாட்டின் போது இலங்கைக்கு பாரிய சாதக நிலைமை உருவாகும்.

கடந்த காலங்களில் மனிதவுரிமை ஆணைக்குழுவின் மாநாட்டில் இலங்கைக்கு எதிராக தொடர் நதும் யோசனைகளை முன்வைத்த அமெரிக்கா உட்பட சகல நாடுகளின் நல்லெண்ணத்தை ஜனாதிபதி பெற்றுள்ளார். இதன் காரணமாக மனிதவுரிமை பிரச்சினை தொடர்பான உள்நாட்டு விசாரணைக்கு கூடிய ஒத்துழைப்புகளை வழங்குவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியின் துரநோக்கமும், நட்பு ரீதியான வெளிநாட்டு கொள்கைகளுமே இதற்கு காரணம் எனவும் மஹிந்த சமரசிங்க மேலும் தெரிவித்தார். (இ-7)




# நல்லூரில் நாடகத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் மஹோற்சவ உற்சவ காலத்தையொட்டி செயற்றிறன் அரங்க இயக்கமும் யாழ்ப்பாண மாநகர சபையும் இணைந்து முற்றிலும் இலவச அனுமதியுடன் நடத்துகின்ற நாடகத் திருவிழா நாளை சனிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து செப்டெம்பர் மாதம் 9 ஆம் திகதி புதன்கிழமை வரை நடைபெறவுள்ளது. யாழ்.மாநகர சபைக்கு முன்பாக உள்ள குறுக்கு வீதியில் அமைந்துள்ள செயற்றிறன் அரங்க இயக்கத்தின் பஞ்சபூத அரங்கில் நடைபெறவுள்ள இந்நாடகத் திருவிழாவானது தினமும் மாலை 6.45 மணிக்கு ஆரம்பமாகி இரவு 8.45 மணி வரை நடைபெறும்.

ஈழத்தின் முன்னணி நாடக நிறுவனங்களில் ஒன்றாகத் திகழ்கின்ற செயற்றிறன் அரங்க இயக்கமும் யாழ்ப்பாண மாநகர சபையும் இணைந்து நல்லூர் நாடகத் திருவிழா-2015 இனை ஏற்பாடு செய்திருக்கின்றன.

இந்த விழாவை யாழ்.மாவட்ட அரச அதிபர் வேதநாயகம் நாளை 29 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கவுள்ளார். செப்டெம்பர் மாதம் 9 ஆம் திகதி வரை விழா தொடர்ந்து நடைபெறவுள்ளது.

'நாமும் நமக்கென்றொரு நலியாக் கலையுடையோம்' என்ற தொனிப் பொருளில் இந் நாடகத் திருவிழா நடைபெறவுள்ளது.

சிறுவர் நாடகங்கள், பாரம்பரிய நாடகங்கள், நவீன நாடகங்கள் மற்றும் ஓராள் நாடகங்களென பன்னிரெண்டு நாட்கள் நடைபெறுகின்ற விழாவில் 20 நாடகங்கள் மேடையேறுகின்றன.

ஈழத்தின் நவீன நாடகத்தின் தாய் என்று வர்ணிக்கப்படுகின்ற குழந்தை ம.சண்முகலிங்கத்தின் சிறுவர் நாடகங்களான "கூடிவிளையாடுபாப்பா" மற்றும் "பஞ்சவர்ண நரியார்" நாடகங்களும் ஈழத்தின் சிறந்த நாடக நெறியாளர் தே.தேவானந்தின் எழுத்துரு நெறியாள்கையில் "சிரிப்பு மூடை", "வேடதாரிகள்", "வெண்மை எழில்", "தாலி", "ஏகாந்தம்", "மரணச்சான்றிதழ்" போன்ற நாடகங்களும் மேடையேறுகின்றன.

இதனோடு இணுவில் இளம்தொண்டர் சபையின் "பக்த நந்தனார்" இசை நாடகமும் நாட்டார் வழக்கியற் கழகத்தின் "மயானகாண்டம்" பாரம்பரிய கலை மேம்பாட்டுக்கழகத்தின் "காத்தவராயன் கூத்து", காந்தி சனசமூக நிலையத்தின் "சத்தியவான் சாவித்திரி" இசை நாடகமும் மேடையேறுகின்றன.

ஈழத்து நாடக ரசிகர்களுக்கும் சிறுவர்களுக்கும் பெருவிருந்தாக அமைகின்ற இந் நாடகத்திருவிழா இலவசமாக காண்பிக்கப்படுகின்றது.

செயற்றிறன் அரங்க இயக்கம் கடந்த 2013 ஆம் ஆண்டு தனது முதலாவது நாடக விழா நல்லூர் சங்கிலியன் பூங்காவில் நடத்தியிருந்தது.

பின்னர் தனக்கான சொந்த இடத்தில் 2014 ஆம் ஆண்டு இரண்டாவது நாடக விழாவை நடத்தியிருந்தது. இப்போது மூன்றாவது நாடக விழா பிரமாண்டமான ஏற்பாட்டில் நடைபெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (இ-5)

## தெய்வீக இசையரங்கு

நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நல்லூர் கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தையொட்டி தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் நடத்தி வருகின்ற தெய்வீக இசையரங்கு நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் மாலை 6.45 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை நடைபெற்று வருகின்றது.

இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள நிகழ்வில் கெஞ்சிற் கச்சேரி நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இதன்போது நாதஸ்வரம் பி.எஸ். பாலமுருகன், வயலின்- சு.கோபிதாஸ், மிருதங்கம்-க.கண்ணதாஸ், தவில்-பி.எஸ்.செந்தில் நாதன், கெஞ்சிரா- பிரம்மஸ்ரீ ந.சிவசுந்தர சர்மா, முகர்சிங்-சி.செந்தூரன் ஆகியோர் வாத்தியங்களை இசைப்பதற்காக பங்குபற்றுகின்றனர். (இ-5)

## அருள்நெறி விழா

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தை முன்னிட்டு நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் நடத்தி வருகின்ற யாழ்.மாவட்ட அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகள் அரங்கேறும் அறநெறி விழா தினமும் பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை நடை பெற்று வருகின்றது.

இதற்கமைய இன்று வெள்ளிக்கிழமை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள கணக்காளர் எம்.ஜி.காண்டீபன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச செயலர் ஆ.சிறி கலந்துகொண்டுசிறப்பிக்கவுள்ளார். இதன்போது வரவேற்புரையை நல்லூர் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. ர.நகுலா நிகழ்த்தவுள்ளார்.

கலை நிகழ்வுகளாக ஸ்ரீசித்தி விநாயகர் அறநெறிப்பாடசாலை மாணவர்கள் வழங்கும் பண்ணிசை, கைலாசநாதர் வேதசிவாகம அறநெறிப்பாடசாலை மத்திய பிரிவு மாணவர்கள் வழங்கும் வில்லிசை, ஸ்ரீ சித்தி விநாயகர் அறநெறிப்பாடசாலை கீழ்ப்பிரிவு மாணவர்கள் வழங்கும் நாடகம், ஸ்ரீ கணேசா அறநெறிப்பாடசாலை மத்திய பிரிவு மாணவர்கள் வழங்கும் குழு நடனம், கிருஷ்ண அறநெறிப்பாடசாலை மேற்பிரிவு மாணவர்கள் வழங்கும் குழு நடனம், சைவவிருத்திச் சங்க அறநெறிப்பாடசாலை மாணவர்களான வி.லக்சனா, பு.விஜயதர்சினி, கு.சயந்தா ஆகியோர் வழங்கும் பேச்சு, சிவயோகர் அறநெறிப்பாடசாலை மாணவன் கு.விந்தன் வழங்கும் பேச்சு என்பன இடம்பெறவுள்ளன. (இ-5)

# நல்லூரில் புதிய யோகா வகுப்புக்கள் ஆரம்பிப்பு

இந்துசமய சமயப்பேரவை யோகா புதிய வகுப்புக்களை நல்லை ஆதீனத்தில் ஆரம்பித்துள்ளது. இதற்கான அறிமுக நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 7மணியளவில் நடைபெற்றது.

இவ் யோகா வகுப்புக்கள் பாடசாலை மாணவர் சமூகம் பெரிதும் பயனடையும் வகையில் நடத்தப்படுகின்றது. சூரியநமஸ்காரம், இலகு யோகாசனம், தியான நுட்பம் முதலான பயிற்சிகள் விசேட ஆசிரியர்களால் 30 நாட்கள் தினமும் பயிற்றுவிக்கப்படும்.

இரவு 7 மணி தொடக்கம் 8 மணிவரை இவ்வகுப்புக்கள் நடைபெறும்.

பயிற்சி நிறைவில் கையேடு, சான்றிதழ் என்பன வழங்கப்படும். ஆர்வமுடைய அனைவரும் இணைந்து பயனடைய முடியுமென்று இந்துசமயப் பேரவை அறிவித்துள்ளது. (இ-7)

## வேலிருக்கு அஞ்சாதே மடமை நெஞ்சே



ஓங்கார மணியோசை செவியிற் பாய
ஓடிவிடும் வினையதுவும் ஒன்றாய்ச் சேர்ந்தே
ஆங்காரம் அறுத்தந்த சூரன்தன்னை
அடியவனாய் ஏற்று அருள் செய்தற்காக
நீங்காது உடன் வைத்தான் நேயம் பொங்க
நிமிர் சேவல் மயிலதுவாய் ஆக்கிக் கொண்டான்
நாங்காதல் கொள்கின்ற நல்லூர்க் கந்தன்
நமையுந்தான் ஏற்றிடுவான் நலிவு நீக்கி.

கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ்.

## நல்லைக் குமரன் மஞ்சரத மேறி வருகிறான்

நல்லைக் குமரன் மஞ்சரத மேறி வருகிறான்
சங்கார வேலேந்தி தாளமணி நடையோடு
மஞ்சரத பவனி வருக
அகிலாண்ட நாதனே ஆறுமுக ராஜனே
மஞ்சரத பவனி வருக
துன்பம் துடைத்தருள சுந்தரிகளிருவரொடும்
மஞ்சரத பவனி வருக.

கலாபூஷணம் க.லோகேஸ்வரன் தொல்புரத்தூர்.

## மஞ்சரத பவனி காண்

எங்கும் நிறைபதி ஆளும் பேறே
பொங்கும் பேரழகு பொலிந்த சீரே
வெங்களம் வெல்லும் வேலேந்தும் வீறே
மங்கள மங்கையர் இருபாக முறவே
மஞ்சரதம் பவனிகாண் எமக்கருளி யவாறே

கலாபூஷணம் சிவ.சிவநேசன்
அல்வாயூர்.

## மஞ்ச மிசை வா முருகா

செஞ்சடையில் மதி சூடி திருநடம் புரியுமெந்தன்
சஞ்சலமறுத்தாளும் சபாபதி திருமகனாய்
செஞ்சுடராய் றுதல் விழியில் தேவர் துயரழிக்க
சஞ்சரிக்க மனமகிழ்ந்து சதுர்மறையும் முழங்கநல்லை
விஞ் எடும் பேரழகாய் விழிகளீரானுடனே
மஞ்சமிசை ஏறிவரும் மாணிக்க வேலழகா

சுகுமார்
வேலணையூர்

## நல்லைக் கந்தன் நனிவிருத்தம்



தந்தைக்கே மந்தி ரத்தை
சளைக்காது மொழிந்து நின்று
விந்தைகள் புரிந்த வுந்தன்
விளையாட்டு லீலை யாவும்
சிந்தனைக் கருவாய்த் தோன்றும்
சிறந்தத் துவமே யாகும்
எந்தையே தாயே யுன்னை
இறைஞ்சினேன் நல்லைக் கந்தா

கலாபூஷணம் சந்தக்கவிஞர் நவ.பாலகோபால்

கஜமுகன் ஹாட்வெயர்
Leading Hardware merchant in jaffna pennisulla

147, 149, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். 021 222 2833

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குஜராத்தில் பரவுகிறது வன்முறை 8 பேர் பலி; 90 பேருந்துகள் எரிப்பு

## 5ஆயிரம் இராணுவம் அனுப்பி வைப்பு



(ஆமதாபாத்)

**குஜராத் இடஒதுக்கீடு போராட்டம் பல்வேறு பகுதிகளுக்கு பரவிஉள்ளது. வன்முறை சம்பவங்களில் பொலிஸ் உட்பட 8 பேர் உயிரிழந்துள்ளனர். 90 பேருந்துகள் தீ வைத்து கொளுத்தப்பட்டுள்ளன.நிலைமை கட்டுக்கடங்காமல் சென்றதையடுத்து 5000 இராணுவத்தினர் அங்கு அனுப்பப்பட்டுள்ளனர்.**

குஜராத்தில் பட்டேல் சமூகத்தினர் தங்களை இதர பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கும்படி போராடி வருகின்றனர். இதே கோரிக்கைக்காக பட்டேல் சமூகத்தினர் மாநிலம் முழுவதிலும் 140 இடங்களில் பேரணி நடத்தினர். போராட்டத்திற்கு தலைமை தாங்கிய, ஹர்திக்கையும், அவருடைய ஆதரவாளர்களையும் பொலிஸார் கைது செய்ததை தொடர்ந்து, பொலிஸாருக்கும், போராட்டக்காரர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. நிலைமை மோசமடைந்ததால் பொலிஸார் தடியடி நடத்தினர். இதனைத் தொடர்ந்து ஹர்திக்கை பொலிஸார் விடுதலை செய்தனர்.

எனினும் வன்முறை தணியவில்லை. 89 பஸ்கள், கார், வான், மோட்டார் சைக்கிள்கள் உட்பட 200 இற்கும் மேற்பட்ட வாகனங்கள் கலவரக்காரர்களால் தீ வைத்து கொளுத்தப்பட்டன. இதேபோல் 10 இற்கும் அதிகமான பொலிஸ் சோதனைச் சாவடிகள் தீக்கிரையாக்கப்பட்டன. இதையடுத்து அதிரடிப்படை, எல்லை பாதுகாப்பு படை, சிறப்பு அதிரப்படை வீரர்கள் என 5 ஆயிரம் துணை இராணுவ வீரர்கள் உடனடியாக குஜராத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். கலவரம் தீவிரம் அடைந்ததால், 17 இற்கும் மேற்பட்ட இடங்களில் ஊரடங்கு உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது.

இந்த நிலையில் பொலிஸாரின் தாக்குதலை கண்டித்து நேற்று முன்தினம் மாநிலம் தழுவிய முழு அடைப்புக்கு ஹர்திக் அழைப்பு விடுத்து இருந்தார். இதனால் ஆமதாபாத், சூரத், மெஹ்சானா மாவட்டங்களில் நேற்று முன்தினம் பாடசாலைகள் , கல்லூரிகள், கடைகள், வங்கிகள் மூடப்பட்டன. பஸ்களும் இயக்கப்படவில்லை. இராணுவம் நகரங்களில் அணிவகுப்பு நடத்தியது. நேற்றும் பாடசாலைகள், கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. போராட்டம் பல்வேறு பகுதிகளுக்கு பரவியுள்ளது. ஆங்காங்கே பொலிஸார் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

போராட்டத்தில் ஏற்பட்ட வன்முறை சம்பவங்களில் பொலிஸ் உட்பட 8 பேர் உயிரிழந்து உள்ளனர். ஆமதாபாத்தில் நேற்று முன்தினம் இரவு மட்டும் 5 பேர் பலியாகினர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில், பொலிசுக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையே மோதல் வெடித்தபோது நடந்த துப்பாக்கி சூட்டில் 2 பேர் பலியாகினர். வடக்கு குஜராத்தில் உள்ள பாலான்பூரிலும் 2 பேர் பொலிஸ் துப்பாக்கி சூட்டில் பலியாகினர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. சூரத்தில் வன்முறையின் போது காயம் அடைந்த பொலிஸார் ஒருவர் வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. (3-7).

பாரதச் செய்தி

# பெங்களூர் மாநகராட்சியை கைப்பற்றியது பா.ஜனதா

(பெங்களூர்)

பெங்களூர் மாநகராட்சி தேர்தலில் 100 தொகுதிகளில் வெற்றி வாகைசூடி பா.ஜனதா மீண்டும் மாநகராட்சியை கைப்பற்றியுள்ளது.

பெங்களூர் மாநகராட்சி மொத்தம் 198 தொகுதிகளை கொண்டது. இந்த மாநகராட்சிக்கு கடந்த 22 ஆம் திகதி தேர்தல் நடைபெற்றது. அதாவது, கொங்கச்சந்திரா தொகுதியில் பா.ஜனதா வேட்பாளர் போட்டியின்றி வெற்றி பெற்றார். இதனால் மீதமுள்ள 197 தொகுதிகளுக்கு வாக்குப்பதிவு நடந்தது.

இதில் 49.31 சதவீத வாக்குகள் பதிவாகின. இந்த நிலையில் இந்த தேர்தலில் பதிவான வாக்குகள் எண்ணும் பணி பெங்களூரில் ஒரு சட்டமன்ற தொகுதிக்கு ஒரு மையம் வீதம் 27 மையங்களில் நடைபெற்றது. சரியாக காலை 8 மணிக்கு வாக்கு எண்ணும் பணி தொடங்கியது. பகல் 1.30 மணிக்குள் அனைத்து தொகுதிகளின் வாக்குகளும் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டன. வாக்கு எண்ணிக்கை தொடங்கியபோது காங்கிரஸ் கட்சி அதிக இடங்களில் முன்னிலை பெற்று முதல் இடத்தில் இருந் தது. ஆனால் நேரம் செல்ல செல்ல காங்கிரஸ் கட்சியை பா.ஜனதா முந்தி சென்றது.

இறுதியில் 197 தொகுதிகளிலும் வாக்கு எண்ணிக்கை முடிவடைந்து முடிவுகள் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டன. இதில் பா.ஜனதா 100 இடங்களில் வெற்றி பெற்று தனி பெரும் கட்சியாக உருவெடுத்து உள்ளது. ஆனால் அக்கட்சிக்கு தனி பெரும்பான்மை கிடைக்கவில்லை.

கடந்த 2010 ஆம் ஆண்டு நடை பெற்ற மாநகராட்சி தேர்தலில் அக்கட்சி 111 இடங்களில் வென்று தனி பெரும்பான்மை பெற்றது.

கடந்த தேர்தலுடன் ஒப்பிடும் போது பா.ஜனதாவுக்கு தற்போது 11 இடங்கள் குறைவாகதான் கிடைத்துள்ளன.

காங்கிரஸ் 76 இடங்க ளிலும், ஜனதா தளம் கட்சி 14 இடங்களிலும், சுயேச்சைகள் 8 தொகுதிகளிலும் வெற்றி பெற்றுள்ளன. (3-7)

# 30குழந்தைகள் தீடீர் இறப்பு விசாரணைக்குழு அமைப்பு

(புவனேஸ்வர்)

ஒடிசா மாநிலம் கட்டாக்கில் உள்ள சர்தார் வல்லபாய் பட்டேல் மகப்பேற்று வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த குழந்தைகள் அடுத்தடுத்து உயிரிழந்து வருகின்றனர்.குறிப்பாக பிறந்து சில நாட்களே ஆன பச்சிளம் குழந்தைகள் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர். கடந்த 5 நாட்களில் பலியான குழந்தைகளின் எண்ணிக்கை 30 ஆக அதிகரித்தது. இந்த சம்பவம் குறித்து பாஜக மற்றும் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த உண்மை கண்டறியும் குழுக்கள் வைத்தியசாலையை பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

அரசு வைத்தியசாலையில் உரிய அடிப்படை வசதிகள் இல்லாததாலும் போதிய பணியாளர்கள் இல்லாததுமே குழந்தைகள் உயிரிழப்புக்கு காரணம் என உண்மை கண்டறியும் குழுவினர் குற்றம சாட்டியுள்ளனர். அவசர சிகிச்சை, பிரிவில் மகப்பேற்று மற்றும் குழநதைகள் சிகிச்சை பிரிவு எவ்வித பராமரிப்புமின்றி இருப்பதாகவும் அவர்கள் புகார் தெரிவித்துள்ளனர். குழந்தைகள் உயிரிழப்பு குறித்து ஒடிசா சட் ட்ப்பேரவையிலும் பிரச்சினை எழுப்பப்பட்டதையடுத்து இது குறித்து விசாரணை நடத்த மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

இந்த சம்பவம் குறித்து 4 பேர் கொண்ட தொழில் நுட்ப குழு விசாரணை நடத்தி வருவதாக மாநில சுகாதார துறை அமைச்சர் அதனு சப்யாச்சி நாயக் தெரிவித்துள்ளார். இது குறித்து சட்டசபையில் அவர் பேசும் போது, மருத்துவ கல்வி மற்றும் பயிற்சி இயக்குனர் தலைமையில் குழு வல்லபாய் படேல் போஸ்ட் மகப்பேற்று வைத்தியசாலையில் கைக்குழந்தைகள் இறப்பு குறித்து விசாரணை நடத்தி வருகிறது. இந்த குழு 10 நாட்களுக்குள் அறிக்கையை சமர்ப்பிக்கும். இதற்கிடையில், ஒரு பூர்வாங்க அறிக்கையை கட்டாக் தலைமை மாவட்ட மருத்துவ அதிகாரி சுகாதார துறைக்கு சமர்ப்பிக்க உள்ளார். என கூறியுள்ளார். (3-7)

# படகுகள் மோதுண்டு விபத்து; துறைமுகத்தில் 8 பேர் மரணம்

(கொச்சி)

கொச்சி துறைமுகத்தில் இருந்து வியாபின் பகுதிக்கு கொச்சி மாநகராட்சி பயணிகள் படகு போக்குவரத்தை நடத்தி வருகிறது. நேற்று முன்தினம் கொச்சி துறைமுகத்தை நோக்கி பயணிகள் படகு கடல் முகத்துவாரம் அருகே சென்று கொண்டிருந்தது. அந்த படகில் 40 இற்கும் மேற்பட்ட பயணிகள் பயணம் செய்து கொண்டிருந்தனர்.

அப்போது வேகமாக சென்ற மீன் பிடி படகுடன் பயணிகள் படகு பயங்கரமாக மோதியது. இதில் பயணிகள் படகு 2 துண்டாக உடைந்து கடலில் கவிழ்ந்தது. இந்த விபத்தில் 3 பெண்கள் உட்பட 6 பேர் தண்ணீரில் மூழ்கி பலியானதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது. ஆனால் அந்த பகுதியில் உள்ள மீனவர்கள் 3 பெண்கள் உட்பட 8 பேரின் சடலங்களை மீட்டதாக தெரிவித்துள்ளனர். ஆனால் இந்த தகவலை அதிகாரிகள் மறுக்கவில்லை. இதனால் விபத்தில் பலி எண்ணிக்கை 8 ஆக இருக்கலாம் என கூறப்படுகிறது.

இதுபற்றிய தகவல் கிடைத்ததும் கடலோர காவல் படையினர், நீச்சல் வீரர்கள், கடலோர கப்பல்கள், கடலோர ரோந்து படையினர் மற்றும் துறைமுக மீட்பு படையினர் இணைந்து மீட்பு பணியில் ஈடுபட்டனர். மீட்பு பணியில் 5 கடலோர கப்பல்கள் உட்பட 11 கப்பல்கள், 2 ஹெலிகொப்டர்கள் ஈடுபட்டன.

மீட்பு பணியினர் தண்ணீரில் மூழ்கி உயிருக்கு போராடிக் கொண்டிருந்த 20 பேரை உயிருடன் மீட்டனர். ஆனாலும் மேலும் பல பயணிகள் காணாமல் போனதாக தெரியவருகிறது. கொச்சி படகில் பயணம் செய்ய 25 பேருக்கு மட்டுமே டிக்கெட்விநியோகம் செய்யப்பட்டு இருந்ததாக மாநகராட்சி தெரிவித்துள்ளது. ஆனால் அந்த படகில் 40 இற்கும் மேற்பட்ட பயணிகள் பயணம் செய்ததாக உள்ளூர் மக்கள் தெரிவிக்கிறார்கள். மீட்பு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. (3-7)

# கையடக்கத் தொலைபேசி அழைப்பு துண்டிப்பு பிரச்சினைக்கு தீர்வுகாண பிரதமர் உத்தரவு

கையடக்கத்தொலைபேசி அழைப்புகள், பேசிக் கொண்டிருக்கும் போதே பாதியில் தொடர்பு அறுந்து விடும் பிரச்சினை, கடந்த 3 மாதங்களாக நிலவிவருகிறது. இதனால், கையடக்கத் தொலைபேசி சேவை நிறுவனங்கள் மீது வாடிக்கையாளர்கள் அதிருப்தி அடைந்துள்ளனர். ஆனால், நாடு முழுவதும் சுமார் 10 ஆயிரம் கையடக்கத் தொலைபேசி கோபுரங்கள் மூடப்பட்டது, கதிர்வீச்சு அபாயம், ஸ்பெக்ட்ரம் பற்றாக்குறை ஆகியவையே இதற்கு காரணம் என்று அந்நிறுவனங்கள் கூறி வருகின்றன.

இந்நிலையில், இதுபற்றி பிரதமர் நரேந்திர மோடி நேற்று முன்தினம் உயர்மட்ட கூட்டத்தை கூட்டி விவாதித்தார். இப்பிரச்சினை, சாதாரண மக்களை நேரடியாக பாதிப்பதாக கூறி, அவர் கவலை தெரிவித்தார். இதற்கு தீர்வுகாண எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை கேட்டறிந்த அவர், விரைவில் தீர்வு காணுமாறு அதிகாரிகளிடம் வற்புறுத்தி கூறினார். அழைப்பு அறுந்து விடும் பிரச்சினை, இணையதள தொடர்புக்கும் பரவாமல் பார்த்துக் கொள்ளுமாறும் அவர் கேட்டுக் கொண்டார். (3-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுவார் அழுவார் எல்லாம் தம் கவலை!
திருவன் பெண்டிலுக்கு அழ யாருமில்லை.
- தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## அந்த லோகத்தில் கூடியவர்கள் கூக்குரலிட்டு அழுதது ஏன்?

அது ஒரு வித்தியாசமான உலகம். ஈரேழு பதின்னான்கு லோகங்கள் என்று செல்வார்கள் அல்லவா? அதில் ஒன்றாக இருக்கலாம் என்பது நம் ஊகம்.

ஆயிரக்கணக்கானவர்கள் கூடி இருக்கின்றனர். அவர்களின் முகங்களில் சோகத்தின் ரேகைகள் புரையோடியுள்ளன.

நான் நிற்பதை அவர்கள் அறியவில்லை என்பது மட்டும் உண்மை. தூய வெள்ளை நிற ஆடை அணிந்திருக்கின்றனர். அவர்கள் கூடியிருப்பதன் காரணம் என்ன? மறைந்திருந்து அவதானித்தேன். சில நேரம் அவர்கள் "ஓ"என்று அழுதனர்.

தங்கள் உறவுகளைப் பிரிந்த சோகம் அதில் தெரிந்தது. என் பிள்ளை, என் குழந்தை, என் சகோதரம், என் தாய் தந்தை, என் மனைவி, என் கணவன் இப்படியாக தத்தம் உறவுகளைச் சொல்லி அவர்கள் அழுது முடித்தனர். கூட்டத்தில் ஒருவர் எழுந்தார்.

எல்லாம் இருக்கும் மட்டும்தான். இறந்து விட்டால் அவ்வளவுதான். நாங்கள் மறுஉலகம் வந்து; இல்லை இல்லை மறு உலகத்திற்கு எங்களை கட்டாயமாக அனுப்பி ஆறு ஆண்டுகள் ஆனதோடு எங்கள் நினைப்பு எங்கள் குடும்பங்களுக்கு மட்டுமே உரியதாக்கப்பட்டு விட்டது.

இனம், உறவு, நினைவேந்தல் என்றெல்லாம் கதைத்தவர்கள் இப்போது மௌனிகளாகி விட்டனர்.

அதிலும் குறிப்பாக தமிழ் அரசியல் தலைமை எங்களைப் பற்றி இம்மியும் நினைப்பதாக இல்லை. தேர்தல் பிரசாரத்தின் பேசு படுபொருளாக மட்டுமே நாங்கள் இப்போது இருக்கிறோம்.

வன்னியில் நடந்த யுத்தத்தில் எங்களைக் கொன்றொழித்தவர்கள் எந்தத் தண்டனையும் இன்றி நடமாடுகின்றனர். அதோ அந்தக் கூட்டத்தைப் பாருங்கள் வன்னியில் கொல்லப்பட்ட குழந்தைகளும் சிறுவர்களும். அந்தக் கூட்டத்தில்தான் பாலச்சந்திரனும் குந்தியிருக்கிறான். எனினும் எங்களுக்கான நியாயம் எதுவுமில்லாமல் போயிற்று. நாங்கள் கொல்லப்பட்ட எங்களின் உடல்களைக் காட்டி 2010இல் பாராளுமன்றம் சென்றவர்கள் 2015இல் கொழும்பு அரசியலுக்கு சாமரை வீசுகின்றனர்.

இச் சந்தர்ப்பத்தில் இன்னொருவர் எழுந்தார். ஐயா! அவர்களுக்கு எந்த இழப்புமில்லை. அவர்கள் கொழும்பில் சுகபோகமாக வாழ்ந்தவர்கள். எங்களை எப்படி நினைப்பார்கள்? நாங்கள் ஏழைகள். விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருந்து ஓடித் திரிந்து உயிரைக் காப்பாற்ற முனைந்தும் முடியாமல் போய், உடல் சிதறி பரலோகம் வந்தவர்கள்! ஆனால் எங்களைப் பற்றி பேச வேண்டியவர்கள் வாகனப் பெமிற் படிவம் நிரப்புவதில் தீவிரமாக உள்ளனர்.

சர்வதேச விசாரணை இதெல்லாம் தேவையில்லை. 13ஐத் தந்தால், எங்கள் சீவியம், எங்கள் பதவி பக்குவமாக பாதுகாக்கப்படும் என்றிருக்கின்றனர். நாங்கள் என்ன செய்ய முடியும்? சர்வதேச விசாரணை நடக்கும் என்றிருந்தோம். அதுவும் நின்று போயிற்று. எங்களைக் கருப்பொருளாய் வைத்து பாராளுமன்றப் பதவியை எடுத்த எங்கடயளே எங்கட தலையில மண்ணைக் கொட்டி விட்டினம்.

கடவுளே! ஏன்தான் எங்களுக்கு மட்டும் இத் தண்டனை. எங்களையும் ஈழ மண்ணில் வாழ விட்டிருந்தால், நாங்களும் 13ஐப் பெற்று எங்கட குடும்பங்களோடு மகிழ்வாக இருந்திருப்போம் அல்லவா? இப்படி அவர் சொன்னபோது மீண்டும் அழுகுரல்.

கடவுளே! எங்கட இழப்புகளை உணராமல் தங்கட பதவிக்காகப் பாடுபடுவோரை நீதான் திருத்த வேணும். இப்படி அவர்கள் கூறி அவலக்குரலிட்டுக் கலைந்த போது, ஓட்டம் எடுத்த நான் கட்டிலால் விழுந்தேன். கண்டது கனவு.

## ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்துக் கல்லூரியில் கற்பிக்கின்ற அனைத்து ஆசிரியர்களுக்குமான அவசர கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 31 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

எனவே மேற்படி கலந்துரையாடலுக்கு அனைத்து ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பாடசாலை அதிபர் ஐ.தயானந்தராஜா அறிவித்துள்ளார். (இ-5)

## மனிதனாக வாழ்வோம் கண்காட்சி நல்லூரில்

(யாழ்ப்பாணம்)

நல்லைக்கந்தப் பெருமானின்மஹோற்சவ காலத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மய மிஷன் நடத்தும் "மனிதனாக வாழ்வோம்" கண்காட்சி அங்குரார்ப்பண நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணிக்கு நல்லூர் ஆலய வடக்கு வீதியில் உள்ள மகேஸ்வரன் மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (இ-7)

## நல்லூரில் இன்று இசைப்பேருரை

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தன் ஆலய உற்சவ காலத்தையொட்டி நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் நல்லை ஆதீன குருமூர்த்தி ஆலய மண் டபத்தில் தினமும் மாலை 6.45 மணிக்கு நடைபெற்று வருகின்ற கந்தபுராண தொடர் இசைப்பேருரையில் இன்று வெள்ளிக்கிழமை பார்வதி அவதாரம என்னும் கந்தபுராண இசைப் பேருரையினை நல்லைக்குரு மணியின் பிரதம வாரிசு "கானகதாவாரிதி" பிரம்ம ஸ்ரீசிவ.வை. நித்தியானந்த சர்மா வழங்கவுள்ளார். (இ-5)

## இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

**படியுங்கள்! படியுங்கள்!**

★ மக்களைத் தன்பக்கம் இழுப்பதற்காக ஒருவன் கல்வி கற்பானாயின் அவனை அல்லாஹ் நரகத்தில் நுழைய செய்வான்.

★ ஒருவன் கல்வியைத் தேடி அந்தப் பாதையில் நடந்தால் அந்தப் பாதையை அல்லாஹ் சொர்க்கப் பாதையாக ஆக்குகிறான்.

★ கற்ற கல்வியைப் பற்றி ஒருவரிடம் வினவப்பட்டும், அவன் கூறாமல் அதை மறைப்பானாயின் மறுமையில் நெருப்பாலான கடிவாளத்தைக் கொண்டு கடிவாளமிடப்படுவான்.

★ மார்க்க அறிவாளிகளை மட்டம் தட்டவும், முட்டாள்களிடம் பெருமை அடிக்கவும் கல்வியை கற்காதீர்கள்.

★ கல்வியின் மூலம் பெரும் பதவிகளை தேடிக் கொள்ளாதீர்கள். இவ்வாறு ஒருவன் செயல்பட்டால் அவனுக்கு நரகம் தான் கிடைக்கும்.

★ அறிவும் பொருளும் ஒவ்வொரு குறைகளையும் மறைக்கும். அறியாமையும் மிடுமையும் ஒவ்வொரு குறைகளையும் வெளிப்படுத்தும்.

★ கல்வியைக் கற்றுக் கொள்ளுங்கள். அதன் கண்ணியத்தையும் கற்றுக் கொள்ளுங்கள்.

## தூக்குக்காவடி எடுப்போருக்கான ஆணையாளரின் அறிவித்தல்

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் மஹோற்சவத்தையொட்டி தூக்குக் காவடி நேர்த்திக்கடன் செய்யும் அடியார்கள் இம்முறை நல்லூர் கோயில் வடக்கு வீதியூடாக (சங்கிலியன் வீதியூடாக கோவில் வீதி வடக்கு பக்கமாக) துர்க்கா மணிமண்டபத்தை அடைந்து வடக்கு வீதியில் உள்ள குபேரன் கோபுர வாசலை அடைந்து அங்கு நேர்த்தியை முடிவுறுத்தும்படியும் அத்துடன் சுவாமி வெளிவீதி வந்து இருப்பிடத்தை அடையும்வரை நேரத்தைக் கருத்திற் கொண்டு தூக்குக்காவடி நேர்த்தி செய்யும் அடியார்கள் உள்வருமாறு கோயில் நிர்வாகத்தினர் கேட்டுக்கொண்டமைக்கு அமைய யாழ்.மாநகர ஆணையாளர் செ.பிரணவநாதன் இவ் அறிவித்தலை விடுத்துள்ளார். (இ-5)

## விதாதா வள நிலையத்தில் மாற்றீட்டுப் பயிற்சி நெறிகள்

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச செயலகத்தின் ஊடாக் சுயதொழில் முயற்சியாளர்களை உருவாக்கும் வகையில் தொழில்நுட்ப மாற்றீட்டுப் பயிற்சி நெறிகள் கரவெட்டி பிரதேச செயலக விதாதா வள நிலையத்தில் செப்டெம்பர் மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது என கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சிவஸ்ரீ அறிவித்துள்ளார்.

இப்பயிற்சி நெறிகளில் கணனி வன்பொருள் பயிற்சி நெறி, கணனி வலையமைப்பு பயிற்சி நெறி, கணனி வரைபட வடிவமைப்பு, கணனி இணையத்தள அபிவிருத்தித் தொழில்நுட்பம்,

காளான் உற்பத்தி, பழம் மரக்கறி சார் உற்பத்திப் பொருட்கள் போன்ற கற்கை நெறிகள் கற்பிக்கப்படவுள்ளன.

எனவே இப்பயிற்சி நெறியில் பங்கு பெற விரும்பும் பயனாளிகள் செப்டெம்பர் 10 ஆம் திகதிக்கு முன்னதாக கரவெட்டிப் பிரதேச செயலக விதாதா வள நிலையத்தில் தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனவும் 021 2264958 எனும் தொலைபேசி ஊடாக தொடர்பு கொள்ள முடியும் என பிரதேச செயலர் மேலும் அறிவித்துள்ளார். (இ-5-60)

### ஆங்கிலப் பயிற்சி நெறியின் அடுத்த பிரிவு செப்.11ஆம் திகதி

வடமாகாண கல்வியமைச்சின் கீழ் இயங்கும் STEPS Institute நிறுவனத்தினால் நடத்தப்படும் பாடசாலை விடுமுறை மாணவர்கள் மற்றும் பல்கலைக் கழக புகுமுக மாணவர்களுக்கான ஆங்கிலப் பயிற்சி நெறியின் அடுத்தபிரிவு செப்டெம்பர் 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது. பயிற்சியைப் பின்பற்ற விரும்புபவர்கள் தமது விபரங்களை யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் அமைந்துள்ள STEPS Institute இல் உடன் பதிவு செய்து கொள்ளமுடியும் எனவும் அல்லது 021 222 4580, 021 222 1395 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ள முடியும் எனவும் இந்நிறுவனம் அறிவித்துள்ளது. (இ-5)

**சின்மய மிஷன்**

**நல்லூர் முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மய மிஷன்- வலம்புரி பத்திரிகையின் இணை அனுசரணையுடன் இணைந்து நடத்தும் இந்துவாக வாழ்வோம் வினாவிடைப்போட்டி**

வினா: 1) a) சைவ விழுமியத்தை குறித்து நிற்கும் படம் யாது?
b) (I) இதன் தத்துவம் என்ன?
II) இதனால் ஏற்படும் அனுகூலம் யாது?
III) இதனைக் கடைப்பிடிக்கும் முறை யாது?

**வினாக்களுக்கான விடைகளை நல்லூர் வடக்கு வீதியில் அமைந்துள்ள மகேஸ்வரன் மணிமண்டபத்தில் நடைபெறும் இந்துவாக வாழ்வோம் கண்காட்சியைப் பார்வையிடுவதன் மூலம் அறிந்துகொள்ள முடியும்.**



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### சீடனாயிருக்கும் நிலை முடிவடைகிறது

ஞானத்திற்கு ஒரு முடிவு உண்டு. ஞானம் முழுமை பெறுகிறது. ஞானம் பெறுவதுதான் சீடனின் நோக்கம் என்பதால் சீடனாயிருக்கும் நிலையும் முடிவடைகிறது.

ஆற்றைக் கடந்ததும் படகு எவ்வளவுதான் அழகானதாக இருந்தாலும் நீங்கள் படகைவிட்டு இறங்கி விடுகிறீர்கள்.

பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பின் சீடன் தனது கல்வியை முடிக்கிறான். குருநாதர் ஸமாவர்த்தம் எனும் ஒரு சடங்கை செய்கிறார். அப்போது அவர் சீடரிடம் அவனது மாணாக்க (சிஷ்ய) நிலை முடிந்து விட்டதாகவும் தனக்குச் சரிசமமாக இனி அவன் நடந்து கொள்ள வேண்டும் என்றும் சொல்கிறார். அவனிடம் உள்ள தெய்வீகம்- பிரம்மம் வெளிப்படவும் செய்கிறார். இவ்வாறாக சீடர் (மாணாக்க) நிலையை முடித்து வைக்கிறார்.

வாழ்விலும் சாவிலும் உற்ற தோழராய் இருப்பவர்தான் ஸகா. ஸகா தன்னுடைய அன்பிற்குரியவரைத்தான் விரும்புகிறார். அவருக்காக ஏங்குகிறார். அவர் ஞானத்தைப் பற்றியோ முக்தியைப் பற்றியோ கவலைப்படுவதில்லை. அவருடைய அன்பு எல்லையற்றது. எல்லையற்ற ஒன்று முழுமைபெற ஒரு போதும் இயலாது, என்றும் முழுமைபெற இயலாத அன்பில் அவருடைய அன்பு முழுமையானது. அன்புப் பாதையில் முடிவு என்பது இல்லை.

அர்ஜுனன் ஸ்ரீ கிருஷ்ணருக்குச் சகாவாக இருந்தான். ஸ்ரீ கிருஷ்ணர் அர்ஜுனனுக்கு ஒரு பரிபூரண குருவாக இருந்த போதிலும் ஒரு ஸகாவாகவும் இருந்தார்.

நீங்கள் யார்?

ஒரு சிஷ்யனா (மாணாக்கனா) அல்லது ஒரு ஸகாவா? (அன்பிற்குரிய தோழனா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக்கிண்ணம் திருநெல்வேலி கிரிக்கெட் கழகம் முன்னிலை






ஜோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் 2010 ஆம் ஆண்டிலிருந்து 6 ஆண்டுகளாக நடத்தி வரும் யாழ்.நகரில் சிறந்த கழக அணி தெரிவு நிகழ்வில் 01.01. 2015 இல் இருந்து 31.07.2015 வரை நடைபெற்ற 72 போட்டிகளுக்கு வழங்கப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணி 10 போட்டிகளில் பங்கு பற்றி 8 போட்டிகளில் வெற்றி பெற்று 55.45 புள்ளிகளை பெற்று முதலாம் இடத்தில் உள்ளது.

ஜொலிஸ்ரார் அணி 11 போட்டிகளில் பங்கு பற்றி 7 போட்டிகளில் வெற்றி பெற்று 51.68 புள்ளிகளைப் பெற்று 2ஆம் இடத்தில் உள்ளது.



கே.சீ.சீ.சீ. அணி 10 போட்டிகளில் பங்குபற்றி 5 போட்டிகளில் வெற்றி பெற்று 45.99 புள்ளிகளைப் பெற்று 3ஆம் இடத்தில் உள்ளது.

ஹாட்லியையற்ஸ் 43.93 (08/07), சிறிகாமாட்சி அணி 43.30 (09/06), யாழ்.பல்கலைக்கழகம் 34.30 (08/04), ஓல்ட்கோல்ஸ் 32.50 (07/03), யாழ்.ஜொனியன்ஸ் 30.48 (05/03), ஸ்கந்தாஸ்ரார் 28.65 (07/03), யாழ். சென்றல் 27.37 (05/03), பற்றீசியன்ஸ் 25.06 (06/03), மானிப்பாய் பரிஸ் 25.02 (04/03), சென்றலைட்ஸ், 24.62, 06/03). ஸ்ரான்லி 20.98 (06/02), விக்டோரி 17.79 (06/01), கிறாஸ் கொப்பர்ஸ் 15.83 (04/02) சென்றலைட்ஸ் புளூஸ் 13.97 (03/02), விங்ஸ் 13.84 (03/03), டிறி பேக்ஸ்ரார் 12.60 (04/01) திருநெல்வேலி YMHA 12.31 (05/01), யூனியன்ஸ் 10.51 (02/01), அரியாலை சென்றல் 7.10 (04/00), றெயின்போ 4.81 (03/00), யங் ஸ்ரார்ஸ் 4.07(03/00), கே.சீ. சீ.சீ B 1.74 (01/00) (க)

# நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழக வடமாகாண ரீதியிலான உதைபந்தாட்டம்

## போராடி வென்றன அந்தோனியார்புரம், விண்மீன் அணிகள்




நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் வடமாகாண ரீதியிலான உதைபந்தாட்டப் போட்டியில் முதலாவது போட்டியில் வலைப்பாடு சென்.ஆன்ஸ் வி.க. எதிர்த்து மன்னார் அந்தோனியார் புரம் வி.க. மோதியது.

விறுவிறுப்பாக இடம்பெற்ற போட்டியின் முதல் பாதி ஆட்டம் எதுவித கோல்களும் பெறப்படாது சமநிலையில் முடிவடைய இரண்டாம்பாதி ஆட்டத்தின் 18 ஆவது நிமிடத்தில் அணியினரின் மிகத் துல்லியமாக பந்துப்பரிமாற்றம் மூலமாக விஜயகுமார் ஒரு கோலைப் பெற்றுக்கொடுத்தார்.

பல முயற்சிகள் மேற்கொண்ட போதும் சென்.ஆன்ஸ் அணியினரால் கோல் எதுவும் பெறப்பட முடியவில்லை.

ஆட்டநேர முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் அந்தோனியார்புரம் வி.க.வெற்றி பெற்றது. விஜயகுமார் ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்டு முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் சு.சிவசுப்பிரமணியம் பதக்கம் அணிவிக்க முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் மு.பன்னீர்ச்செல்வம் பணப்பரிசை வழங்கினார்.

இரண்டாவது போட்டி பலாலி விண்மீன்அணியினருக்கும்வலைப்பாடு ஜெகமீட்பர் அணியினருக்கும் இடையில் அனல்பறக்கும் ஆட்டமாக அமைந்த போதும் இரு அணியினராலும் ஆட்டநேர முடிவு வரை கோல் எதனையும் பெற்றுக் கொள்ளமுடியவில்லை.

இதனால் தொடரப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையில் விண்மீன் வி.க. 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

இரண்டு தண்ட உதைகளை தடுத்த ஜோன் கெனடி ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்டு முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் மு.பன்னீர்ச்செல்வம் பதக்கம் அணிவிக்க முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் சு.சிவசுப்பிரமணியம் பணப்பரிசிலை வழங்கினார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை-இந்தியா 3ஆவது டெஸ்ட் இன்று ஆரம்பம்




வீராட்கோலி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி இலங்கையில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது.

இரு அணிகள் இடையேயான 3 டெஸ்ட் போட்டி தொடரில் காலேயில் நடந்த முதல் டெஸ்டில் இலங்கை அணி 63 ஓட்டத்தில் வெற்றி பெற்றது. கொழும்பில் நடந்த 2-வது டெஸ்டில் இந்தியா 278 ஓட்டங்கள வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதனால் தொடர் 1-1 என்ற கணக்கில் உள்ளது.

இந்தியா-இலங்கை அணிகள் மோதும் 3-வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி கொழும்பில் இன்று ஆரம்பமாகிறது.

கடந்த டெஸ்டில் சிறப்பாக விளையாடி வெற்றி பெற்றதை போல இந்த டெஸ்டிலும் இந்திய அணி திறமையை வெளிப்படுத்தி தொடரை வெல்லுமா? என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய அணி இலங்கை மண்ணில் டெஸ்ட் தொடரை கைப்பற்றி 22 ஆண்டுகள் ஆகிறது. அசாருதீன் தலைமையிலான அணி 1993-ம ஆண்டு 1-0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

தற்போதைய இலங்கை அணி பலவீனமாக இருப்பதால் வீராட்கோலி தலைமையிலான அணிக்கு டெஸ்ட் தொடரை வெல்ல நல்ல வாய்ப்பு இருக்கிறது. இதை இந்திய வீரர்கள் சரியாக பயன்படுத்திக் கொள்வார்களா? என்று ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய அணியில் இடம் பெற்று இருந்த தமிழக வீரர் முரளிவிஜய், விக்கெட் கீப்பர் விர்த்திமான் சகா ஆகியோர் நாடு திரும்பி உள்ளனர். அவர்களுக்கு பதிலாக கருண்நாயர், நமன் ஒஜா இடம் பெற்றுள்ளனர். இருவரும் இதுவரை டெஸ்டில் விளையாடியது கிடையாது.

கடந்த 2 டெஸ்டிலும் வாய்ப்பு கிடைக்காத புஜாராவுக்கு இன்றைய போட்டியில் வாய்ப்பு வழங்கப்படுகிறது. அவர் ராகுலுடன் இணைந்து தொடக்க வீரராக விளையாடுவார். விர்த்திமான் இடத்தில் நாமன் ஒஜா விளையாடுவார்.

இந்திய அணி துடுப்பாட்ட பந்துவீச்சில் சமபலத்துடன் திகழ்கிறது. கடந்த டெஸ்டில் ராகுல், ரகானே சதம் அடித்து முத்திரை பதித்தனர். இதேபோல கப்டன் வீராட் கோலியும், ரோகித்சர்மாவும் நல்ல நிலையில் உள்ளனர். 5-வது வீரர் வரிசை மாற்றத்தால் ரோகித்தின் துடுப்பாட்டத்தில் பலன் இருந்தது.

பந்துவீச்சில் சென்னையை சேர்ந்த அஸ்வின் துருப்பு சீட்டாக உள்ளார். 2 டெஸ்டிலும் சேர்த்து அவர் 17 விக்கெட் கைப்பற்றி உள்ளார். இவரது பந்துவீச்சை பொறுத்தே அணியின் நிலை உள்ளது. அவருக்கு எல்லா வகையிலும் உறுதுணை அளிக்கும் வகையில் அமித்மிஸ்ரா உள்ளார்.

உலகின் முன்னணி துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான சங்ககாரவின் ஓய்வால் இலங்கை அணி சற்று பலவீனமாக காணப்படுகிறது. ஆனாலும் சொந்த மண்ணில் விளையாடுவதால் அந்த அணி பதிலடி கொடுக்கும் ஆர்வத்துடன் உள்ளது.

இரு அணிகளும் வெற்றிக்காக கடுமையாக போராடுவார்கள் என்பதால் இந்த டெஸ்ட் விறுவிறுப்பாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இன்றைய டெஸ்ட் போட்டி இலங்கை நேரப்படிகாலை 10 மணிக்கு தொடங்குகிறது. (க)

# யுனிசெப் தூதராக ஜோகோவிக் நியமனம்




டென்னிஸ் உலகத் தரவரிசையில் முதல் இடத்தில் இருக்கும் செர்பியாவின் நோவக் ஜோகோவிக், குழந்தைகளுக்கான ஐ.நா. அமைப்பான யுனிசெப் அமைப்பின் நல்லெண்ண தூதராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் ஏற்கெனவே, யுனிசெப்பின் செர்பியா தூதராக இருந்து, பாதிக்கப்பட்ட குழந்தைகளை பாதுகாக்கும் வகையில் செயல்பட்டு வருகிறார். மேலும், அவர் தனியாக ஒரு அறகட்டளையும் நடத்தி வருகிறார்.

தற்போது கிடைத்துள்ள புதிய பதவி குறித்து ஜோகோவிக் கூறுகையில், யுனிசெப்பின் நல்லெண்ண தூதராக மாறியதற்கு மிகவும் பெருமையடைகிறேன். ஒவ்வொரு சிறுவன் மற்றும் சிறுமிகளின் உரிமை, குழந்தைப் பருவத்திலேயே அவர்கள் மீது அக்கறை கொள்ளுதல் போன்றவைக்கு தொடர்ச்சியாக உதவி செய்வேன் என்றார். (க)

# உலகச் சம்பியன்ஷிப் தடகளப் போட்டி 200 மீ.தூர ஓட்டத்தில் போல்ட் தங்கம்




உலகச் சம்பியன்ஷிப் தடகளப் போட்டி சீனாவில் உள்ள பீஜிங் நகரில் நடைபெற்று வருகிறது. நேற்று ஆண்களுக்கான 200 மீட்டர் தூர ஓட்ட பந்தயம் இறுதிச்சுற்று நடைபெற்றது. இதில் உசைன் போல்ட், காட்லின் உள்ளிட்ட 9 பேர் கலந்து கொண்டனர்.

இந்த போட்டியில் உசைன் போல்டுக்கு காட்லின் கடும் சவாலாக இருப்பார் என்று கருதப்பட்டது. இருந்தாலும், போல்ட் காட்லினை பின்னுக்குத் தள்ளி தங்க பதக்கம் வென்றார். உசைன் போல்டு பந்தய தூரத்தை 19.55 வினாடிகளில் கடந்தார்.

காட்லின் 19.74 வினாடிகளில் கடந்து 2-வது இடத்தையும், தென்னாபிரிக்கா வீரர் மூன்றாவது இடத்தையும் பெற்றனர்.

ஏற்கெனவே, கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற 100 மீட்டர் ஓட்டத்திலும் உசைன் போல்டுதான் சம்பியன் பட்டம் வென்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# சங்ககாரவின் வெற்றிடத்தை நிரப்புவது மிகவும் கடினமான ஒன்று-மத்யூஸ்




உலகின் தலைசிறந்த துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான சங்ககார, கடந்த வாரம் இந்தியாவுடன் நடைபெற்ற 2-வது டெஸ்ட் போட்டியுடன் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றார்.

அவர் 134 டெஸ்டில் விளையாடி 12,400 ஓட்டங்கள் குவித்துள்ளார். இதில் 38 சதம், 52 அரை சதமும் அடங்கும். மேலும், டெஸ்ட் போட்டிகளில் அதிக ஓட்டங்கள குவித்த வீரர்கள் பட்டியலில் 5-வது இடத்திலும் உள்ளார்.

சங்ககாரவின் ஓய்வு குறித்து கிரிக்கெட் ஜம்பவான்கள் பலர் தங்களது கருத்துகளை தெரிவித்து வந்தனர். இந்நிலையில், இந்தியாவுக்கு எதிராக இன்று நடைபெறும் 3-வது டெஸ்ட் போட்டி குறித்து பேட்டி அளித்த இலங்கை அணியின் கப்டன் மத்யூஸ், சங்ககாரவை புகழ்ந்துள்ளார். சங்ககார குறித்து அவர் கூறுகையில் சங்ககாரவின் இழப்பு இலங்கை அணிக்கு சற்று கடினமான ஒன்றாகும். அவரின் ஓய்வையடுத்து எங்கள் அணி இன்னும் ஒரு போட்டியை கூட விளையாடாததால் சற்று கடினமாகத்தான் இருக்கும். அவருடைய இடத்தை நிரப்புவதற்கு நீண்ட நாட்கள் ஆகலாம். ஆனால், அதை ஈடு கட்டும் முயற்சியை அடுத்த போட்டியிலிருந்தே தொடங்குவோம். அணியை தொடர்ந்து வெற்றிப் பாதைக்கு அழைத்து செல்ல சிறப்பாக செயல்படுவோம் என்று அவர் கூறினார். (க)

# மகளிர் ஆஷஸ் தொடர் இங்கிலாந்து அணி வெற்றி



இங்கிலாந்து-அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் யுத்தம் என்று கருதப்படும் ஆஷஸ் தொடரின் மகளிருக்கான போட்டிகள் கடந்த ஜூலை மாதம் 21-ம் திகதி தொடங்கியது. மூன்று ஒருநாள் போட்டி, ஒரு டெஸ்ட் போட்டி மற்றும் மூன்று 20 ஓவர் போட்டிகள் கொண்ட இந்த தொடரில், முதல் ஒருநாள் போட்டியில் மட்டுமே இங்கிலாந்து அணி வெற்றி பெற்றிருந்தது.

இங்கிலாந்தின் செம்ஸ்வோர்ட் நகரில் நேற்று முன்தினம் நடைபெற்ற முதல் 20 ஓவர் கிரிக்கெட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடத் தொடங்கியது. அவுஸ்திரேலிய அணி 20 ஓவரில், இங்கிலாந்து அணியின் திறமையான களத்தடுப்பால் 8 விக்கெட்டுகளை இழந்து 122 ரன்கள் எடுத்தது. இதைத்தொடர்ந்து களமிறங்கிய இங்கிலாந்து அணி வெறும் 17.3 ஓவர்களில் மிகத் திறமையாக துடுப்பெடுத்தாடி மூன்று விக்கெட் இழப்புடன் 125 ரன்களை குவித்து வெற்றி பெற்றது.

இங்கிலாந்தின் முக்கிய வீராங்கனையான சரா டைலர் வெகு நாட்களுக்கு பிறகு மீண்டும் தனது துடுப்பாட்டத்தை நிரூபிக்கும் விதமாக நேற்றைய ஆட்டத்தில் அரை சதம் அடித்துள்ளார். இது அவரது 12-வது 20 ஓவர் போட்டிகளின் அரை சதம் ஆகும். மற்றும் அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துக் சென்ற சரா இப்போட்டியின் ஆட்ட நாயகியாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இங்கிலாந்தின் ஹோவ் மற்றும் கார்டிப் பகுதிகளில் அடுத்த இரு போட்டிகள் இன்று மற்றும் 31-ம் திகதிகளில் நடைபெற உள்ளது. (க)

## திருவெண்காட்டில் இன்று தேர்

(மண்டைதீவு)

மண்டைதீவு திருவெண்காடு சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தில் இன்று தேர்த்திருவிழா இடம் பெறும். காலை 6 மணிக்கு பூசைகள் ஆரம்பமாகி காலை 8.15 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம் பெற்று 10.30 மணிக்கு விநாயகப் பெருமான் தேரில் ஆரோகணிப்பார். (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பாபிஷேகத்தில் தங்கநகை திருட்டு

(யாழ்ப்பாணம்)

ஆலயத்தில் காணப்பட்ட கூட்ட நெரிசலை சாதகமாக பயன்படுத்தி இரண்டு பெண்களின் சுமார் 6 பவுண் பெறுமதியான தங்க சங்கிலி இரண்டினை பெண் ஒருவர் நாசுக்காக களவாடியுள்ளார்.

இச்சம்பவம் நேற்று காலை 9.00 மணியளவில் யாழ்ப்பாணம் கந்தர் மடம் அருள்மிகு ஆத்திசூடி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகத்தின் போது இடம் பெற்றுள்ளது.

நேற்றைய கும்பாபிஷேகத்தின் போது ஆயிரத்துக்கு அதிகமான அடியார்கள் கூடியிருந்தனர். இந்த கூட்ட நெரிசலை சாதகமாக பயன் படுத்திய பெண் ஒருவர் இரண்டு பெண்களின் தங்கச் சங்கிலியை அபகரித்துள்ளார்.

மூன்றாவது ஒரு பெண்ணின் நகையை அபகரிக்க முற்பட்ட வேளையே அத்திருட்டுப் பெண்ணை பிடிக்க முற்பட்டபோதும் அவரை இனங் காண முடியவில்லை. களவாடியது பெண் என இனங்கண்ட போதும்யார் என்பதை அவதானிக்க முடிய வில்லை.

இது தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸில் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது. (எ-8,11)

## முக்கிய அமைச்...

ஐக்கிய தேசியக் கட்சிக்கு 33 அமைச்சு பதவிகளும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு 12 அமைச்சு பதவிகளை யும் வழங்குவது என தற்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த அமைச்சுக்களில் முக்கிய மான அமைச்சுக்கள் பலவற்றை தன்வசம் வைத்து கொள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீர்மானித் துள்ளதாக தகவல்கள் வெளியாகி யுள்ளது. (எ-11)

# சர்வதேச விசாரணை என்...

கண்டவாறு தெரிவித்தார். யப்பானிய அரசியல் விவகாரங்களுக்கு பொறுப்பான ஆலோசகர் மறிக்கோ யம மோடோ சந்திப்பு தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

போர் குற்றங்கள் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இலங்கை அரசாங்கம் உள்ளக பொறிமுறை தான் என்று சொல்லி வருகின்ற நிலையில் அது பற்றி எங்களுடைய நிலைப்பாடு தெளிவாக இருக்கிறது.

இலங்கை அரசாங்கம் அவவாறு சொல்வது அவர்களுடைய நிலைப்பாடாக இருந்தாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் வடக்கு மாகாண சபையின் நிலைப்பாடு தெளிவானது போர் குற்றங்கள் மனித உரிமை மீறல்கள் விடயத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தை சார்ந்த தனித்துவமான சர்வதேச விசாரணையை நாங்கள் கேட்டுநிற்கிறோம் அதில் எந்தவிதமாற்றமும் கிடையாது.

அடிப்படை மனித உரிமைகள் மீறி பல வருடங்களாக விசாரணைகள் மற்றும் குற்றசாட்டுகள் இன்றி சிறையில் அடைத்து வைக்கப்படிருக்கும் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் யப்பானிய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பெண் தலைமைத்துவ குடும்பங்கள்இஅநாதரவான சிறுவர்கள் மற்றும் வலுவிழந்தவர்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்படவேண்டும். இவர்களுககான திட்டங்களை நாங்கள் வரைகின்ற பொழுது நிதிவசதியின்மை தடையாக இருக்கிறது. அதற்கான ஆதரவை இலங்கை அரசாங்கமும் சர்வதேசமும் எங்களுக்கு உதவவேண்டும்.

பொருளாதார வளர்ச்சியை நோக்கி நகரவதற்கான நிதிவசதிகளை யப்பான் அரசாங்கம் வடக்கு மாகாணத்துக்கு வழங்க வேண்டும். குறிப்பாக ஜப்பானிய அரசாங்கம் எங்களுடைய நலன்களில் கூடிய அக்கறை செலுத்தவேண்டும். இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறையிலான தீர்வை காண்பதற்கு சர்வதேசத்தோடு இணைந்து யப்பானிய அரசாங்கம் உதவவேண்டும். சர்வதேசத்தோடு இணைந்தது இலங்கை அரசாங்கத்துக்கு இனப்பிரச்சனை தீர்வுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும்என்றார். (எ-4)

## வினாத்தாள் திருத்தும்...

பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

38 பாடசாலைகளில் இப் பரீட்சை திருத்தம் இடம்பெற இருப்பதாக தெரியவந்துள்ளது.

இதற்கிடையில், க.பொ.த உயர்தரப் பரீட்சை வினாத்தாள்களின் முதற்கட்ட திருத்தம், செப்ரெம்பர் 12 முதல் 25 வரை இடம் பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக 23 பாடசாலைகள் பயன்படுத்த இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் 8 பாடசாலைகள் முழுமையாகவும், 15 பாடசாலைகள் பகுதி பகுதியாகவும் பயன்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செப்ரெம்பர் 9 திகதியுடன் உயர்தர பரீட்சைகள் நிறைவடையும் என எதிர்பார்ப்பதாக பரீட்சைகள் திணைகளம் தெரிவித்துள்ளது. (எ-11)

## மகிந்தவுக்கு எதிரான...

ஊழியர் சேமலாப நிதி கொடுக்கல் வாங்கல் மற்றும் கிரேக்க பிணை முறி கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் இவ்வாறு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.

வழக்கத் தாக்கல் செய்த மனுதாரர் வழக்கை வாபஸ் பெற்றுக் கொள்வதாக நீதிமன்றில் அறிவித் துள்ளார்.

இவ்வாறு மனு வாபஸ் பெற்றுக் கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டதன் பின்னர் வழக்கினை நீதவான் தள்ளுபடி செய்துள்ளார். பொதுமக்கள் பணம் பாரியளவில் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதாகத் தெரிவித்து இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

பல மில்லியன் கணக்கான ரூபாய் நட்டம் ஏற்பட்டதாகத் தெரிவித்து வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. என்ன காரணத்திற்காக இவ்வாறு திடீரென வழக்கு வாபஸ் பெற்றுக்கொள்ளப்பட்டது என்பது பற்றிய தகவல்கள் வெளியிடப்பட வில்லை. (எ-11)

## ஐரோ.ஒன்றிய பிரதி...

வருகை தந்த குழுவினர், ஐரோப்பிய ஒன்றியத்தினால் வழங்கப்படவுள்ள வீட்டுத்திட்டங்கள் தொடர்பில் ஆராய்ந்ததுடன், மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிற்கும் விஜயம் மேற்கொண்டனர். சிவபுரம், புண்ணை நீராவி, பன்னங் கண்டி பகுதிகளிற்கு விஜயம் மேற்கொண்ட குழுவினர், மக்களின் நிலைமைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டதுடன், வீட்டுத்திட்டம் வழங்குவது தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டனர். பின்னர் மாவட்ட செயலகத்திற்கு வருகை தந்த குழுவினர் அரசாங்க அதிபருடன் கலந்துரையாடினர். (எ-11)

## விசாரணை...

தெரிவித்திருந்தார்.

அத்துடன், போர்க்குற்றம் தொடர்பில எடுக்கப்படவேண்டிய தீர்மானங்கள் குறித்து, ஐ.நா விசாரணை அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ள விடயங்களை மாற்றமின்றி இலங்கை அரசாங்கம் செயற்படுத்த வேண்டுமென, அழுத்தம் கொடுக்கப்படுமென வும் குறிப்பிட்டார்.

இந்நிலையில், போர்க்குற்றம் தொடர்பான அமெரிக்காவின் நிலைப்பாட்டில் தற்போது மாற்றம் ஏற்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. (எ-11)

# செப்ரெம்பர் 4 ஆம் திகதி...

ரெம்பர் மாதம் 2-ம் திக்தி பதவிப் பிரமாண நிகழ்வுகள் நடத்தப்படக் கூடிய சாத்தியம் குறைவாகக் காணப் படுவதாகத் தெரிவித்துள்ளார்.

அநேகமாக எதிர்வரும் 4-ம் திகதியே பதவிப் பிரமாண நிகழ்வுகள் நடைபெறும் என எதிர்பார்க்கப் படுகிறது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் துமிந்த திஸாநாயக்க இதனை உறுதி செய் துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், செப்ரெம்பர் மாதம் 2-ம் திகதி தேசிய அரசாங்கத்தின் அமைச்சர்கள் பதவிப் பிரமாணம் செய்து கொள்ள மாட் டார்கள் என தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 2ம் திகதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 64ம் ஆண்டு பூர்த்தி நிகழ்வுகள் பொலநறுவையில் நடைபெறவுள்ளது.

எனவே அமைச்சர்கள் பதவிப் பிரமாண நிகழ்வில் பங்கேற்பதில் நடைமுறைச் சிக்கல்கள் காணப் படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தேசிய அரசாங்கதின் அமைச்சர்கள் எண்ணிக்கை உயர்த்தப்பட உள்ளதாகத் தெரிவிக் கப்படுகிறது. 19-ம் திருத்தச் சட்டத்திற்கு அமைய அமைச்சர்களின் உச்சபடச எண்ணிக்கை 30ஆக வரையறுக் கப் பட்டுள்ளது.

தேசிய அரசாங்கத்தில் 45 அமைச்சர்களை நியமிக்கத் திட்ட மிடப்பட்டுள்ளது. அமைச்சர்களின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டுமாயின் பாராளுமன்றின் அங்கீகாரம் அவசிமாகின்றது.

செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி நடைபெறவுள்ள அமர்வுகளில் அரசாங்கம் இந்த் யோசனையை முன்வைக்கத் திட்டமிட்டுள்ளது.

எனினும், இது குறித்து விவாதம் நடத்த ஒரு நாள் அவகாசம் தேவைப் படுவதாக ஜே.வி.பி கட்சி, அரசாங்கத் திற்கு அறிவித்துள்ளது. எனவே, செப ரெம்பர் மாதம் 2ம் திகதி அமைச்சர்கள் பதவிப் பிரமாணம் செய்து கொள்ளக் கூடிய சாத்தியம் குறைவாகவே காணப்படுகின்றது. (எ-11)

## ஐ.நாவின் பரிந்துரை...

2009-ம் ஆண்டில் இலங்கைக்கு ஆதரவான வகையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த காலப் பகுதியில் மஹிந்த சமரசிங்க, மனித உரிமை விவகார அமைச்சராக கடமையாற்றியிருநதார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த தீர்மானம் முழுமையாக அமுல்படுத்தப்பட்டிருந்தால் 2012 மற்றும் 2013-ம் ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை நிறைவேற்ற சிக்கல்கள் ஏற்பட்டிருக்கும் என அவர் தெரிவித் துள்ளார்.

இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் 2009ம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அடுத்த மாதம் நடைபெறவுள்ள மனித உரிமைப் பேரவை அமர்வுகளின் போதும், அமெரிக்கா இலங்கைக்கு ஆதரவான தீர்மானம் ஒன்றை சமர்ப்பிக்க உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

நல்லிணக்கத்தை முதன்மைப் படுத்தி இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட உள்ளதாகத் தெரிவித் துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் தீர்மானத்திற்கு ஆதரவு கிடைத்தால், அதனை முழுமையாக அமுல்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் வலியுறுத்தி யுள்ளார்.

அனைத்து இன சமூகங்களினதும் நம்பிக்கையை கட்டியெழுப்பக் கூடிய வகையில் சுயாதீனமான உள்ளக விசாரணைப் பொறிமுறைமை ஒன்றை உருவாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் வலியுறுத்தி யுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளரினால் சமர்ப்பிக்கப்பட உள்ள அறிக்கையின் பரிந்துரைகளை அரசாங்கம் அமுல்படுத்த வேண்டியது அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார். (எ-[illegible])

## சர்வதேச பிடியிலிருந்து...

புலம் முகாமில் தங்கியுள்ள மக்களையும், வலி.வடக்கு மீள்குடியேற்ற குழுவினையும் நேரில் சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

இதன்போதே வலி. வடக்கின் மீள்குடியேற்ற தலைவரும் வலி. வடக்கு பிரதேச சபையின் உப தவிசாளருமான எஸ்.சஜீவன் ஜப்பான் பிரதிநிதிக்கு மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

நாட்டில் தற்போது நல்லாட்சி அரசாங்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தமிழ் மக்கள் அச்சமின்றி வாழ்கின்றனர். தமிழ் மக்களின் நிலங்கள் விடுவிக்கப்பட்டு அவர்கள் மீள்குடியேற்றபடுகின்றனர் என்றெல்லாம் கூறப்படுகின்றது.

ஆனால் மீள்குடியேற்றப்பட்ட மக்கள் எவ்வித உதவி திட்டங்களும் இன்றி முகாம்களில் தவிக்க விடப்பட்டுள்ளனர். முகாம்களில் தங்கியுள்ள மக்கள் ஒரு வேளை உணவின்றி கஷ்டப்படும் நிலையும் வலி.வடக்கில் காணப்படுகின்றது. புதிய அரசினால் விடுவிக்கப்பட்ட காணிகளும் பற்றைகள் நிறைந்த வளமற்ற இடங்களாகவே காணப்படுகின்றது.

வளம் நிறைந்த விவசாய நிலங்கள் மீன்பிடி துறைமுகங்கள் என்பவற்றை இராணுவம் தற்போதும் தனது கைப்பிடியில் வைத் துள்ளது. இதனால் மக்கள் தமது வருமானத்தை ஈட்டிக்கொள்வதற்கு பாரம்பரியமான தமது தொழில் முறைகளில் ஈடுபட முடியாத நிலையில் காணப்படுகின்றனர்.

போக்குவரத்து, கல்வி, மின்சாரம் உட்பட அடிப்படை வசதிகள் எவையும் கிடைக்காத நிலையிலேயே மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

கடந்த கால அரசும் தற்போது ஆட்சிக்கு வந்துள்ள புதிய அரசும் வேறுபட்ட தாக எமக்கு தெரியவில்லை. கடந்த கால அரசு மக்களை நேரடியாக துன்புறுத்தியது.

ஆட்சிக்கு வந்துள்ள புதிய அரசு மக்களை மறைமுகமாக துன்புறுத்துகின்றது. எமக்கு சர்வதேச தலையீட்டின் மூலமே ஒரு தீர்வு கிடைக்க முடியும் அதனையே நாமும் எமது மக்களும் எதிர்பார்கின்றனர் என ஜப்பானிய அரசியல் அதிகாரிக்கு சுட்டிக் காட்டப்பட்டது.

இதே வேளை மீள்குடியமர்த் தப்பட்ட மக்களுக்கு அரசின் உதவித்திட்டங்கள் கிடைக்கப் பெறுகின்றதா? மக்களின் காணிகள் அனைத்தும் விடுவிக்கப்பட்டதா? ஆட்சிக்கு வந்துள்ள புதிய அரசு மக்களுக்கு என்ன செய்தது? போன்ற விடயங்களையும் மக்களிடம் அவர் நேரடியாக கேட்டு சென்றார். (எ-4)

**விற்பனைக்கு**

சுன்னாகம் முனியப்பர் கோவிலுக்கு முன்பாக கடையும், அலுமினிய அலுமாரியும் விற்பனைக்குண்டு. (1569)

தொடர்புகளுக்கு 0217905414

**பணியாள் தேவை**

வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை நிறுவனத்தில் கடமையாற்றுவதற்கு பணியாட்கள் தேவை. 29/08/2015 (சனிக்கிழமை) காலை 9.00 மணிமுதல் மாலை 5 மணி வரை நேரில் வரவும். (1607)

அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
இல, 01 பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம். 0212226113

**Student Success Centre**

Certificate in English

★ 3 மாத கால கற்கை நெறி
★ முதல் 2 மாதங்களும் ஆங்கிலத்தில் உள்ள சகல காலங்களும் அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும்.
★ 3வது மாதம் Report, e-mail, letters எழுதுவது தொடர்பாக பயிற்சி அளிக்கப்படும்.
★ மேலதிக பயிற்சிக்காக Audio, Video CD என்பன வழங்கப்படும். (C-1936)

தொடர்புகளுக்கு
Student Success Centre,
320, Main Street, Jaffna.
021-492 6655,077-6169470
077-0080 075

Facebook
https://www.facebook.com/englishforyou.janagan

O/L உடன் 6 மாதங்களில்
வெளிநாட்டு விசா
& தொழில் ஏற்பாட்டுடன்
Business & Hotel Management
புதிய பிரிவு ஆரம்பம் - செவ்வாய், வியாழன் 10.00 am
Sikaram Institute of Hospitality & English
இல.275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
Call 077 [illegible] 798

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.08.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org